REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN

2022 ஜூன் 15 புதன்கிழமை

1932 - 2022

வரு. 90 இல. 139 | Wednesday 15, June, 2022 | 20 பக்கங்கள் | 40/-

**நான் அப்படி எதுவும் கூறவில்லை:**

## ஹர்ஷ MPயின் கூற்றுக்கு மொஹமட் நஷீட் மறுப்பு



பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவின் குற்றச்சாட்டை மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் மறுத்துள்ளார். பல நாடுகள் இலங்கைக்கு உதவ தயாராக இருப்பதாகவும் அதற்கான உதவிகள் கிடைக்கும் என்று தான்

06

## எரிபொருள் - எரிவாயுவுக்கு தேவையான டொலர்களை வழங்க பிரதமர் இணக்கம்

**தொழில்நுட்ப கோளாறால் வங்கிச்சேவைகளில் கட்டணம் செலுத்த தாமதம்**



எரிபொருள் மற்றும் எரிவாயு என்பவற்றுக்கு அவசியமான டொலரை வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இணங்கியுள்ளார்.

வங்கிகளுக்கு இடையில் நிலவிய தொழிநுட்ப கோளாறு காரணமாக கட்டணங்களை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த தினங்களில் நாட்டின் பல பகுதிகளில் எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

சில இடங்களில் அமைதியின்மை சம்பவங்களும் பதிவாகியிருந்தன.

ஒருகொடவத்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு

06

## மாணவர்களுக்காக 50 'சிசு செரிய' பஸ் சேவை இன்று முதல்

**அமைச்சர் பந்துல தெரிவிப்பு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



கொழும்பிற்குள் பிரவேசிக்கும் அனைத்து வெளி பிரதேச வீதிகளையும் உள்ளடக்கும் வகையில் பாடசாலை மாணவர்களுக்கான

06

**பலாலி - திருச்சி; பாண்டிச்சேரி - காங்கேசன்துறை**

## யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்கும் இடையே கப்பல், விமான சேவைகள்

**உடன் ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி - டக்ளஸின் முயற்சி வெற்றி**



யாழ்ப்பாணத்துக்கும் பாண்டிச்சேரிக்குமிடையே பயணிகள் மற்றும் சரக்கு படகுகளை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கும், பலாலி திருச்சி விமான நிலையங்களுக்கிடையிலான விமான சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக சாதகமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர்

06

**07 தினங்களுக்கு பின்னர் கப்பலுக்கான 2.5 பில். டொலர் கட்டணம் செலுத்தப்பட்டது**

# 3,900 மெ.தொன் Gas இறக்கும் பணி ஆரம்பம்

**11 தினங்களுக்கு பின் இன்று முதல் மக்களுக்கு Gas விநியோகம்**

*லோரன்ஸ் செல்வநாயகம்*

ஒரு வார காலமாக கடலில் நங்கூரமிடப்பட்டிருந்த சமையல் எரிவாயு கப்பலுக்கு நேற்று உரிய தொகை வழங்கப்பட்டதால் இன்று முதல் நாடளாவிய ரீதியில் லிற்றோ கேஸ் விநியோகம் முன்னெடுக்கப்பட இருப்பதாக லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது.

ஒரு வார காலமாக விடுவிக்கப்படாதிருந்த 3,900 மெற்றிக் தொன் சமையல் எரிவாயுவை இறக்கும் பணிகள் நேற்று மேற்கொள்ளப்பட்டது. இதனால் தடைப்பட்டிருந்த சமையல் எரிவாயு விநியோகம் இன்று நண்பகல் முதல் ஆரம்பிக்கப்படுமென தெரிவித்துள்ளது.

டொலர் நெருக்கடி காரணமாக 2.5 மில்லியன் டொலரை செலுத்த முடியாததால் கடந்த ஒருவார காலமாக எரிவாயு தாங்கிய கப்பல் கெரவலப்பிட்டிய – தல்தியாவத்த கடலில் நங்கூரமிட்டிருந்தது. உரிய தொகை செலுத்தப்பட்டதால் நேற்று நண்பகல் சமையல் எரிவாயு இறக்கும் பணிகள் நடைபெற்றதாக லிற்றோ நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதற்கான பணத்தை பெற்றுக் கொடுக்க பிரதமர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

கடந்த 7 ஆம் திகதி நாட்டை வந்தடைந்த குறித்த கப்பலுக்கு தாமதக் கட்டணமாக சுமார் 2 கோடி ரூபா பணமும் செலுத்தப்பட்டுள்ளது.

டொலர் நெருக்கடி

**கப்பலுக்கான தாமதக் கட்டணம் இரண்டு கோடி ரூபாவும் அபராதமாக செலுத்தப்பட்டது**

06



இலங்கை இராணுவத்தின் பிரதிப் பிரதானியாக நியமனம் பெற்ற மேஜர் ஜெனரல் ஜகத் கொடித்துவக்கு நேற்று வெள்ளவத்தை ஐஸ்வர்ய லட்சுமி அம்பாள் ஆலய பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டார். அகில இலங்கை கம்பன் கழக தலைவர் கம்பவாரிதி இ. ஜெயராஜ், அரசியல் பிரமுகர் கந்தசாமி கருணாகரன் உட்பட பலர் இந்த வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.

**பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு**

## ஜனாதிபதி பொது மன்னிப்பில் 173 கைதிகள் நேற்று விடுதலை

03

**பிரதமர் மோடி குறித்த அதிகாரியின் கருத்து:**

## அதிருப்தியடைந்துள்ளதாக அதானி குழுமம் அறிவிப்பு



பிரதமர் நரேந்திர மோடியின் அழுத்தத்தின் பேரில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட்டதாக, இலங்கை அதிகாரி ஒருவர் கூறியதை அடுத்து, இலங்கையின் எரிசக்தி திட்டம் தொடர்பான சர்ச்சை தொடர்பில் தாம் அதிருப்தி அடைந்துள்ளதாக அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் முதலீடு செய்வதில் தமது நோக்கம் மதிப்புமிக்க அண்டை நாடுகளின் தேவைகளை நிவர்த்தி செய்வதாகும் என்று அதானி குழுமம் குறிப்பிட்டுள்ளது.

06

**2023ஆம் கல்வி ஆண்டுக்கான**

## முதலாம் தர மாணவர்களை உள்வாங்க புதிய சுற்றறிக்கை

**திருத்தங்களுக்கு அமைச்சரவை அனுமதி**



புதிய மாணவர்களை 2023 ஆம் ஆண்டு தொடக்கம் முதலாம் தரத்துக்கு உள்வாங்குவதற்கான திருத்தப்பட்ட புதிய சுற்றறிக்கையை கல்வி அமைச்சு தயாரித்துள்ளதுடன், அதில் திருத்தப்பட்ட விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளை

06

**ஐந்து வருடங்களுக்கு சம்பளமற்ற வகையில் சலுகை வழங்க தீர்மானம்:**

## வெளிநாட்டில் தொழில் செய்ய அரச ஊழியர்களுக்கு விடுமுறை

**சட்டத் திருத்தங்களுடன் சுற்றறிக்கை தயாரிக்க அமைச்சரவை அனுமதி**

*ஷம்ஸ் பாஹிம்*

அரசாங்க ஊழியர்களுக்கு 05 வருடங்களுக்கு சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையை துரிதமாக

06

**21 ஆவது திருத்தச் சட்டமூலம்:**

## அமைச்சரவையில் மீண்டும் ஒத்திவைப்பு



அரசியலமைப்பின் 21வது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதை அமைச்சரவை மேலும் ஒத்திவைத்துள்ளது. அரசியலமைப்பின் 21வது திருத்தச் சட்டம் அரசியல் கட்சித் தலைவர்களை மேலும் தெளிவுபடுத்த வேண்டியதன் காரணமாக நேற்று முன்தினம் (13) அமைச்சரவையில் நிறைவேற்றப்படவில்லை என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ

06

## பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்தால் பாணின் விலையும் ரூ.1500வுக்கு அதிகரிக்கும்

பணவீக்கம் தொடர்ந்தும் அதிகரித்தால், எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் ஒரு இறாத்தல் பாணின் விலை 1,500 ரூபாவுக்கும் மேல் அதிகரிக்கும் என தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போது 100 ரூபாவில் முச்சக்கர வண்டியில் செல்லும் பயணத்திற்கு டிசம்பர் மாதம்

06

**போக்குவரத்து நெரிசலை குறைக்க புதிய திட்டம்:**

## கொழும்பில் இன்று அறிமுகமாகும் Park and Ride பேருந்து சேவை

**- அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு**



கொழும்பில் இன்று முதல் தினமும் Park and ride பேருந்து சேவையை நடத்துவதற்கு போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கமைய காலை 6 மணி முதல்

06

**அத்தியாவசிய சேவைகள் உள்ளடங்கா வகையில்**

## அரச ஊழியருக்கு இவ்வாரம் முதல் வெள்ளிக்கிழமைகளில் விடுமுறை

*ஷம்ஸ் பாஹிம்*




**நீர் வழங்கல், சுகாதாரம், மின்சாரம், கல்வி, பாதுகாப்பு, போக்குவரத்து சேவைகள் உட்பட இன்னும் சில உள்ளடங்காது**

அரசாங்க ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. எவ்வாறாயினும், நீர் விநியோகம், மின்சாரம், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து பாதுகாப்புப் பிரிவு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் இதில் உள்ளடக்கப்படவில்லையென

06

## பிரான்ஸில் சாதித்த இலங்கை மாணவியின் நெகிழ்ச்சியான செயல்!



பிரான்ஸில் கணிதபாடத்தில் தேசியமட்டத்திலான பரீட்சையில் முதலாம் இடத்தை பெற்று சித்தியடைந்து மேகா சந்திரகுமார் என்ற இலங்கையை பூர்வீகமாக கொண்ட மாணவி பெருமை சேர்த்துள்ளார்.

அம் மாணவியை கௌரவிக்கும் நோக்கில் கடந்த வியாழக்கிழமை (09) அன்று பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல்

06



## அறுபது புதுப்பிக்கத்தக்க சக்திவலு திட்டங்களுக்கு விரைவில் அனுமதி

02 வாரங்களில் ஒப்பந்தம் கைச்சாத்து

03



## கண்டியில் காணாமற்போன சிறுமி யாழில் கண்டுபிடிப்பு

பஸ் தரிப்பிடத்தில் நிற்கையில் மீட்பு

03

## புதிய எதிர்க்கட்சி அல்லது புதிய அரசாங்கம் விரைவில்

**விரும்பினால் சஜித்தும் இணையலாம்**

**- சம்பிக்க**



இலங்கை அரசியலில் புதிய எதிர்க்கட்சி அல்லது புதிய அரசாங்கமொன்று விரைவில் உருவாகும் என சம்பிக்க ரணவக்க எதிர்வு கூறியுள்ளார்.

பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் 43ம் படையணி முக்கியஸ்தர்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு இடையில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று திங்கட்கிழமை மாலை தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெற்றிருந்தது.

06

## அழிந்துவரும் அரியவகை நட்சத்திர ஆமை ஒன்று

**கிளிநொச்சி வயலில் கண்டுபிடிப்பு**



கிளிநொச்சியில் அரிய வகை நட்சத்திர ஆமையொன்று மீட்கப்பட்டு வன ஜீவராசிகள் திணைக்களத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயில்வாகனபுரம் பகுதியில் விவசாயி ஒருவர் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே அந்த ஆமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, இந்த ஆமை இனமானது அருகிவரும் நட்சத்திர ஆமை வகையை சேர்ந்தது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

06

**அம்பலாந்தோட்டையில் நீராடச்சென்ற**

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கடலில் மூழ்கி மாயம்



அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் கடலுக்கு நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகன் மற்றும் மருமகன் ஆகியோர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அம்பலாந்தோட்டை, வெலிபதன்வில பகுதியிலுள்ள விகாரை ஒன்றுக்கு சென்ற குழுவினர் அங்கிருந்து கடலுக்கு நீராடச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதில் பெண் ஒருவரும்

06

## துப்பாக்கி சூட்டில் இளைஞரொருவர் பலி

**வத்தளையில் நேற்று சம்பவம்**



வத்தளை எலக்கந்த பகுதியில் நேற்று இளைஞர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டு கொல்லப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த நபரொருவர் அந்த இளைஞன் மீது துப்பாக்கி சூடு நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் காயமடைந்த இளைஞர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளதாக

06

## புதுமண தம்பதியருக்கு பரிசாக பெற்றோல்

**இலங்கையில் வியப்புமிகு சம்பவம் பதிவு**



திருமண வைபவம் ஒன்றில், நண்பர்கள் மணமக்களுக்கு பெற்றோலை பரிசாக வழங்கிய சம்பவம் அங்கிருந்தவர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

அந்த புகைப்படம்

06

# சர்வதேச செய்திகள்

### "கணவரை கொல்வது எப்படி"

## கணவரை கொன்ற எழுத்தாளருக்கு சிறை



"கணவரைக் கொல்வது எப்படி" என்று புத்தகம் எழுதிய அமெரிக்க எழுத்தாளர் நான்சி கிரம்ப்டன் பிரோபி தனது கணவரை சுட்டுக் கொன்ற குற்றத்திற்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார்.

71 வயதான பிரோபி 25 ஆண்டுகளில் நன்னடத்தைப் பிணையில் செல்ல தகுதி பெறுவார் என்று ஒரேகன் மாநிலத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பில் நீதிபதி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஒரு மாதமாக நீடித்த பிரோபி மீதான வழக்கு விசாரணையில், கணவனின் ஆயுள் காப்புறுதியை பெறுவதற்காக அவரை கொலை செய்யத் திட்டம் தீட்டியது நிரூபிக்கப்பட்டது.

அவரது கணவரான டானியெல் பிரோபி, 2018 ஆம் ஆண்டு அவர் பணியாற்றும் தற்போது செயற்படாத சமையல் நிறுவனம் ஒன்றின் வகுப்பறையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த நேரம் அவரது மனைவி அங்கிருந்து செல்வது சி.சி.டி.வி கெமாரா மூலம் உறுதி செய்யப்பட்டது.

## உக்ரைன் நகருக்கான கடைசி பாலத்தையும் ரஷ்யா தகர்ப்பு



### பொதுமக்கள் சிக்கித் தவிப்பு

கிழக்கு உக்ரைனின் செவரோடோனெட்ஸ்க் நகரில் இருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்கான அனைத்து பாதைகளையும் ரஷ்யா துண்டித்துள்ளது. உக்ரைனின் கட்டுப்பாட்டில் இருக்கும் நகர் ஒன்றுடன் அந்த நகரை தொடர்புபடுத்தும் கடைசி பாலமும் தகர்க்கப்பட்டதை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. கிழக்கு டொன்பாஸ் பிராந்தியத்தில் ரஷ்யா வெற்றி ஒன்றை நோக்கி முன்னேறி வரும் நிலையில் செவரோடோனெட்ஸ்க் நகர் அந்த மோதலின் மையப் புள்ளியாக மாறியுள்ளது. இந்த நகரில் 70 வீதமான பகுதி எதிரிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாக பிராந்திய ஆளுநர் செர்ஹிய் ஹெய்டெய் சமூக ஊடகத்தில் கடந்த திங்கட்கிழமை குறிப்பிட்டிருந்தார். அந்த நகரை தக்கவைத்திருக்க உக்ரைனியப் படை பெரும் நெருக்கடியை சந்தித்தபோதும் தொடர்ந்து கட்டுப்பாட்டை நிலைநிறுத்தி இருப்பதாக ஹெய்டெய் விபரித்துள்ளார்.

இந்நிலையில் அந்த நகரின் கடைசி பாலமும் தகர்க்கப்பட்டிருப்பதால் அங்கு எஞ்சியிருக்கும் பொதுமக்கள் நகருக்குள் சிக்கிவிட்டதாகவும், மனிதாபிமான விநியோகங்களை வழங்குவது சாத்தியமில்லாமல் ஆகியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் செவரோடோனெட்ஸ்க் நகரில் இருக்கும் உக்ரைனிய துருப்புகள் ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் சரணடைய வேண்டும் அல்லது உயிரிழக்க நேரிடும் என்று ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளின் பேச்சாளர் எடுவர் பசுரின் ரஷ்யாவின் ஆர்.ஐ.ஏ செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

நூற்றுக்கணக்கான பொதுமக்கள் தஞ்சமடைந்திருக்கும் நகரில் உள்ள அசோட் இரசாயன ஆலை மீது ரஷ்யா பீரங்கி குண்டுகளை வீசி வருவதாக ஹெய்டெய் தெரிவித்துள்ளார்.

## சுற்றுச்சூழலைப் பாதுகாக்க இந்திய பிரதமர் வலியுறுத்து



காலநிலை மாற்றத்தில் இந்தியாவின் வகிபாகம் மிகக் குறைவு என்றாலும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக சர்வதேச சமூகத்துடன் இணைந்து நீண்ட காலப் பார்வையுடன் செயல்பட்டு வருகின்றோம் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இயற்கையைப் பாதுகாப்பதற்கான நாட்டின் முயற்சிகள் பன்முகத்தன்மை கொண்டவை என்றும் கடந்த எட்டு ஆண்டுகளில் தமது அரசாங்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பை அனைத்து முக்கிய திட்டங்களிலும் மையமாகக் கொண்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈஷா அறக்கட்டளை நிறுவனத்தின் சத்குரு, கடந்த மார்ச் மாதம் லண்டனில் ஆரம்பித்த உலகளாவிய "மண்ணைப் பாதுகாப்போம்" இயக்கத்தின் 75 ஆவது நாளைக் குறிக்கும் வகையில் விக்யான் பவனில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## கியூப போராட்டக்காரருக்கு 25 ஆண்டுகள் வரை சிறை



கியூபாவில் கடந்த ஆண்டு அரிதாக இடம்பெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பில் 381 பேருக்கு தண்டனை விதிக்கப்பட்டிருப்பதோடு இதில் சிலருக்கு 25 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தேசத்துரோகம், பொது ஒழுங்கை சீர்குலைத்தது, தாக்குதல் அல்லது கொள்ளை குற்றச்சாட்டுகளுக்காக 297 பேருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாக சட்டாமா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதில் சிறிய எண்ணிக்கையானவர்களுக்கு சமூக சேவையில் ஈடுபடுவதற்கு தேர்வு வழங்கப்பட்டுள்ளது.

உணவு விலை அதிகரிப்பு, மருந்துகள் தட்டுப்பாடு மற்றும் மோசமான சமூக பொருளாதார நிலைக்கு எதிராக தலைநகர் ஹவானா மற்றும் ஏனைய நகரங்களில் கடந்த 2021 ஜூலையில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இது கடந்த பல தசாப்தங்களில் கியூபாவில் இடம்பெற்ற மிகப்பெரிய ஆர்ப்பட்டமாக இருந்தது.

அனுமதியற்ற ஒன்றுகூடல்களுக்கு தடையிருக்கும் கியூபாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 1,000க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## இலோன் மஸ்க் டுவிட்டர் ஊழியர்களுடன் சந்திப்பு



உலகின் பெரும் செல்வந்தர் இலோன் மஸ்க் டுவிட்டர் நிறுவனத்தின் ஊழியர்களுக்கான சந்திப்பில் முதல்முறை கலந்து கொள்ளவுள்ளார்.

நாளை வியாழக்கிழமையன்று இடம்பெறவுள்ள சந்திப்பில் அவரிடம் ஊழியர்கள் கேட்கும் கேள்விகளுக்குத் மஸ்க் பதிலளிப்பார்.

இந்த நிகழ்வு பற்றி டுவிட்டரின் தலைமை நிறைவேற்று அதிகாரி பராக் அக்ரவால் மின்னஞ்சல் மூலம் ஊழியர்களுக்கு கடந்த திங்கட்கிழமை அறிவுறுத்தி இருந்தார்.

இம்மாத ஆரம்பத்தில் டுவிட்டர் அதன் தளத்தில் இருக்கும் போலிக் கணக்குகளைப் பற்றித் தகவல் வழங்காவிட்டால் நிறுவனத்தை வாங்கும் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் என்று மஸ்க் எச்சரித்திருந்தார்.

அவர் 44 பில்லியன் டொலர் பணம் கொடுத்து அந்த நிறுவனத்தைப் பெற்றிருப்பதையடுத்து, முதல் முறையாக ஊழியர்களுக்கான கேள்வி–பதில் சந்திப்பில் கலந்து கொள்வார் என்று கூறப்படுகிறது.

## சவூதியில் கொரோனா கட்டுப்பாட்டில் தளர்வு



ஹஜ் கடமை அடுத்த மாதம் இடம்பெறவுள்ள நிலையில் கொரோனா தொற்றுக்கு எதிரான கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்தி இருக்கும் சவூதி அரேபியா அதிகம் மூடப்பட்ட இடங்களில் முகக்கவசம் கட்டாயம் இல்லை என்று அறிவித்துள்ளது.

வருடாந்த ஹஜ் கடமைக்காக சுமார் 850,000 யாத்திரிகர்களை வரவேற்க சவூதி எதிர்பார்த்திருக்கும் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

எனினும் புனித கஃபாவை சூழவிருக்கும் மக்கா பெரிய பள்ளிவாசல் மற்றும் மதீனாவில் உள்ள மஸ்ஜிதுன் நபவி பள்ளிவாசலுக்குள் முகக்கவசம் தொடர்ந்து கட்டாயமாக உள்ளது என்று சவூதியின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனம் உள்துறை அமைச்சை மேற்கோள்காட்டி கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு அப்பால் உள்ள மூடிய இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயம் இல்லை என்றபோதும் கட்டட உரிமையாளர் விரும்பினால் அணிவதற்கு வலியுறுத்தலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## புர்கினா பாசோ கிராமத்தில் தாக்குதல்: ஐம்பது பேர் பலி




வடக்கு புர்கினா பாசோவில் உள்ள கிராமம் ஒன்றில் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அரச பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

சேனோ மாகாணத்தின் செய்டென்கா பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இந்தப் பகுதி அல் கொய்தா மற்றும் இஸ்லாமிய அரசு குழுவினர் இயங்கும் பகுதியின் எல்லையில் அமைந்துள்ளது.

இராணுவத்தால் இதுவரை 50 சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்றும் அரச பேச்சாளர் லியோனல் பில்கோ தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தத் தாக்குதலில் குறைந்தது 100 பேர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருப்பதோடு இதில் சுமார் 165 பேர் பலியாகியுள்ளதாக உள்ளூர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அந்த கிராமத்தில் இருந்து வெளியேறிய சுமார் 3,000 பேர் அண்டைய நகரங்களில் தஞ்சமடைந்திருப்பதாக பிராந்தியத்தில் உள்ள மனிதாபிமான அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இந்தத் தாக்குதலுக்கு கண்டனம் வெளியிட்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபை குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துமாறு அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்தது.

செய்டென்கா பகுதியில் கடந்த வாரம் கிளர்ச்சியாளர்கள் மற்றும் அரச படைகளுக்கு இடையே கடும் மோதல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் புர்கினா பாசோ மற்றும் அண்டை நாடுகளான மாலி மற்றும் நைகரில் இடம்பெற்ற இஸ்லாமியவாத குழுக்களுடன் தொடர்புபட்ட வன்முறைகளில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதோடு மில்லியன் கணக்கானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புகலிடம் தேடி வருகின்ற மக்களை ருவண்டாவுக்கு அனுப்பும் பிரிட்டன்



புகலிடம் தேடி பிரிட்டனுக்கு வந்தோரை முதல்முறையாக அந்நாட்டு அரசாங்கம் ருவாண்டாவுக்கு அனுப்பவுள்ளது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தொடுக்கப்பட்ட மேல்முறையீட்டை நீதிமன்றம் நிராகரித்தது.

அந்த விமானம் லண்டனின் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு ருவாண்டாவின் தலைநகர் கிகாலியில் தரையிறங்க இருந்தது.

ஆனால் மேல்முறையீடு செய்த ஓர் அமைப்பு, ருவாண்டாவுக்கு அனுப்பப்படவிருந்த 31 பேரில் 23 பேரின் விமானச் சீட்டுகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக டுவிட்டரில் தெரிவித்தது.


நாடு கடத்தப்படவிருந்தவர்கள் அல்பேனியா, ஈராக், ஈரான், சிரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

அந்தச் சர்ச்சைக்குரிய திட்டம் சட்டத்திற்கு உட்பட்டதா என்பதை அடுத்த மாதம் நீதிபதிகள் நிர்ணயிக்கும் வரை அது நடப்புக்கு வரக்கூடாது என்பது மேல்முறையீடு செய்தவர்களின் வாதமாக இருந்தது.

எனினும் பிரான்சிலிருந்து ஆபத்தான வழிகளில் கடலைக் கடந்து பிரிட்டனுக்கு வருவோரைத் தடுக்க அந்தத் திட்டம் தேவை என பிரிட்டனின் உள்துறை அமைச்சர் பிரித்தி பட்டேலும் பிரதமர் போரிஸ் ஜான்சனும் கூறினர். அந்தத் திட்டத்தின் கீழ் சட்டவிரோதமாகப் பிரிட்டனுக்கு வருவோர் கிகாலிக்கு அனுப்பப்படுவர்.

உண்மையாகவே புகலிடம் தேடுவோர் பிரான்சிலேயே இருக்க வேண்டும் என்கிறது பிரிட்டிஷ் அரசாங்கம்.

## வட்ஸ்அப் வதந்தியால் மெக்சிகோ அரசியல்வாதி அடித்துக் கொலை



குழந்தை ஒன்றை கடத்தியதாக சமூக ஊடகத்தில் வதந்தி பரவியதை அடுத்து மெக்சிகோ நாட்டு அரசியல் ஆலோசகர் ஒருவர் கும்பல் ஒன்றால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

மத்திய மாநிலமான புவெப்லாவில் 31 வயதான டானியல் பிகாசோ, சுமார் 200 பேர் கொண்ட கூட்டத்தால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். பபட்லசோகோ நகருக்கு வந்த அவரை சுற்றிவளைத்திருக்கும் கும்பல் அவரை கொலை செய்த பின் உள்ளூர் பயிர் நிலம் ஒன்றுக்கு இழுத்துச் சென்று அவரது உடலுக்கு தீ வைத்துள்ளது. இது ஒரு காட்டு மிராண்டிச் செயல் என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உள்ளூர் வட்ஸ்அப் குழு ஒன்றிலேயே அவர் குழந்தை ஒன்றை கடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பிகாசோ கடந்த மார்ச் மாதம் வரை மெக்சிகோ பாராளுமன்றத்தில் ஆலோசகர் ஒருவராக செயற்பட்டுள்ளார்.

கும்பல்களால் சட்டத்தை கையில் எடுக்கும் இவ்வாறான தாக்குதல்கள் மெக்சிகோவில் பொதுவான ஒன்றாக உள்ளது. இதே புவெப்லா மாநிலத்தில் 2019 ஆம் ஆண்டு ஏழு பேர் அடித்து உயிருடன் தீ வைத்து கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜுன் 15 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.32
லுஹர் - 12.12
அஸர் - 03.39
மஃரிப் - 06.27
இஷா - 07.44

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் ஆனி 01
ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 09.30 - 10.30வரை
யோகம்: மரணஅமிர்த யோகம்
திதி: சூன்ய

**இராசி பலன்கள்**
மேஷம் - பொறுமை
ரிஷபம் - வெற்றி
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - செலவு
மகரம் - பாராட்டு
கும்பம் - மறதி
மீனம் - சுகம்
கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 250 பேர் இந்த வருடம் கைது

## வெளிநாடு அனுப்புவதாக கூறி பணம் பறிக்கும் மோசடி கும்பல் குறித்து தகவல்

பொருளாதார நெருக்கடி காரணமாகவே கடல் மார்க்கமாக நாட்டை விட்டு வெளியேறும் முயற்சியில் சட்டவிரோத இடப்பெயர்வாளர்கள் முயற்சிப்பதாக அறிய வருகிறது. எவ்வாறாயினும், குறித்த நபர்களை வேறு நாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி அவர்களிடம் இருந்து பணம் பறிக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட மோசடி ஒன்று இடம்பெற்றுள்ளதாக பாதுகாப்புப் படையினர் தற்போது அம்பலப்படுத்தியுள்ளனர்.

கடந்த சில நாட்களாக இலங்கையர்கள் சிலர் படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாக செல்ல முயற்சிப்பதாக தகவல் வெளியாகியிருந்தது.

இவர்களில் பெரும்பாலானோர் கடற்படை உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், நாட்டில் நிலவும் பிரச்சினை காரணமாக நாட்டை விட்டு வெளியேற முயற்சித்துள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயன்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட கிட்டத்தட்ட 250 பேர் கடற்படை நடவடிக்கைகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலாபம், நீர்கொழும்பு, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் இந்த மனித கடத்தல் இடம்பெற்று வருவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

06

# கப்பம் பெற கடத்தப்பட்ட பெண் பொலிஸாரால் மீட்பு

## சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டனர்

**ஓமந்தை விஷேட, வவுனியா விசேட நிருபர்கள்**

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் கடத்திச் செல்லப்பட்டு கப்பம் பெறுவதற்காக வீடொன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பெண்ணொருவரை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கடத்தல் சம்பவம் தொடர்பில் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியா வாரியகுத்தூர் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இப்பெண் கடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கடத்தப்பட்ட பெண்ணை கப்பம் கோரி வீட்டில் அடைத்து வைத்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் கடத்தப்பட்ட பெண்ணின் மகளுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரை விடுவிக்க 5 இலட்சம் ரூபா கப்பமாக கோரியுள்ளனர். பணத்தை கொடுக்காவிட்டால் தாயை சுட்டுக் கொன்று விடுவோமென சந்தேக நபர்கள் மிரட்டியுள்ளனர்.

06

**பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு**

# ஜனாதிபதி பொது மன்னிப்பில் 173 கைதிகள் நேற்று விடுதலை

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட விசேட பொது மன்னிப்பின் கீழ் 173 கைதிகள் நேற்று (14) விடுதலை செய்யப்பட்டனர்.

அரசிலமைப்புச் சட்டத்தின் 34ஆவது பிரிவின்படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கிணங்க இந்த விசேட பொதுமன்னிப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இதன்படி, அபராதம் செலுத்தாததால் 141 கைதிகளும், ஆண்டுக்கு 14 நாட்களாக சிறை தண்டனை குறைக்கப்பட்டதால் 32 கைதிகளும் விடுவிக்கப்பட்டனர். அதிகளவான கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்தே விடுவிக்கப்பட்டனர்.

வெலிக்கடையிலிருந்து 23 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். குருவிட்ட 17, களுத்துறை 13, வாரியபொல, போகம்பர மற்றும் அனுராதபுரம் ஆகிய சிறைகளிலிருந்து முறையே தலா 17 கைதிகள் வீதம் விடுவிக்கப்பட்டனர்.

மஹர, நீர்கொழும்பு, வீரவில, கொழும்பு மெகசின் சிறைச்சாலை, தல்தனை, வடரெக்க, பதுளை, மாத்தறை, அங்குனகொலபெலஸ்ஸ, பொலன்னறுவை, கேகாலை, மட்டக்களப்பு, மொனராகலை, பல்லன்சேனை, வவுனியா, யாழ்ப்பாணம், காலி, பல்லேகல மற்றும் திருகோணமலை சிறைச்சாலைகளில் இருந்தும் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

பொசன் போயாவை முன்னிட்டு ஒவ்வொரு சிறைச்சாலையிலும் உள்ள கைதிகளுக்கு நல்லொழுக்க போதனைகள் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

**IMFஉடனான பேச்சுவார்த்தை நிறைவுற்றதும்**

# இலங்கைக்கு மேலும் உதவிகளை வழங்க அமெரிக்கா இணக்கம்

## அமெரிக்க இராஜாங்க செயலர் பிரதமரிடம் உறுதி




சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்த பின்னர் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கும் இலங்கையில் முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம்(13) மாலை அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அந்தனி பிளிங்கெனுடன் தொலைபேசியில் உரையாடினார். இதன்போதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளின் தற்போதைய நிலை குறித்து பிரதமர் இதன் போது அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அந்தனி பிளிங்கெனுக்கு விளக்கினார்.

அமெரிக்காவுடன் நெருக்கமாகச் செயற்படுவதற்கும் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கும் இலங்கை எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த பின்னர் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கும்

06

# புதுப்பிக்கத்தக்க சக்திவலு; 60 திட்டங்களுக்கு விரைவில் அனுமதி

## 02 வாரங்களில் ஒப்பந்தம் கைச்சாத்து

**ஷம்ஸ் பாஹிம்**



இலங்கை மின்சாரத் திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டதையடுத்து 2014 ஆம் ஆண்டு முதல் கடந்த 08 வருடங்களாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்களுக்கான அனுமதிப் பத்திரத்தை பெற முடியாத 60 திட்டங்களுக்கு எதிர்வரும் இரு வாரங்களுக்குள் அனுமதி வழங்கவும் அதற்கான ஒப்பந்தங்களை செய்துகொள்ளவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர முடிவு செய்துள்ளார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கரவுக்கும் புதுப்பிக்கதக்க வலுசக்தி திட்ட உரிமையாளர்களுக்குமிடையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரத் திருத்தச் சட்ட மூலத்திலுள்ள சட்டத்தடைகள் நீங்கியுள்ளதால் கொள்முதல் ஒப்பந்தங்களை இரண்டு வாரங்களுக்குள் செய்து முடிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் இதன்போது உத்தரவிட்டார்.

இலங்கை மின்சாரத் திருத்தச் சட்ட மூலம்

06

**06 நாட்களுக்கு முன்னர்**

# கண்டியில் காணாமற்போன சிறுமி யாழில் கண்டுபிடிப்பு

## பஸ் தரிப்பிடத்தில் நிற்கையில் மீட்பு

**கம்பளை நிருபர்**



கலஹா ஹயிட் தோட்டத்தில் காணாமல் போன 14 வயது சிறுமி, 06 நாட்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இராசலிங்கம் பிரியதர்சினி என்ற 14 வயது சிறுமியே இவ்வாறு யாழ். பஸ் தரிப்பிடத்திலிருந்து 11ஆம் திகதி காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

சிறுமி காணாமல் போனமை தொடர்பில், ஊடகங்களில் வெளியான செய்தியை அவதானித்த வர்த்தகர் ஒருவர், சிறுமி பஸ் தரிப்பிடத்தில் இருப்பதை கண்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார். இதனையடுத்து சிறுமி பொலிஸாரினால் மீட்கப்பட்டு கலஹா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவரிடம் வாக்குமூலமும் பெறப்பட்டுள்ளது.

சிறுமி கண்டி வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இன்று நீதிமன்ற வைத்தியரிடம் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகவும் கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

11ஆம் திகதி காலை தான் யாழ்ப்பாணத்திலுள்ள தனது நண்பியைத் தேடிச் சென்றதாகவும், செல்லும் வழியில் தனது கைபேசி செயலிழந்தமையால் நண்பியுடன் தொடர்புகொள்ள முடியாமல் பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்ததாகவும் சிறுமி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

வீட்டாருடன் ஏற்பட்ட மனகசப்பால் தனது சில ஆடைகளை எடுத்துக்கொண்டு, 05ஆம் திகதி மாலை ஜன்னல் வழியாக வீட்டிலிருந்து வெளியே பாய்ந்து,

06

# சொத்துக்காக மாமியை எரித்து கொன்ற மருமகன்

## பொலிஸ் விசாரணையில் திடுக்கிடும் தகவல்



கொழும்பு, வத்தளை மஹாபாகே, கல் உடுபிட்ட பிரதேசத்தில் வீடொன்றில் எரித்துக் கொல்லப்பட்ட 74 வயதுடைய பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மரணத்தின் பிரதான சந்தேகநபர் அவரது ஒரே மகளின் கணவர் என மஹாபாகே பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த சம்பவம் கடந்த 7ஆம் திகதி அதிகாலை 1.00 மணிக்கும் 5.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்றுள்ளது. வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் அலுமாரியில் இருந்த பொருட்களை திருடியதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்த பெண்ணைக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றதாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் உயிரிழந்த பெண்ணின் மருமகனின் நடத்தை மற்றும் நடவடிக்கைகளில் பொலிஸாருக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் பேரில் அவரை

06

# கார் மோதி சைக்கிளில் பயணித்த நபர் பலி

## கொடிகாமத்தில் சம்பவம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



கொடிகாமம் நகரை அண்மித்த கொயிலாமனை சந்திப் பகுதியில் ஏ9,வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

ஏ9 வீதியில் சைக்கிளில் பயணித்த நபர் கிளை ஒழுங்கை ஒன்றின் ஊடாக பயணிக்க முற்பட்ட வேளையில்

06

# முற்போக்கு எழுத்தாளர் கு.சின்னப்ப பாரதி காலமானார்



தமிழ்நாடு, நாமக்கல்லைச் சேர்ந்த முற்போக்கு எழுத்தாளரான கு.சின்னப்ப பாரதி(88) உடல்நலக்குறைவால் திங்கட்கிழமை காலமானார்.

இவர், கம்யூனிஸ சித்தாந்தங்களை உள்ளடக்கி, தாகம், சங்கம், சர்க்கரை, பவளாயி, தலைமுறை மாற்றம், சுரங்கம், பாலை நில ரோஜா ஆகிய ஏழு நாவல்களை எழுதி உள்ளார்.

இதில் 'சுரங்கம்' நாவல் அவருக்கு புகழைப் பெற்றுத் தந்தது. நிலக்கரிச் சுரங்கங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் வாழ்வியலை அவர்களுடன் தங்கியிருந்து நாவலாக வடித்தார்.

சின்னப்ப பாரதியின் நாவல்கள் ஆங்கிலம், பிரெஞ்சு, டேனிஷ், சிங்களம், உஷ்பேக், மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்தி, குஜராத்தி, வங்காளம், மராட்டி, சமஸ்கிருதம் உள்ளிட்ட 13 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

பிரான்ஸ், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு இலக்கியப் பயணங்களுக்காக அவர் சென்று வந்துள்ளார். இலங்கை முற்போக்கு

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 255.52 | 266.96 |
| கனடியன் டொலர் | 280.59 | 291.86 |
| யூரோ | 383.09 | 393.95 |
| ஜப்பான் யென் | 2.7258 | 2.8339 |
| சிங்கப்பூர் டொலர் | 258.78 | 267.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 445.19 | 460.70 |
| சுவிஸ் பிராங்க் | 369.45 | 383.41 |
| அமெரிக்க டொலர் | 355.31 | 365.28 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 955.66 | கட்டார் ரியால் | 98.64 |
| குவைத் டினார் | 1,177.52 | சவூதி ரியால் | 96.05 |
| ஓமான் ரியால் | 935.83 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.09 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 01ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 14

### குறள் தரும் சிந்தனை



சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும்.

சிறுமைத்தனமற்ற இனியசொல் ஒருவனுக்கு அவன் வாழும் போதும், வாழ்ந்து மறைந்த பிறகும் புகழைத் தரக்கூடியதாகும்.

## அரிசி உள்ளிட்ட எந்த பொருளுக்கும் செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தலாகாது

இயற்கை வளங்கள் நிறைந்துள்ள இலங்கை, முகம் கொடுத்திருக்கும் பொருளாதார சவாலின் விளைவாக உணவு நெருக்கடியும் தோற்றம் பெறக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் செயற்கையான உணவு நெருக்கடியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுகிறதா? என்ற ஐயமும் நிலவவே செய்கின்றன. ஏனெனில் அதற்குரிய செயற்பாடுகள் இடம்பெறுவதே இவ்விதமான ஐயப்பாட்டை தோற்றுவித்து இருக்கின்றன.

அந்நியச் செலாவணி பற்றாக்குறையினால் நாட்டில் தோற்றும் பெற்றுள்ள பொருளாதார நெருக்கடியின் காரணமாக எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கலான அனைத்து பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றன. இதன் விளைவாக அனைத்து பொருட்களதும் விலைகள் அதிகரித்துள்ளன.

இவ்வாறான சூழலில் அரிசிக்கு செயற்கை தட்டுப்பட்டை ஏற்படுத்தும் நோக்கிலான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுவதாகவே தெரிவிக்கப்படுகின்றன. இதன் நிமித்தம் சில அரிசி ஆலை உரிமையாளர்களும், வர்த்தகர்களும் நெல்லையும் அரிசியையும் பதுக்கி வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அரிசிக்கு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் அதன் விலையை விரும்பிய படி அதிகரித்துக் கொள்ளலாம். அதன் ஊடாக உச்ச கொள்ளை இலாபம் அடைந்து கொள்வதை பிரதான நோக்காகக் கொண்டு தான் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இது எவ்விதத்திலும் நியாயப்படுத்தவோ ஏற்றுக்கொள்ளவோ கூடிய காரியம் அல்ல.

என்றாலும் அரிசிக்கு செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதனை விலையை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் அரிசியையும் நெல்லையும் பதுக்குவது தொடர்பில் தெரிவிக்கப்படுகின்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகளும் பொலிஸாரும் திடீர் சுற்றி வளைப்பு தேடுதல் நடவடிக்கைகளையும் ஆரம்பித்து இருக்கின்றனர். இந்தப் பின்புலத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த அரிசி மற்றும் நெல் என்பன ஆங்காங்கே பெருமளவில் கைப்பற்றப்பட்டுமுள்ளன. அத்துடன் சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடியின் காரணமாகப் பலவித தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் முகம் கொடுத்துள்ள மக்களை மேலும் நெருக்கடிகளுக்குள் தள்ளிவிடும் நடவடிக்கையாகவே இச்செயற்பாடு விளங்குகின்றது. இதனை சில அரிசி ஆலை உரிமையாளர்களும் வர்த்தகர்களும் அறிந்திருந்தும் மேற்கொள்வது பெரும் கவலைக்குரியதாக விளங்குகிறது. இச்செயற்பாடானது, மனிதாபிமானமற்ற நடவடிக்கையாக மாத்திரமல்லாமல் மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்த கதையாகவும் அமைந்திருக்கின்றது.

இவ்விதமான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அந்நடவடிக்கையானது, இவ்வாறான செயலுடன் சம்பந்தப்பட்டவரும் ஏனையவர்களும் இவ்விதமான செயற்பாடுகளில் ஈடுபடாத வகையில் பாடம் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமைய வேண்டும். அது தான் மக்களின் முக்கிய எதிர்பார்ப்பாக உள்ளது.

அதேநேரம் அரிசிக்கு செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தவென மேற்கொள்ளப்படும் முயற்சிகளை முறியடிக்கும் மற்றொரு நடவடிக்கையை நெல் சந்தைப்படுத்தும் சபை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது, அதற்கேற்ப இச்சபை, தம் வசம் கொண்டிருக்கும் 43 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை அரிசியாக்கி குறைந்த விலையில் சந்தைப்படுத்த உள்ளது. இதற்கான நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் குறிப்பிட்டுள்ள நெல் சந்தைப் படுத்தல் சபையின் தலைவர் நீல் டி சில்வா, 'ஒரு கிலோ சிகப்பு மற்றும் வெள்ளைப் பச்சை அரிசி ரூ. 197.00 வுக்கும், நாட்டரிசி ரூ.199.00 வுக்கும், சம்பா ரூ. 205.00 வுக்கும், கீரி சம்பா ரூ. 215.00 வுக்கும் ச.தொ.ச, கூட்டுறவு நிலையங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள் ஊடாக சந்தைப்படுத்தப்படும்' என்று கூறியுள்ளார்.

உணவு நெருக்கடி ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் குறித்து தெரிவிக்கப்படும் தற்போதைய சூழலில் பாவனையாளர்களுக்கு இது ஆறுதலான செய்தியும், பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய நடவடிக்கையும் ஆகும்.

ஆகவே அரிசி உள்ளிட்ட எந்தவொரு பொருளுக்கும் செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த எவரும் முயற்சிக்கவோ அவ்வாறான முயற்சிகளுக்கு துணை போகவோ கூடாது. அது நாட்டுக்கும் மக்களுக்கும் செய்யும் பாரிய மோசடியாகவும், துரோகமாகவுமே அமையும். அதனால் கொள்ளை இலாபம் பெற்றுக்கொள்வதை விடவும் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவது இன்றியமையாததாகும். இது இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# மனிதன் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது தூய காற்று

காற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு நாளாக உலக காற்று தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இது ஆண்டுதோறும் நடைபெறும் உலகளாவிய நிகழ்ச்சியாகும். இதை ஐரோப்பிய காற்று ஆற்றல் நிலையமும், உலகளாவிய காற்று ஆற்றல் மன்றமும் ஒழுங்குப்படுத்தி வருகின்றது.

இது காற்றாற்றலைக் கொண்டாடும் தினமாகும். மேலும் இந்நாளில் காற்றாற்றலைப் பற்றிய விழிப்புணர்வையும், முக்கியத்துவத்தையும், அதன் வாய்ப்புகளையும், குழந்தைகள் மற்றும் வயதானோர் அறியும் படி செய்யப்படுகிறது.

நம் முன்னோர்கள் இயற்கையையே தெய்வமாக எண்ணி வணங்கினர். பஞ்ச பூதங்களான காற்று, நீர், நிலம், ஆகாயம், நெருப்பு இவற்றின் தொகுப்பு தான் உலகமாகும்.

மனித நாகரீகம் வளர வளர இயற்கையும் சீர்கேடு அடைய ஆரம்பித்துள்ளது. இயற்கையை சீரழித்தது உயிரினங்களில் மனிதன் மட்டும்தான். மனிதன் தன் தேவைக்காக இயற்கையை அழித்தான்.

மரங்களை வெட்டி காடுகளை அழித்து மனை நிலங்களாக மாற்றினான். நிலத்தைத் தோண்டி நிலக்கரி பெற்றோல் எடுத்து இயற்கையை நாசப்படுத்தினான். நிலத்தடி நீரை உறிஞ்சி நீர் இல்லாமல் வறண்ட பிரதேசமாக மாற்றினான்.

மனிதன் ஐம்பூதங்களையும் பாழாக்கியதன் விளைவுதான் பூமி வெப்பம், பூகம்பம், சுனாமி, வறட்சி, புயல் போன்ற இயற்கை சீற்றங்கள்.

இந்த பஞ்ச பூதங்களின் பாதிப்பு தான் மனிதனை பல நோய்களுக்கு ஆளாக்கியுள்ளது. இயற்கையை நாம் எந்தளவுக்கு மாசு படுத்தியுள்ளோம் என்பதையும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் கொஞ்சமாவது அறிந்து கொள்வோமா?



## இன்று உலக காற்று தினம்

உலகில் உயிர்கள் வாழ இன்றியமையாதது காற்று தான். காற்று எங்கும் நிறைந்த பொருள். இதனை கண்ணினால் பார்க்க முடியாவிடினும், இதன் செயலால் இதனை உணர்ந்து கொள்கிறோம். ஆறு அறிவுடைய மனிதன் முதல் ஓரறிவுடைய தாவரம் வரை உள்ள ஒவ்வோர் உயிருக்கும் காற்று இன்றியமையாததாகும். இக்காற்று இல்லையென்றால் எந்த உயிரும் வாழ முடியாது.

காற்றோட்டமில்லாத இடத்திலும், மக்கள் நிறைந்த இடத்திலும் நச்சுக்காற்று மிகுந்திருக்கும். ஆதலால் அங்கு அதிக நேரம் தங்குவதற்கு சிரமமாக இருக்கும். ஒருவேளை தங்க நேரிட்டால் தூய காற்றை சுவாசிக்க முடியாமல் மூச்சு திணறும்

உயிர்கள் வாழ்வதற்கு உணவு, நீர், காற்று ஆகிய மூன்றும் அவசியம் வேண்டியவைதான். ஆனாலும் உணவின்றி சில நாட்களும், நீரின்றி சில மணிநேரங்களும் உயிர்வாழ நம்மால் முடியும். ஆனால் தூய காற்று இல்லையென்றால் சில வினாடிகளுக்கு மேல் உயிர்வாழ முடியாது. எனவே உயிர் வாழ்க்கைக்கு தூய காற்று இன்றியமையாதது.

### காடுகளை அழித்ததன் விளைவால் காற்றில் கரியமில வாயு ஆதிக்கம்

உயிரினங்கள் தாவரங்களுக்கு காற்றில் உள்ள ஒட்சிசன், கார்பன்டைக்ஸைட் மிகவும் முக்கியமாகும். தாவரங்கள் உணவு தயாரிக்க கார்பன்டைக்ஸைட் என்ற கரியமில வாயுவை எடுத்துக் கொண்டு பிராண வாயுவான ஒட்சிசனை வெளிவிடுகிறது. உயிரினங்கள் பிராண வாயுவை உள்வாங்கி கரியமில வாயுவை வெளிவிடுகின்றன.

பிராண வாயுவை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக இருந்த காடுகளை அழித்ததன் விளைவுதான் காற்றில் கரியமில வாயுவின் ஆதிக்கம் அதிகரித்தது. மேலும் எண்ணற்ற தொழிற்சாலைகளின் புகை, வாகன புகை என பல வகைகளில் காற்றுமாசடைந்து வருவதால் இயற்கை சீர்கெட்டு, மனித இனமும் ஆரோக்கியமின்றி அலைந்து கொண்டிருக்கிறது.

நெருங்கிய வீடுகள், பிளாஸ்டிக் குப்பைகளை எரித்தல், செங்கல் சூளைகள், சுண்ணாம்புக் கால்வாய்கள், இரசாயன தொழிற்சாலைகள், புகையை ஏற்படுத்தும் காட்டுத்தீ போன்றவற்றால் வரும் புகையால் காற்று மண்டலம் மாசடைந்துள்ளது.

இதைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தவே உலக காற்று தினம் அனுசரிக்கப்படுகிறது.

விட்டுக்கு ஒரு மரம் நடுவோம்!!!

காற்று மாசடைவதை தடுப்போம்!!

# க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு அண்மையில் தோற்றிய மாணவர்களின் ஆதங்கம்

இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியின் காரணமாக மக்கள் நாளுக்கு நாள் பல சிக்கல்களுக்கு முகம்கொடுத்த வண்ணமுள்ளனர். இந்நிலையில் இம்முறை கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் பல சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கியதாக தெரிவிக்கின்றனர். அந்த வகையில் இம்முறை க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு பாடசாலை பரீட்சார்த்திகள் 407,129 பேரும், தனியார் விண்ணப்பதாரிகள் 110,367 பேர் என மொத்தமாக 517,496 பரீட்சார்த்திகள் விண்ணப்பித்திருந்தனர்.

அனுராதபுர மாவட்டத்திலிருந்து இம்முறை 24,497 மாணவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தனர். தேசிய மட்டத்தில் நிலவும் பொருளாதார நெருக்கடியினால் இம்முறை க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றுகையில் தாம் எதிர்கொண்ட பிரச்சினைகள் மற்றும் சவால்கள் பற்றி அனுராதபுரம் கனேவல்பொல முஸ்லிம் மகா வித்தியாலத்திலிருந்து இப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் சிலர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

**முஜீபா பேகம்**
(அ/கனேவல்பொல மு.ம.வி)



'கடந்த இரண்டு வருடங்களாக கொவிட் 19 பிரச்சினை காரணமாக பாடசாலைகள் முறையாக நடைபெறவில்லை. ஆசிரியர்கள் சில பாடங்களை நிகழ்நிலை முறையில் கற்பித்திருந்தாலும் கூட அவை அனைத்து மாணவர்களுக்கும் சரியான முறையில் கிடைக்கப்பெறவில்லை. மாணவர்களிடம் அதற்கான கருவிகள் இல்லாமை, இணைய வசதிகள் இல்லாமை போன்றன அவற்றுக்கான பிரதான காரணிகளாகும்.

பின்னர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு சில மாதங்கள் கடந்த சந்தர்ப்பத்தில் தினமும் குறிப்பிட்ட சில மணித்தியாலங்களுக்கு மின்வெட்டு நடைபெற்றமையால் எமது கல்வியினை தொடர்வது மிகக்கடினமாக அமைந்திருந்தது. இரவு வேளைகளில் படிப்பது மிகவும் சிரமமாக இருந்தது.

அதன் காரணத்தினால் இம்முறை எமது பெறுபேறுகளை வெளியிடும் போது எமது தேர்ச்சி மட்டங்களை கணிக்கும் புள்ளித்திட்டத்தில் நாம் முகம் கொடுத்த அசௌகரியங்களையும் கருத்தில் கொண்டு பரீட்சைகள் திணைக்களம் செயற்படுமென எதிர்பார்க்கின்றோம்'.

**முஹம்மத் றிபாத்**
(அ/கனேவல்பொல மு.ம.வி)



'கொரோனா காரணமாக கடந்த இரண்டு வருடங்கள் எமது கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. எமது பாடத்திட்டங்கள் உரிய நேர காலத்தில் பூரணப்படுத்தப்படவில்லை. இவ்வருடம் ஆரம்பம் முதல் மின்சாரம் துண்டிப்பு தினமும் முன்னெடுக்கப்படுகிறது. இது வீட்டிலிருந்து சுய கற்றலில் ஈடுபடவும் இடையூறுகளை ஏற்படுத்தின. அத்தோடு பொருளாதார நெருக்கடி வேறு. இவ்வாறான பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தபடியே கற்று இப்பொதுப் பரீட்சையை எழுதியுள்ளோம். அதனால் எமது தேர்ச்சி மட்டங்களை கணிக்கும் புள்ளித்திட்டத்தில் நாம் முகம் கொடுத்த அசௌகரியங்களையும் பரீட்சைத் திணைக்களம் கருத்தில் கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது'.

**உயர்தர பரீட்சை போன்று பல்கலைகழகத்திற்கு மாணவர்களை தெரிவு செய்யும் ஒரு பரீட்சையாக இது இல்லாததால் மாணவர்களின் சித்தி மட்டங்களை தீர்மானிக்கும் விடயத்தில் மாணவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் பரீட்சை திணைக்களம் கவனம் செலுத்த வேண்டும்**

இவ்வாறு மாணவர்கள் தெரிவித்திருப்பது குறித்து அம்மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியரான எம்.எம். பாத்திமா பரீஹா (விஞ்ஞான பாட ஆசிரியை, அ/கனேவல்பொல மு.ம.வி) இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



'2022 ஆம் ஆண்டு க.பொ.த.(சா/த) பரீட்சை எழுதிய மாணவர்கள் பலவித சவால்களை எதிர்நோக்கியிருந்தார்கள். கடந்த வருடம் மூன்று தவணைகளுக்குமுரிய பரீட்சைகளுக்கும் அவர்களால் முகம்கொடுக்க முடியாமல் போனது. மாதிரிப்பரீட்சைகள் எதுவும் சரியான முறையில் நடத்தப்படாத சந்தர்ப்பத்திலேயேதான் அவர்கள் இப் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர். கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக அவர்களால் பாட விடயங்களில் உரிய முறையில் ஈடுபாடு காட்ட முடியாத நிலைமையும் கடந்த வருடங்களில் ஏற்பட்டிருந்தன. அப்பாடங்களை நாங்கள் அவர்களுக்கு நிகழ்நிலை முறையினூடாக கற்பித்தோம், இருந்தும் அவை மாணவர்களுக்கு திருப்திகரமானதாக அமைந்திருக்கவில்லை. இதனை அவர்கள் பாடசாலைக்கு மீண்டும் வருகை தந்ததன் பின்னர் அவர்களின் கல்வி நிலையினை அவதானித்ததன் ஊடாக அறிந்து கொண்டோம். பாடத்திட்டங்களும் சரியாக பூர்த்தி செய்ய முடியாமல் போனது.

அதேபோன்று தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும் மாணவர்களை பாதிப்படைய செய்துள்ளது. நாட்டில் தொடர்ச்சியாக மின் துண்டிப்பு ஏற்பட்டதால் அவர்கள் கற்றல் நடவடிக்கைகளை தொடர்வதில் சிரமங்களை எதிர்நோக்கி இருந்தனர். ஒவ்வொரு வருடமும் உயர் தர மற்றும் சாதார தர பரீட்சைகள் நடைபெறுவதற்கு ஓரிரண்டு மாதங்களுக்கு முன்பாக மாகாண அல்லது வலயக்கல்வி பணிமனையினால் ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள் நடாத்தப்படுவது வழமை. ஆனால் இம்முறை அதுவும் நடைபெறாத சூழலில் தான் மாணவர்களது பெறுபேறுகளை உயர்த்துவதற்கு எம்மாலான முயற்சிகளை நாம் மேற்கொண்டோம்'.

இதேவேளை இம்முறை இப்பரீட்சைக்கு தோற்றிய மாணவி ஒருவரின் தந்தையான ஆர். முஹம்மது றிபாய்தீன் இவ்வாறு குறிப்பிட்டார்.

'பாடசாலை காலங்களில் எனது மகள் சிறப்பாக கல்வி கற்று சிறந்த பெறுபேறுகளை பெற்று வந்தார். ஆனால் பரீட்சை நெருங்கும் காலகட்டங்களில் ஒழுங்காக பாடசாலை நடைபெறாத காரணங்களால் எனது மகள் பரீட்சைக்கு உரிய முறையில் தயாராக முடியாத நிலைமைக்கு உள்ளானதை என்னால் அவதானிக்க முடிந்தது. இதற்கு மகளை குறை கூறவும் முடியாது. நாடு எதிர்கொண்ட கொரோனா அதனைத் தொடர்ந்த பொருளாதார நெருக்கடி போன்றனவே அவ்வாறான நிலைக்கு அவரை உள்ளாக்கியது. இந்நெருக்கடிகளுக்கு நாட்டில் பெரும்பாலான மாணவ, மாணவியர் முகம் கொடுத்துள்ளனர்.



அதனால் எனது உள்ளிட்ட இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த பிள்ளைகளின் பெறுபேறுகள் திருப்திகரமான அமையுமா என்ற ஐயம் என்னைப் போன்று எல்லா பெற்றோரிடமும் காணப்படுகின்றது. அதனால் பரீட்சைகள் திணைக்களம் இவ்விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தியபடி செயற்படும் என எதிர்பார்க்கின்றேன்.

அந்த வகையில் இப்பொதுப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் கற்றல் தொடர்பில் எதிர்நோக்கிய பிரச்சினைகள், சவால்கள் மற்றும் அவர்களது வேண்டுகோள்கள் குறித்து வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தில் வினவியபோது, 'கடந்த டிசம்பர் மாதம் நடைபெறவேண்டிய பரீட்சையை தான் நாங்கள் சுமார் ஆறு மாதங்கள் மேலதிக காலத்தை வழங்கி இந்த மே மாதம் நடத்தினோம். உண்மையிலேயே மாணவர்களுக்கு பிரச்சினைகள் இருந்தது தான், கடந்த காலங்களில் அவர்களுக்கு ஒன்லைனில் கற்பித்தது வெற்றியளிக்கவில்லை என்பதும் மறுக்க முடியாத உண்மை. உயர்தர பரீட்சை போன்று பல்கலைகழகத்திற்கு மாணவர்களை தெரிவு செய்யும் ஒரு பரீட்சையாக இது இல்லாததால் மாணவர்களின் சித்தி மட்டங்களை தீர்மானிக்கும் விடயத்தில் மாணவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் பரீட்சை திணைக்களம் கவனம் செலுத்தும் என நம்புகின்றோம்' என்று அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எது எவ்வாறு இருந்தாலும் மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கியமான அரச பரீட்சைகளில் ஒன்றான க.பொ.த(சா/த) பரீட்சையின் பெறுபேறுகள் மாணவர்களைப் பாதிக்கும் வகையில் அமைவதனை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது. நாட்டின் தற்போதைய நிலைமையினையும், கற்றலின் போது மாணவர்கள் எதிர்கொண்ட அசௌகரியங்களையும் கருத்திற் கொண்டு நியாயமானதீர்மானத்தை எடுப்பதே பரீட்சைகள் திணைக்களத்தின் பொறுப்பாக உள்ளது.

**ஐ.எம்.மிதுன் கான்...**
(கெக்கிராவ குறூப் நிருபர்)

# திருகோணமலையில் டெங்குவின் தாக்கம் அதிகரிப்பு

**உலகளவில் ஏற்படும் அனர்த்தங்கள் ஏதோ தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்படுகிறது. இயற்கை அனர்த்தம் போல் ஏதோ ஒரு வகை நோய் மக்களை ஆட்டிப்படைக்கிறது. கொரோனா வைரஸ் தாக்கம் போன்று டெங்குவின் தாக்கமும் திருகோணமலையில் ஆட்கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.**





இதனால் மக்கள் அவதானமாக இருந்து தங்களை கொடிய நோயிலிருந்து பாதுகாக்கவும் முன்வர வேண்டும். பொடுபோக்காக இருந்தால் மரணங்களை சந்திக்க நேரிடும். கடந்த காலங்களில் 2014 ம் ஆண்டளவில் திருகோணமலை கிண்ணியா பகுதியில் 14 மரணங்கள் இடம்பெற்றன. இங்கு டெங்கினால் கர்ப்பிணி தாய் ஒருவரும் உயிரிழந்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் டெங்குவின் தாக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் மொத்தமாக இந்த வருடம் திருமலை மாவட்டத்தில் 770 டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ளனர். இதில் திருகோணமலை கடற்படை தளத்தில் 111 நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் வீ.பிரேமானந்த் தெரிவித்தார்.

டெங்கு வீரியம் அதிகரிப்பு உயர் சிவப்பு வலயங்களாக திருகோணமலை, கிண்ணியா, மூதூர், உப்புவெளி, குச்சவெளி போன்ற சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் இணங்காணப்பட்டுள்ளது. இதில் கிண்ணியா சுகாதார பிரிவில் ஆண் (வயது38) ஒருவர் டெங்கு நோய் காரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைத்து மரணித்த சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

திருகோணமலை பகுதியில் 203 நோயாளர்களும், மூதூரில் 203, கிண்ணியா 77, உப்புவெளி 76 என டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் கடந்த வருடம் (2021) 312 என்றவாறு நோயாளர்கள் இனங்காணப் பட்ட நிலையை விடவும் இம்முறை அது 770 ஆக அதிகரித்துள்ளது. இதனை கருத்திற் கொண்டு அரசாங்கம் டெங்கு வாரமாக மே 18 தொடக்கம் 24 வரை பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த நிலையில் சுகாதார தரப்புடன் முப்படையினர் இணைந்து டெங்கு ஒழிப்புப் பணியை மேற்கொண்டுள்ளனர்.





## இவ்வாண்டு 770 டெங்கு நோயாளர்கள் இணங்காணல்

இவ்வாறான கொடிய நோயிலிருந்து பாதுகாப்புப் பெற பொது மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும். தங்களது வீடுகள், காணிகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பாவிக்காத மலசலகூடங்களை கவனமாக நீர்தேங்காத வண்ணம் சுத்தப்படுத்துவதுடன் வெற்றுக் காணிகளையும் உரிய நேரத்தில் சுத்தமாக பேணவும் அது போன்று பாடசாலைகள் அரச திணைக்களங்களில் தினசரி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் சுத்தத்தை பேண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொது மக்களை கேட்டுக் கொள்வதுடன் காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக வைத்தியரை நாட வேண்டும்.



மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமாயின் இரத்த பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

இதில் பொடுபோக்காக இருக்க வேண்டாம். சில பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு பணியின் போது லாவா குடம்பிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதில் அவதானமாக மக்கள் செயற்படவும் வீடுகளில் நீரை சேமித்து வைக்கும் வாளி, குடம், பரல்கள் தாங்கி என்பனவற்றிலும் மலசலகூட வாளி, குளியலறை வாளி, பக்கட் பறவைகளுக்கு நீர் வைக்கும் பாத்திரம் பக்குகள் தடாகங்களிலும் கிணறுகளிலும் பாவிக்காத மலசலகூடங்கள் மூடப்படாத மலசலகூட குழிகள் சுற்றுப்புறங்களில் வீசப்பட்ட சிரட்டை பேணி யோகட் கப் போத்தல்களிலும் கீழே உள்ளன போன்று (தெறி புழு) போன்ற அமைப்பு காணப்படுகின்றனவா?

இவைதான் நுளம்பு குடம்பிகளாகும் என சுகாதார தரப்பு மக்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளது. இதில் இருந்து பாதுகாக்க என்ன செய்யவேண்டும்?

நீர் தேங்கும் மற்றும் சேமித்து வைக்கப்படும் பாத்திரம்/பொருட்களில் உள்ள நீரை அகற்றி சுத்தம் செய்தல் வேண்டும். நீரை சேமித்து வைக்கும் ஒவ்வொரு தடவையும் வாளி, குடம், பரல்கள், தாங்கி என்பற்றை பழைய நீரை அகற்றி சுத்தம் செய்த பின்னரே புதிதாக நீரை சேமிப்பதுடன் பாதுகாப்பாக மூடி வைத்தல் வேண்டும்,

கிணறுகளுக்கு கப்பி வகை, மீன்கள் இடுவதுடன் சிறிய இடைவெளி கொண்ட வலை இட்டு மூட வேண்டும்.

பாவிக்காத கிணறுகள் மற்றும் மூடப்படாத மலசலகூடகுழிகளுக்கு அபேட் இடல் வேண்டும்.

இவற்றையெல்லாம் சரிவர ஒவ்வொருவரும் உணர்ந்து செய்யும் போதே கொடிய ஆட்கொல்லி டெங்கிலிருந்து பாதுகாப்புப் பெற முடியும்.

டெங்கு நோய் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க மக்கள் கரிசனையுடன் செயற்படுவதுடன் நுளம்பு தாக்கம் பரவாத வண்ணம் சூழலையும் அதனை அண்டியுள்ள பகுதிகளையும் சுத்தமாக பேண வேண்டும். வடிகான்களில் நீர் தேங்கி நிற்காத அளவுக்கு லாவா குடம்பிகள் இல்லாத அளவுக்கு நீரை வடிந்தோடக்கூடிய வகையில் சுத்தத்தை திறம்பட பேண வேண்டிய தருணமாக இருக்கிறது.

திருகோணமலை நகர் பகுதியில் சில குடியிருப்பு நெருக்கமாக காணப்படுவதுடன் வடிகான்கள் துப்புரவற்ற நிலையில் உள்ளது. இவ்வாறான விடயங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் கண்காணித்து செயற்பட வேண்டும்.

முப்படையினர் டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த களத்திற்கு சென்று செயற்படுவதுடன் சுகாதார தரப்புக்கள் டெங்கின் தீவிரத்தை கட்டுப்படுத்த புகை விசிறும் நடவடிக்கை என பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

பொதுமக்கள் இந்நோயிலிருந்து பாதுகாக்க முன்கூட்டிய திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டும் இல்லாது போனால் பல மரணங்களை சந்திக்க நேரிடும்.

**ஹஸ்பர் ஏ ஹலீம்...**
*(தம்பலகாமம் குறூப் நிருபர்)*

# தமிழ் சினிமாவில் மறக்க முடியாத நகைச்சுவை நடிகர் அமரர் கல்லாப்பெட்டி சிங்காரம்

**தமிழ் சினிமாவில் மறக்க முடியாத நகைச்சுவை நடிகர் அமரர் கல்லாப்பெட்டி சிங்காரம். இவரின் 84வது ஜனன தினம் 1938 ஜுன் 12ஆம் திகதியாகும்.**

தமிழ்நாடு கொங்குமண்டல கரூர் மாவட்டத்தில் ஓர் கிராமத்தில் சாதாரண நடுத்தர குடும்பத்தில் பிறந்தார் சிங்காரம்.

இவர் தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகர் ஆவார். ஆரம்ப காலங்களில் படிப்பை விட நடிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் சிங்காரம். பருவ வயதிலிருந்தே சில நாடகங்களில் நடித்தவாறே சென்னைக்கு வந்தார்.

சென்னையில் ஆர்.எஸ். மனோகர், அமெச்சூர் நாடகக் கம்பனிகள் போன்ற நாடகக் கம்பனிகளில் நடித்த சிங்காரம் 1964இல் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடிப்பில் வெளிவந்த "மோட்டார் சுந்தரம் பிள்ளை "படத்தில் நாகேஷுடன் பூசணிக்காய் திடுட்டுக் காட்சியில் சிறுகட்டத்தில் தோன்றினாலும் அக்காட்சி நல்ல நகைச்சுவை விருந்தாகவே அமைந்தது.

அதன் பின் பெரிதாக வாய்ப்புகள் கிடைக்காத சிங்காரம், அத்தை மகள், காவல்காரன், மறுபிறவி, எடுப்பார் கைப்பிள்ளை, சொர்க்கம், குமார விஜயம் போன்ற படங்களில் சிறு சிறு வேடங்களில் நடித்தார்.

கல்லாப்பெட்டி சிங்காரத்தின் முழுமையான நகைச்சுவை திறமையை வெளிக்காட்ட பாலமாக இருந்தவர் கே.பாக்யராஜே.

கே.பாக்யராஜ் முதன் முறையாக இயக்கி நடித்த வெற்றி படமான "சுவரில்லாத சித்திரங்கள்" வீரமுத்துக் கவுண்டர் பாத்திரத்தில் சிங்காரம் செய்த அமர்க்களம் படு ஜோர். திருட்டு முழிகளோடு, டெய்லராக வரும் கவுண்ட மணியுடனும், காந்திமதியுடனும், சுமதி பாக்யராஜுடனும் செய்யும் சேட்டைகள் நல்ல நகைச்சுவை ரசனை.

"கண்ணடிச்சி கூப்புட்டு வராத பொம்பள கையப்புடிச்சி இழுத்தா வரவாப் போறா" என கவுண்டமணியிடம் சொல்லி விட்டுத் திரும்பும் போது அங்கே தன் மனைவியாக நடிக்கும் காந்திமதி காளியைப் போல முரட்டுப் பார்வையுடன் சிங்காரத்தை பார்க்கும் போது இவர் முழித்து நடிக்கும் கட்டம் பலே நகைச்சுவை.



டார்லிங் டார்லிங் டார்லிங் படத்தில் பாக்யராஜின் அப்பாவாக, ஊட்டியில் இருக்கும் ஒரு பணக்கார பங்களாவில் வொச்மேனாக இவர் செய்யும் நகைச்சுவை லீலைகள் பிரமாதம்.

இன்று போய் நாளை வா படத்தில் பொக்ஸிங் வீரர் "காமா பயில்வானின் சிஷ்யன் சோமா பயில்வான்" எனச்சொல்லிக் கொண்டு இவர் நடித்த காட்சிகள் வெகு சிரிப்பிற்குரியது.

மேலும் மன்மத ராஜாக்கள் படத்தில் எஸ்.எஸ்.சந்திரன், லூஸ் மோகனுடன் இணைந்து இவர் செய்த லூட்டிகள் அட்டகாசம்.

சுவரில்லாத சித்திரங்கள், ஒரு கை ஓசை, பாமா ருக்மணி, இன்று போய் நாளை வா, மௌன கீதங்கள், அந்த ஏழு நாட்கள் போன்ற பாக்யராஜ் படங்களில் மிக முக்கியமான வேடங்களில் சிங்காரம் தோன்றினார்.

அந்த ஏழு நாட்கள் படத்திற்குப் பின் வந்த பாக்யராஜ் படங்களில் சிங்காரம் என்னகாரணத்தினாலோ நடிக்கவில்லை. அதன் பின் மற்ற பிரபல இயக்குனர்களின் படங்களில் நடித்தார் சிங்காரம்.

சிவாஜி கணேசனுடன் சொர்க்கம், சிம்ம சொப்பனம், தராசு, ராஜமரியாதை மருமகள் போன்ற படங்களில் நடித்தார்.

மக்கள் திலகம் எம்ஜியாருடன் காவல்காரன் படத்தில் ஒரு காட்சியில் நடித்துள்ளார்.

காக்கிச் சட்டை படத்தில் கமலஹாசனுக்கு தந்தையாக நடித்துள்ளார்.

சிங்காரத்தின் ஆடு போன்ற கனைக்கும் குரலும், திருட்டு முழியுடன் அமைந்த முகவெட்டும் இவரின் சினிமாத் தள வெற்றிக்கு காரணமாக அமைந்தது எனலாம்.

மருமகள் படத்தில் இவரின் யதார்த்தவியலான நடிப்பினை கண்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சிங்காரத்தை ரசனையுடன் பாராட்டினார்.

இவ்வாறு 100க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்தவர் சிங்காரம். இவர் சொந்தமாக நாடக்குழு வைத்து பல நாடகங்களை மேடையேற்றியுமுள்ளார். கல்லாப்பெட்டி சிங்காரம் ஒரு வெற்றிகரமான நாடகக் குழுவுக்கு சொந்தமாக வைத்து பல நாடகங்களை நடத்தினார்.

பாக்யராஜ் சிங்காரமுடன் அறிமுகமானபோது, இவரது வெளிப்படையான அம்சங்கள், நடிப்பு நடை மற்றும் உடல் மொழி ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டார்.

பின்னர், பாக்யராஜ் ஒரு வெற்றிகரமான இயக்குனராக ஆனபோது, சிங்காரத்துக்கு தனது படங்களில் தோன்ற பல வாய்ப்புகளை வழங்கினார்.

இருவரும் சென்னை தேனாம்பேட்டையில் ஆரம்ப காலங்களில் ஒரு வீட்டில் ஒரே அறையில் தங்கியிருந்தனர். அந்த நட்பே பின்னாளில் இவர்களை சினிமாவில் இணைத்தது.

கல்லாப்பெட்டி சிங்காரம் நடித்த கடைசித் திரைப்படம் ஆர்.வி.உதயகுமார் இயக்கத்தில் வெளியான வெற்றி வெள்ளி விழா கண்ட படமான கிழக்கு வாசல். இப்படப்பிடிப்பின் போது 1990 ஏப்ரல் 15 அன்று தனது 52 வயதில் இறந்தார் கல்லாப்பெட்டி சிங்காரம். நீண்ட வருடங்களாக ஆஸ்மா நோயினில் அவதியுற்றிருந்தார் சிங்காரம் என்பது குறிப்பிடத்தக்கது.



ஆக்கம்:
**எஸ்.கணேசன்**
**ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

## அவுஸ்திரேலியா செல்ல... (03ஆம் பக்கத் தொடர்)

ஒவ்வொருவரிடமிருந்தும் 7 இலட்சம் ரூபாய் முதல் 1 மில்லியன் ரூபாய் வரை பணத்தை கடத்தல்காரர்கள் பெற்றுக்கொள்வதாகவும் படகில் ஏறியதும் கடத்தல்காரர்களே பாதுகாப்புப் படையினருக்கு இடப்பெயர்வாளர்கள் குறித்த தகவல்களை வழங்குவதாகவும் தெரியவந்துள்ளது.

அதேபோல், சிறிய படகுகள் மூலம் கரையில் இருந்து நடுக்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படகிற்கு இடப்பெயர்வாளர்களை அழைத்துச் செல்வதற்கு 80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் ரூபாய் வரை வசூலிக்கப்படுவதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியா நோக்கி பயணித்த 15 இலங்கையர்கள் கடந்த தினம் அவுஸ்திரேலிய கரையோர பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு மீண்டும் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில், குறைந்தபட்சம் கிறிஸ்மஸ் தீவின் மணலைக்கூட மிதிக்க முடியவில்லை என்றும், அவர்களது உடைமைகள் அனைத்தும் கடத்தல்காரர்களுக்கு பலியாகிவிட்டதாகவும் தெரிவித்தனர்.

நீர்கொழும்பில் இருந்து கடல் மார்க்கமாக செல்ல முற்பட்ட 36 பேர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## கப்பம் பெற கடத்தப்பட்ட... (03ஆம் பக்கத் தொடர்)

இது தொடர்பில் பெண்ணின் மகள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து பணம் கொடுக்கும் விதத்தில் சந்தேகநபர்கள் அழைக்கப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடத்தப்பட்ட பெண்ணும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 26 மற்றும் 49 வயதுடைய வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களௌன தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்கள் நேற்று(14) வவுனியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கைக்கு மேலும்... (03ஆம் பக்கத் தொடர்)

இலங்கையில் முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் அந்தனி பிளிங்கென் இதன்போது ஒப்புக்கொண்டார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க இராஜாங்க செயலாளர் அந்தோனி பிளின்கனிடம் தெரிவித்தார்.

## 60 புதுப்பிக்கத்தக்க... (03ஆம் பக்கத் தொடர்)

அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களை அதிகரித்து நாட்டின் மின்சாரத்தேவையில் 70 வீதத்தை புதுப்பிக்கத்தக்க வலுசக்தியூடாகப் பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.இதற்கு தடையாகவுள்ள சட்டங்களில் திருத்தம் செய்யும் வகையில் மின்சார சட்டம் நிறைவேற்றப்பட்டது. (பா)

## கார் மோதி... (03ஆம் பக்கத் தொடர்)

அதே திசையில் வந்த கார் சைக்கிளின் பின்புறமாக மோதியதில் சைக்கிளில் சென்றவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்தனர்.

## முற்போக்கு எழுத்தாளர்... (03ஆம் பக்கத் தொடர்)

வட்டம் வழங்கிய விருது, தில்லி தமிழ்ச்சங்க விருது, கோவை உலகத் தமிழ் பண்பாட்டு மையம் வழங்கிய பொற்கிழி விருது, மறைந்த முதல்வர் மு.கருணாநிதி வழங்கிய பொற்கிழி விருது உள்பட பல்வேறு விருதுகள் தமிழ் அமைப்புகளால் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகரில் மனைவி செல்லம்மாளுடன் வசித்து வந்த கு.சின்னப்பபாரதி கடந்த சில வாரங்களாக உடல் நலக்குறைவால் அவதிப்பட்டு வந்தார்.

இந்த நிலையில் திங்கட்கிழமை பிற்பகல் உயிரிழந்தார்.

## சொத்துக்காக மாமியை... (03ஆம் பக்கத் தொடர்)

கைது செய்தனர். கைது செய்யப்பட்டவரிடம் பொலிஸார் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் போது சம்பவம் தொடர்பான விபரங்களை வெளியாகியுள்ளது.

சுகயீனம் காரணமாக தனது மனைவி வத்தளையில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த போது கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள சந்தேக நபர் திட்டமிட்டுள்ளார்.

அதற்கமைய, சொத்துக்களை சொந்தமாக்கிக் கொள்வதற்காக மாமியாரை கொலை செய்ததாக சந்தேக நபர் வாக்குமூலம் அளித்துள்ளார். 40 கோடி ரூபாவுக்கான நிலையான வைப்பு சான்றிதழ், காணி உறுதி பத்திரங்கள், உயிரிழந்த பெண்ணின் தங்க நகை, பணம் உட்பட ஆவணங்கள் வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். மேலும் ராகம பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில், கழுத்து நெரிக்கப்பட்டதால் மரணம் ஏற்பட்டுள்ளதென உறுதி செய்யப்பட்டுள்ளது சந்தேக நபர் வத்தளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு மஹரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## கண்டியில் காணாமற்போன... (03ஆம் பக்கத் தொடர்)

திகனையிலுள்ள அவரது நண்பி ஒருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்த சிறுமி, அந்த வீட்டில் உள்ளவர்களின் அறிவுறுத்தலுக்கமைய தனது வீட்டுக்குச் செல்வதற்காக கண்டி பஸ் தரிப்பிடத்துக்குச் சென்றுள்ளார்.

அப்போது அவரது கையில் 9,000 ரூபாய் பணம் இருந்ததாகவும், அந்த பணத்தில் 4,000 ரூபாய் செலவில் கைபேசி ஒன்றை கொள்வனவு செய்து, தனது வீட்டுக்குச் செல்ல மனமில்லாமல், யாழ்ப்பாணத்திலுள்ள தனது நண்பியின் சகோதரியொருவருக்கு அழைப்பை ஏற்படுத்தி, தனக்கு தொழில் ஒன்றை பெற்றுத் தருமாறு தெரிவித்துள்ளார்.

எனினும் தொழில் செய்வதற்கு வயது போதாது என்றும் அதுவரை விடுதியொன்றில் தங்கியிருக்குமாறும் அச்சகோதரி தெரிவித்ததையடுத்து, சிறுமி யாழ்ப்பாணம் செல்வதற்காக கண்டியிலிருந்து பஸ் ஏறியுள்ளார்.

கண்டியில் 07 மணிக்கு வவுனியா பஸ்ஸில் ஏறி 11 மணியளவில் வவுனியாவை சென்றடைந்துள்ளார். பின்னர் இரவு முழுவதும் வவுனியா பஸ் தரிப்பிடத்தில் தங்கியிருந்த சிறுமி அதிகாலை 4.20 மணியளவில் யாழ்ப்பாணம் செல்லும் பஸ்சில் ஏறி, யாழ். நகரிலுள்ள நண்பியின் சகோதரியுடன் தொடர்பை ஏற்படுத்த முயன்றபோது. சிறுமியின் கைபேசி செயலிழந்துள்ளது.

இதன்போது பஸ் தரிப்பிடத்துக்கு அருகிலுள்ள கடைக்குச் சென்று, தனது கைபேசியின் பெட்டரியை சார்ஜ் செய்து தரும்படி கேட்டபோதே, அந்த வர்த்தகர் சிறுமியை அடையாளம் கண்டு பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கமைய, சிறுமியின் சகோதரி மற்றும் உறவினர்கள் இருவர் யாழ்.பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, சிறுமியை அழைத்து வந்து, கலஹா பொலிஸ்நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பில் சிறுமியின் சகோதரி மற்றும் தாயிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதுடன் கலஹா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## புதுமண தம்பதியருக்கு...

தற்போது சமூக வலைத்தளங்களில் வெகுவாக பகிரப்பட்டு வருகிறது.

நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அனைத்து பொருட்களும் உச்ச விலையில் விற்கப்படுகிறது. எரிபொருள், எரிவாயு, மண்ணெண்ணெய் என அத்தியாவசிய பொருட்களுக்கும் தட்டுப்பாடு நீடிக்கின்றது. இந்த நிலையில், மணமக்களுக்கு தங்கத்துக்கு நிகராக பெற்றோலை பரிசாக வழங்கியுள்ளமை பலரை சிரிக்க வைத்துள்ளதோடு, சிந்திக்கவும் வைத்துள்ளது.

## புதிய எதிர்க்கட்சி அல்லது ...

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில், நாட்டின் இளைஞர் தலைமுறையினர் எதிர்பார்க்கும் அரசியல் பண்பாடு, கலாசாரத்தில் மாற்றமொன்றை ஏற்படுத்த 43ம் படையணி அர்ப்பணிப்புடன் செயற்படும்.

இலங்கை அரசியலில் புதிய எதிர்க்கட்சி அல்லது புதிய அரசாங்கமொன்று மட்டுமன்றி புதிய கட்சியொன்றும் விரைவில் உருவாகும். நாட்டுக்கு புதிய மறுமலர்ச்சியொன்று மட்டுமன்றி புதிய அரசியல் சக்தியொன்றும் தேவையாகவுள்ளது. அதற்காக கட்டாயம் தயாராக இருக்கவேண்டும். சம்பிரதாய அரசியலை உதறித்தள்ளி முன் செல்ல முய ற்சிக்கும் இளைஞர் பரம்பரைக்கான வழிப்பாதையாக அது அமைய வேண்டும்.

அதற்கு உதவ நாங்கள் தயாராக உள்ளோம். பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் எல்லோரும் திருடர்கள் அல்ல. ஆளுங்கட்சியிலும் அனுபவம் வாய்ந்த சிறந்த அரசியல்வாதிகள் இருக்கின்றனர்.

நாட்டின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப அவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். டளஸ் அலஹப்பெரும தலைமையில் ஒரு கூட்டணி தேர்தல் ஆணைக்குழுவை சந்தித்திருப்பது மிகச் சிறந்த அடையாளமாகும்.

ஒரு தனிக்குடும்பத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சுயாதீனமாக சிந்திக்கும் குழுவொன்று அவர்களுக்குள் இருந்து உருவாகுவது ஜனநாயகத்தின் சிறந்த அடித்தளமொன்றை உருவாக்கும்.

டளஸ் மட்டுமன்றி சஜித் பிரேமதாச போன்றோரையும் இணைத்துக் கொண்டு புதிய அரசியல் கூட்டணியொன்று உருவாக்கப்பட வேண்டும். புதிய வழிமுறையிலான அரசியல் செயற்பாடுகள் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். எனக்கும் உதய கம்மன்பிலவுக்கும் இடையில் தனிப்பட்ட பகைமை எதுவும் கிடையாது. அவரும் எங்களுடன் இணைந்து கொள்ளலாம்.

அது மாத்திரமன்றி சுயாதீனக் கட்சிகளின் கூட்டணியும் எங்களோடு இணைந்து கொள்ள முடியும். zதற்போதைக்கு உள்ள அரசாங்கம் தொடர்பில் திருப்தியுற முடியாது. எனவே பொதுமக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலான அரசாங்கமொன்றை உருவாக்க நாங்கள் முயற்சிகளை மேற்கொள்வோம் என குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாட்டில் தொழில் செய்ய அரச...

வெளியிட அமைச்சரவையில் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கல்வி அல்லது வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக அரச உத்தியோகத்தர் ஒருவர் தனது பணிக்காலத்தினுள் உயர்ந்தபட்சம் 05 வருடங்கள் சம்பளமற்ற விடுறையைப் பெற்றுக் கொள்வதற்கு தற்போதைய ஏற்பாடுகளின் பிரகாரம் இயலுமை உள்ளது.

ஆனாலும், இக் காலப்பகுதியில் ஓய்வூதியக் கணிப்பைக் கருத்தில் கொள்ளாமை, சேவை மூப்பு பாதிக்கின்றமை மற்றும் ஏனைய நிபந்தனைகளால் அரச உத்தியோகத்தர்கள் அவ்வாறான விடுமுறையைப் பெறுவதில் ஆர்வம் காட்டுவதில்லை. நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, அரச உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் தொழில் புரிவதற்கோ அல்லது வேறு பயனுள்ள பணிகளில் ஈடுபடுவதற்காக அவர்களின் சேவை மூப்பு மற்றும் ஓய்வூதியத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தற்போதுள்ள ஏற்பாடுகளில் திருத்தம் செய்யப்பட்டு இந்த சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது. இது தொடர்பான ஆலோசனைகளை வெளியிடுவதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## ஹர்ஷ MPயின் கூற்றுக்கு...

நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தானும் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியும் கருத்துகளை பரிமாறிக்கொண்டதாகவும் இதன்போது இலங்கைக்கு உரிய திட்டங்கள் இல்லாததால் உலக நாடுகள் உதவிக்கு வர தயங்குவதாக மாலைத்தீவு முன்னாள் ஜனாதிபதி தெரிவித்ததாகவும் ஹர்ஷ எம்பி தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களுக்காக ...

20 'சிசு செரிய' பஸ் சேவைகளை இன்று முதல் நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

20 பஸ் சேவைகளுடன் ஆரம்பமாகும் மாணவர்களுக்கான இந்த புதிய பஸ் போக்குவரத்து சேவையில் பஸ்களின் எண்ணிக்கையை ஒரு மாத காலத்திற்குள் ஐம்பதாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பு, பொது போக்குவரத்து சேவைகளின் கட்டண உயர்வு ஆகியவற்றை கருத்திற் கொண்டே மேற்படி புதிய பஸ் சேவைகளை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## எரிபொருள் எரிவாயுவுக்கு...

எரிபொருள் கோரி மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டதோடு அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

இதேவேளை, லிற்றோ நிறுவனத்தின் எரிவாயு விநியோகம் தொடர்ந்தும் நிறுத்தப்பட்டுள்ளது.

3,900 மெட்ரிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பலுக்கு கட்டணம் செலுத்த முடியாமையால் இந்த நிலை ஏற்பட்டது.

7 நாட்களாக அந்த கப்பலுக்கு கட்டணம் செலுத்தப்படாமல் இருந்தது.

## யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்கும்...

டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அதன்படி, விரைவில் இப் போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதனூடாக மண்ணெண்ணெய், டீசல் போன்ற எரிபொருட்களையும் உரம், பால் மா, மருந்துப் பொருட்கள் உட்பட்ட அத்தியாவசியப் பொருட்களையும் தேவையானளவு இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்குமென்றும் அமைச்சர் தெரிவித்தார். இதுதொடர்பான முயற்சிகளுக்கு பூரணமான ஒத்துழைப்புக்களை வழங்கி வரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, துறைசார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோருக்கு நாட்டு மக்கள் சார்பில் தான் நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## 3,900 மெ.தொன்...

காரணமாக கடந்த பல மாதங்களாக நாட்டில் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவி வருகிறது. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே எரிவாயு விநியோகிக்கப்படும் நிலையில் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவகின்றனர். அநேக பிரதேசங்களில் எரிவாயு பெற நீண்ட வரிசைகள் காணப்படுகின்றன.

டொலர் நெருக்கடியின் காரணமாக சமையல் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கான கடன் கடிதங்களை விடுவித்துக் கொள்ள முடியாமையினால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக லிற்றோ மற்றும் லாஃப் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இதன் காரணமாக பேக்கரி, சிற்றுண்டிசாலைகள் மற்றும் ஹோட்டல்கள் உள்ளிட்ட உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் பல்வேறு சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன. நாடளாவிய ரீதியிலுள்ள அநேக பேக்கரிகள் மற்றும் ஹோட்டல்கள் மூடப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

இந்த நிலையில் மக்களுக்கு எரிபொருள் விநியோகம் தொடர்பான விபரம் லிற்றோ இணையத்தில் பதிவேற்றப்படும் என நிறுவனம் அறிவித்துள்ளது. இதே வேளை கடந்த தினங்களில் லாப் கேஸ் சிலிண்டர்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்பட்டது தெரிந்ததே.

## அழிந்துவரும் அரியவகை...

இந்த ஆமை இனமானது இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் நாட்டிற்கு உரித்துடையவை எனவும், கடத்தப்பட்டு விற்பனை செய்யப்படும் அரிய வகையான ஆமை இனம் இதுவெனவும் தெரியவருகின்றது. உலகளவில் அதிகம் கடத்தப்படும் உயிரினங்களில் இந்த நட்சத்திர ஆமை இனமும் ஒன்றாகும். ஒரு நட்சத்திர ஆமையின் விலை 500 டொலரிலிருந்து 2 ஆயிரம் டொலர் வரை சர்வதேச சந்தையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த...

03 ஆண்களும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். பாதுகாப்பற்ற கடற்கரை பகுதியிலே இவர்கள் நீராடச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதில் 18 வயது இளைஞர் கடல் அலைக்குள் சிக்கி இழுத்துச் செல்லப்பட்டபோது அதிலிருந்து தப்பி வந்துள்ளார். எனினும் ஏனைய மூவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு காணாமல் போன தாய்க்கு 55 வயது எனவும் அவரது மகனுக்கு 16 வயது எனவும் மருமகனுக்கு 22 வயது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல்போயுள்ளவர்களை தேடும்பணிகளை பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து நேற்று முன்னெடுத்தனர்.

## துப்பாக்கி சூட்டில்...

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டினை மேற்கொண்டநபர்அங்கிருந்துதப்பிச்சென்றதையடுத்து சம்பவம் தொடர்பான புலன்விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## அமைச்சரவையில் மீண்டும்...

தெரிவித்துள்ளார்.

இதன்படி நாளை வியாழக்கிழமை புதிய அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் பல கட்சிகளின் தலைவர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது. இந்த சட்டமூலத்திற்கு எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கவுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## பிரான்ஸில் சாதித்த இலங்கை...

மக்ரோன் (Emmanuel Macron) அவர்களினால் அவர் அழைக்கப்பட்டிருந்தார். இதன்போது உதவி செய்யும் நோக்கில் பிரான்ஸ் ஜனாதிபதியால் அவரிடம் கேட்டபோது "உங்களது உதவி எனக்குக்கிடைத்தால் எனது குடும்பம் தான் சந்தோஷமடையும் ஆனால் தற்போது எனது நாட்டுமக்கள் உணவிற்காக கஷ்டப்படுகிறார்கள் அவர்களுக்கு எனது பிறந்தநாள் பரிசாக ஏதாவது செய்யுங்கள்" என்று கேட்டுள்ளார்.

அதற்கிணங்கி நேற்றைய தினம் (14) அவசர உணவுப்பொதிகள் இலங்கை மக்களுக்கு பிரான்ஸிலிருந்து அனுப்பப்படுகிறது.

மேகா சந்திரகுமார் என்ற மாணவிக்கு முகநூலில் வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

## முதலாம் தர மாணவர்களை...

நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் எழுந்ததுடன், அது தொடர்பில் பல்வேறு தரப்பினர் முன்வைத்த சமர்ப்பணங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகளை கருத்திற்கொண்டு கல்வி அமைச்சு திருத்தியமைக்கப்பட்ட புதிய சுற்றறிக்கையை தயாரித்துள்ளது. இது தொடர்பான பிரேரணை கல்வி அமைச்சரினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## அதிருப்தியடைந்துள்ளதாக...

எனினும் தற்போது எழுப்பப்பட்டுள்ள சர்ச்சைக் காரணமாக தாம் ஏமாற்றமடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அதானி குழுமம், இந்த பிரச்சினை ஏற்கனவே இலங்கை அரசாங்கத்தால் தீர்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

பதவி விலகல்

காற்றாலை மின் திட்டத்தை நேரடியாக அதானி குழுமத்திற்கு வழங்குமாறு பிரதமர் மோடி தனக்கு அழுத்தம் கொடுத்ததாக ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்ததாக நாடாளுமன்றக் குழு முன் கூறிய, இலங்கை இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் எம்.எம்.சி. பெர்டினாண்டோ, மூன்று நாட்களுக்குள் பதவியில் இருந்து விலகியுள்ளார். அவரின் கூற்றை ஜனாதிபதி ராஜபக்ச உறுதியாக மறுத்தமையை அடுத்தே, அவர் பதவி விலகியுள்ளார்.

இலங்கை, மன்னார் மாவட்டத்தின் 500 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டம் தொடர்பான, பெர்டினாண்டோவின் கருத்து ட்விட்டரில் பகிரப்பட்டு வருகிறது.

இதேவேளை 2021 ஆம் ஆண்டில், கொழும்பு துறைமுகத்தின் மேற்கு சர்வதேச கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கும் இயக்குவதற்கும், இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் 700 மில்லியன் டொலர் உடன்படிக்கையில் ஏற்கனவே அதானி குழுமம், கையெழுத்திட்டுள்ளது.

## பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்தால்..

1790 ரூபா செலவாகும் எனவும் அவர் கூறியுள்ளார். அதித பணவீக்கம் என்ற நிலைமையானது மிகவும் பயங்கரமானது. இதனால், அதிகரித்து வரும் நிலைமையை தடுக்க அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். கடந்த மார்ச் மாதம் பணவீக்கம் 18.2 வீதமாக இருந்ததுடன் ஏப்ரல் மாதம் 30 வீதமாக அதிகரித்தது. இந்த மாதம் 33.3 வீதமாக இருக்கின்றது. மாதாந்தம் பணவீக்கமானது 30 வீதம் என்ற கணக்கில் அதிகரித்தால், 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் பொருளின் விலை டிசம்பர் மாதத்தில் 1,790 ரூபாவாக அதிகரிக்கும். பாணின் விலை டிசம்பர் மாதத்தில் 1,790 ரூபாவாக அதிகரிக்கும்.இது அனைத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் சுனில் ஜயரத்ன கூறியுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அந்நிய செலாவணி பற்றாக்குறை மற்றும் பணவீக்கம் காரணமாக அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளும் அதிகரித்துள்ளன.

## அரச ஊழியருக்கு இவ்வாரம் முதல்...

அரசாங்கம் அறிவித்துள்ளது. அரசாங்க ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமையில் விடுமுறை வழங்குவதற்கான யோசனை அமைச்சரவையில் (13) சமர்ப்பிக்கப்பட்டது.

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியை கருத்திற்கொண்டு அரசாங்க ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமையில் விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருந்தார். பயிர்செய்கை மற்றும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக அரச உத்தியோகத்தர்களை வலுப்படுத்தும் நோக்குடன் இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவுகின்ற எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பயணிகள் போக்குவரத்துத் தடைகள் ஏற்பட்டுள்ளதுடன், அந்நிலைமையால் அரச ஊழியர்களுக்கு தமது போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் தோன்றியுள்ளன. இந்நிலைமையில் வாரத்தில் கடமையாற்றும் ஒரு (01) நாள் அரச விடுமுறையை வழங்கி தொடர்ந்து வரும் காலங்களில் ஏற்படக் கூடுமென எதிர்பார்க்கின்ற உணவுத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக தமது வீட்டுத்தோட்டங்களில் அல்லது வேறு இடங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கான வசதிகளை வழங்குவது உகந்ததெனக் கண்டறியப்பட்டுள்ளது.

நீர் வழங்கல், மின்சார விநியோகம், சுகாதாரம், பாதுகாப்பு சேவைகள், கல்வி, போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்கும் அரச நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய அரச நிறுவனங்களை எதிர்வரும் 03 மாதங்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் மூடுவதற்காக அமைச்சர் தினேஷ் குணவர்தன சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## கொழும்பில் இன்று அறிமுகமாகும்...

மாலை 8 மணி வரை மாக்கும்புர, கடவத்தை மற்றும் கட்டுபெத்த ஆகிய இடங்களில் குறித்த பேருந்துகள் பயணிக்கவுள்ளன. மாலை 4 மணி முதல் 6 மணி வரை கொழும்பில் இருந்து மாக்கும்புர, கடவத்தை மற்றும் கட்டுபெத்த வரை பேருந்து பயணிக்கும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். Park and ride என்பது தங்கள் சொந்த வாகனத்தில் பயணத்தை மேற்கொள்ளும் கொழும்பு புறநகர் வாழ் மக்கள் அதனை மாக்கும்புர, கடவத்தை மற்றும் கட்டுபெத்த பகுதிகளில் பாதுகாப்பாக நிறுத்திவிட்டு, சொகுசு பேருந்துகளில் கொழும்பு நகரத்திற்கு பயணிக்க முடியும்.அதற்காக சொகுசு பேருந்து சேவைகள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

காலை 6 மணி முதல் 8 மணி வரை 5 நிமிடங்களுக்கு ஒரு முறை குறித்த 3 இடங்களில் இருந்து பேருந்துகள் பயணிக்கின்றது. பின்னர் மாலை 6 மணி முதல் 8 மணி வரையான காலப்பகுதியிலும் இவ்வாறு 5 நிமிடங்களுக்கு ஒரு முறை பேருந்துகள் சேவையில் ஈடுபடும். இடைப்பட்ட காலப்பகுதியில் மணித்தியாலத்திற்கு ஒரு முறை ஒரு பேருந்து பயணிக்கும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் 15ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் முதல் முறையாக இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது அது பயன்பாட்டுக்கு வருகின்றது. வாகன சாரதி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் கொழும்புக்கு வருவதற்கு வசதியாக மற்றும் பாதுகாப்பான பேருந்து சேவைகளை வழங்குவதன் மூலம் காலை மற்றும் மாலை நேரங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது இந்த திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.



கிண்ணியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட கண்பார்வை குறைந்த 161 பயனாளிகளுக்கு மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வு தேசிய விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர் முஸம்மீல் முகைதீனினால் நேற்று (14) கிண்ணியா நகர சபை மண்டபத்தில் வழங்கி வைக்கப்பட்ட போது... (படம்: முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)

## அநுராதபுரத்தில் பதுக்கி வைத்திருந்த 1,600 கிலோ அரசி கைப்பற்றல்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**



அநுராதபுரம் நகரில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது விற்பனை செய்யாது பதுக்கி வைத்திருந்த 1,600 கிலோவுக்கும் அதிகமான அரிசியை நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள உத்தரவாத விலைக்கு பொதுமக்களுக்கு விற்பனை நிலையங்களில் அரிசி விற்பனை செய்யப்படுகின்றதா? அல்லது அதற்கு மேலதிகமாக விற்பனை செய்யப்படுகின்றதா? என்பதை அறிந்து கொள்ளும் நோக்கில் நுகர்வோர் அதிகார சபையினரால் நாடு முழுவதும் நடத்தப்பட்டு வரும் சுற்றிவளைப்புக்கமைவாக நுகர்வோர் அதிகார சபையின் அநுராதபுரம் பிராந்திய அலுவலக சுற்றிவளைப்பு குழுவினர்களினால் நேற்று அநுராதபுரம் நகரில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது பெருந்தொகையான அரிசி கைப்பற்றப்பட்டுள்ளது.


இதில் சம்பா மற்றும் கீரி சம்பா, சிகப்பு பச்சை அரிசி வகைகள் அடங்குவதுடன் அவற்றில் விற்பனை விலை குறியீட்டு இலக்கம் மற்றும் காலவதியாகும் திகதிகளும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லையென அதிகாரிகள் குறிப்பிட்டனர்.அது சம்பந்தமாக எதிர்வரும் தினங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இச்சுற்றிவளைப்பு நுகர்வோர் அதிகார சபையின் அநுராதபுரம் அலுவலக பொறுப்பதிகாரி பீ.சீ. ஏ.பி.பெரேராவின் தலைமையில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாகிஸ்தான் தூதரகம்

# கண்டி மக்களுக்கு பல்வேறு உதவிகள்







**மாவத்தகம தினகரன் நிருபர்**

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரத்தினால் கண்டி கட்டுக்கலை ஜும்ஆ பள்ளிவாசலில் புதிதாக அமைக்கப்பட்ட கணனி தொழில்நுட்ப ஆய்வு கூடம் திறந்து வைத்தல், தையல் பயிற்சி நிலையம் திறந்து வைத்தல், பாடசாலைப் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பொருளாதார நெருக்கடியான நிலைமையைக் கருத்திற்கொண்டு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலின் ஏற்பாட்டில் பள்ளிவாசல நிர்வாக சபைத் தலைவரும் பாகிஸ்தான் நாட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியுமான அப்சல் மரைக்கார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வு பெற்ற மேஜர் உமர் பாரூக் புர்க்கி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதில் கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவரும் கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலின் நிர்வாக சபைச் செயலாளர் கே.ஆர்.ஏ. சித்தீக், கண்டி மாவட்ட ஜம்மிய்யதுல் உலமா சபைத் தலைவர் மௌலவி எச். உமர்தீன், கண்டி ஒராபிபாஷா பணிப்பாளர் எம்.எச். சலீம்டீன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

### 1964 இலக்கம் 28 காணி சுவீகரிப்பு (திருத்த) சட்டத்தின் திருத்தத்தின்படி காணி சுவீகரிப்பு சட்டத்தின் (460வது அறிவிப்பு) 7வது வாசிப்பின் கீழ் அறிவித்தல்

தொடர்பு இல. HR/LD/3/1/401

இங்கு கீழ் குறிப்பிடப்படும் உப அட்டவணையில் விளக்கமளிக்கப்படும் காணியை அரசு கைப்பற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளது. மேலதிக விபரங்களுக்காக இலக்கம் 1448/2006.06.07 வது 2012.10.04 திகதியிலான இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

**உப ஆவணம்**

| | |
|---|---|
| மாவட்டம் | : களுத்துறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : ஹொரணை |
| கிராமம் | : கிகெனிபிடிய |
| இடம் | : இடிபிதிய |
| திட்ட இலக்கம் | : மு.பி.க. 3829 |
| காணித்துண்டு இலக்கம் | : 01, 02, 03 |
| அளவு | : கெ.1.1856 |

**பிரதேச செயலாளர்**
**ஹொரணை.**

**பிரதேச செயலாளர் அலுவலகம் -**
**ஹொரணை.**
**02.06.2022**

### 1964 இலக்கம் 28 நிலம் கையகப்படுத்தல் திருத்தச்சட்டம் மூலம் திருத்தப்படுதலுக்கு ஏற்ப நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் 7(1) இன் கீழ் அறிவிப்பு

பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிலத்தை அபிவிருத்திக்காக கையகப்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2022 ஜனவரி 19ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை குடியரசின் வர்த்தமானி இலக்கம் 2263/8 இன் 3ஆம் பகுதியை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : குருநாகலை |
| பிரதேச செயலகம் | : பொல்கஹவெல |
| கிராமம் | : வலகம்முல்ல |
| காணியின் பெயர் | : வேருபுரேஹேன, பாரஅத்தரமேன |
| திட்ட (Plan) இலக்கம் | : கு. 2494 |
| பிரிவு (Lot) இலக்கம் | : 1 |
| மொத்த அளவு | : ஹெக்டேயர் 0.2906 |

**பிரதேச செயலாளர்/**
**நிலம் கையகப்படுத்தும் அதிகாரி**
**பிரதேச செயலகம்**
**பொல்கஹவெல.**

### இலங்கை முதலீட்டுச் சபை (BOI)

**விலைமனுக்களை மூடும் திகதிக்கான நீடிப்பிற்கான அறிவித்தல்**

**இரு வருட காலத்திற்கு (2022-2025) இலங்கை முதலீட்டு சபைக்கு 26 எண்ணிக்கையான சிஸ்கொ வலையமைப்பு சுவிச்சுக்களை வழங்கல், நிறுவுதல், கட்டமைத்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கான விலைமனுக்கள்**
**(BOI/S&S/Q/45/2022)**

மேலேயுள்ள விலைமனுவிற்காக 2022 ஏப்ரல் 05 ஆம் திகதியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்திற்கு மேலதிகமாக விலைமனுவின் மூடும் திகதிகள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளவென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

- ❖ **விலைமனுக்கோரல் ஆவணங்களின் வழங்கலின் மூடும் திகதி - 2022 ஜூன் 28 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும்.**
- ❖ **விலைமனுவின் மூடும் திகதி - 2022 ஜூன் 29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக.**

2022 ஏப்ரல் 5 ஆம் திகதியிடப்பட்ட மேலேயுள்ள விடயம் தொடர்பாக பத்திரிகை விளம்பரத்தில் வழங்கப்பட்ட ஏனைய விபரங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 011-2543041/074 1531432 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக நிருவாகத்திற்கான சிரேஷ்ட பிரதி பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**


திகதி 13.06.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4785
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,185,760.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 3 0 3 8 2 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,935,857.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1263
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,632,180.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 7 7 5 3 4 9
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ. 11,814,540.80

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3027
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,976,980.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 42 57 59 64
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,277,371.60

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0094
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,894,240.00
இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 21 34 40 48 விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,507,547.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 815
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,253,880.00
வெற்றி இலக்கினம் X வெற்றி இலக்கங்கள் 02 09 40 72
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 114,413,661.60

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1133
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,014,700.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 256,340,382.00
S 09 02 12 20 52
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**அதிவேக நெடுஞ்சாலை செயற்பாட்டு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் தகவல் தொழில்நுட்ப வேலைகளைச் செய்வதற்காக (கௌனிகம, இமதுவ மற்றும் பெலியத்த இடை மாறல் அலுவலகங்களுக்கு) தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களை வழங்குவதற்கான விலைமனு கோரல்**

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிவேக நெடுஞ்சாலை செயற்பாட்டு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் (அ.நெ.செ.ப. மற்றும் மு பிரிவு) பெறுகைக் குழுத் தவைவரினால் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் பிரிவில் பின்வரும் செயற்பாட்டிற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல | செயற்றிட்டத்தின் பெயர் | ஒரு நாளைக்கான தொழிலாளர் களின் எண்ணிக்கை | ஒப்பந்த காலம் (மாதங்கள்) | மொத்த தொழிலாளர் நாட்களின் அளவு | விலை மனுப் பிணை முறித் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| RDA/ EOM&M/ GOSL/IT/ TECH/ 2022/29 | அதிவேக நெடுஞ்சாலை செயற்பாட்டு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் தகவல் தொழில்நுட்ப வேலைகளைச் செய்வதற்காக தகைமை வாய்ந்த தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் (கௌனிகம, இமதுவ மற்றும் பெலியத்த இடை மாறல் அலுவலகங்களுக்கு) | 06 | 12 | 1,800 | 110,000.00 |

02. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெ.செ.பரா.மற்றும் முகாமைத்துவப் பிரிவின் செயற்பாட்டு முகவராகும்.
03. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்
04. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகைமைக்காக, விலைமனுதாரர் இவ்வாறான மற்றும் நிகரான எண்ணிக்கையான அளவில் தொழிலாளர்களை வழங்குவதில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
05. விலைமனுக்களின் சமர்ப்பித்தலின் இறுதித் திகதியிலிருந்து 91 நாட்காட்டி நாட்கள் (2022-10-05) வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும் வகையிலிருத்தல் வேண்டும்.
06. விலைமனுக்கள் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணை முறியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த பிணை முறி 2022.11.02ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைமுறியுடன் இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. அனைத்து விலைமனுக்கோரல் ஆவண பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிடப்படல் வேண்டும்.
08. விலைமனு முன்னோடிக் கூட்டம் 2022-06-30ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகமயில் அமைந்துள்ள வீதி அபிவிருத்திக்கு உரித்தான அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு. பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பெறுகைப் பிரிவு அலுவலகத்தில் இடம்பெறும். இதில் கலந்துகொள்ளல் கட்டாயம் என்பதுடன் அவ்வாறல்லாத நிறுவனங்களின் விலைமனுக்கள் இரத்துச் செய்யப்படுவதற்கு அல்லது கையளிக்கப்படுவதற்கு தகுதியீனமாக்குவதற்கு இடமுண்டு.
09. இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒரு விலை கோரலுக்காக மீளளிக்கப்படாத 3,000.00 + 360.00 (VAT) ரூபாவை ரொக்கப் பணமாக செலுத்தி கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற இடத்திலமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான நெடுஞ்சாலை செயற்பாடு. பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2022-06-15ஆம் திகதி முதல் 2022-07-05ஆம் திகதி வரையும் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.30 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் முகவர் / பிரதிநிதி மற்றும் சித்திகரமான கேள்விதாரர் கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். 2022-07-06ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு நிறைவுறும்.
10. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2022-07-06ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், அதிவேக நெடுஞ்சாலைகள் செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக்குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, நெடுஞ்சாலைகள் செயற்பாடு மற்றும் முகாமைத்துவ அமைப்பு, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '' அதிவேக நெடுஞ்சாலை செயற்பாட்டு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் தகவல் தொழில்நுட்ப வேலைகளைச் செய்வதற்காக தகைமை வாய்ந்த தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் (கௌனிகம, இமதுவ மற்றும் பெலியத்த இடை மாறல் அலுவலகங்களுக்கு)'' எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
11. கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம எனும் இடத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெ.செ.பரா.மற்றும் முகாமைத்துவப் பிரிவின் செயற்பாட்டு பிரிவின் பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு முடிந்தவுடன் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
12. மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி எண்கள் பின்வருமாறு.
    - ➢ பொறியியலாளர் - (பராமரிப்பு - அ.நெ.செ.ப. மற்றும் மு. பிரிவு) வீதி அபிவிருத்தி அதிகார சபை. தொலைபேசி 011-3047806
    - ➢ பொறியிலாளர் (கணனி - அ.நெ.செ.ப. மற்றும் மு. பிரிவு) வீதி அபிவிருத்தி அதிகார சபை. தொலைபேசி 0774777689

**தலைவர்**
**அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பெறுகைக்குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை.**
**கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம.**




பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகத்தில் அன்னதான நிகழ்வொன்று நேற்று நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், பிரதமர் அலுவலக பிரதானியுமான சாகல ரத்நாயக்கவினால் இந்த அன்னதான நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இரத்தினபுரி மாவட்ட ஐ.தே.க அமைப்பாளர் அனந்த குமாரும் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம். இதில் சுமார் 3000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு உணவு

**திறப்பனை தினகரன் நிருபர்**

பொஸன் காலம் தொடங்கியுள்ள நிலையில், தனிநபர்கள் மற்றும் பல்வேறு சங்கங்கள் இணைந்து பல்வேறு தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. தான சாலைகளை நடாத்துதல், பல்வேறு தலைப்புக்களில் சொற்பொழிவுகள் நடாத்துதல், அன்னதானம் வழங்குதல் போன்றவை அவற்றில் சிறப்பு வாய்ந்த நிகழ்வுகளாகும்.



அநுராதபுரம் மாவட்ட செயலக பௌத்த சங்கம் பல சங்கங்களுடன் இணைந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் புற்று நோயாளிகளுக்கு ஒரு நேர மதிய உணவு வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது சுமார் 150 புற்று நோயாளர்களுக்கு அனைவரின் ஒத்துழைப்புடன் மதிய உணவு வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் மாவட்ட செயலாளர், மேலதிக அரசாங்க அதிபர்கள், உதவி மாவட்ட செயலாளர் மற்றும் ஏறக்குறைய அனைத்து ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# மதுரங்குளியில் சடலம் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் கொழும்பு பிரதான வீதியின் மதுரங்குளி நகரில் வீதியோர வாடிகானுக்குள் இருந்து சடலம் ஒன்று நேற்று முன்தினம் (13) காலை மீட்கப்பட்டுள்ளது. எனினும் சடலமாக மீட்கப்பட்ட நபர் யார் என்பது தொடர்பில் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

# ஹம்பாந்தோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு 01 ஹெக்டயாருக்கு 50 கிலோ யூரியா வழங்க முடிவு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நெற் செய்கை மற்றும் நெல் வயல்களில் மேலதிக பயிர்ச் செய்கையாக பயறு, கௌபி மற்றும் உழுந்து ஆகிய பயிர்களை பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டெயாருக்கு ஐம்பது கிலோ கிராம் யூரியா உரத்தினை பத்தாயிரம் ரூபாவிற்கு பெற்றுக்கொடுக்க மாகாண விவசாய பணிப்பாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாய பணிப்பாளர் ஹேமந்த அமரசிங்க (13) தெரிவித்தார்.

இதனூடாக ஒரு ஏக்கர் வயலுக்கு 25 கிலோ கிராம் யூரியா உரம் வழங்கப்படவுள்ளது. கமநல சேவைகள் திணைக்கள காரியாலயங்களினூடாக விவசாயிகளின் பெயர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு ஒரு ஏக்கர் வயல் நிலத்திற்கு 50 கிலோ கிராம் யூரியா உரத்தினை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# பெறுகை அறிவித்தல்

**சுகாதார அமைச்சு**

**தேசிய வைத்தியசாலை கண்டி**

## கண்டி தேசிய வைத்தியசாலைக்குரித்தான 07 மின்பிறப்பாக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் – 2022/2023

கண்டி தேசிய வைத்தியசாலைக்குரித்தான கீழ்க் குறிப்பிடப்பட்ட 07 மின்பிறப்பாக்கி இயந்திரங்களை 2022/2023 வருட காலத்தினுள் சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் வேலைகளைச் செய்வதற்கு இயைபாக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. கண்டி தேசிய வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு கண்டி தேசிய வைத்தியசாலை பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

**விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி** : 2022-06-16ஆம் திகதி முதல் 2022-07-09ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை

**விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம்** : 2022-07-01ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு (கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் அலுவலகத்தில்)

**விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி** : 2022-07-09ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு

| | வேலை | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி |
|---|---|---|---|---|
| | கண்டி தேசிய வைத்தியசாலைக்குரித்தான 07 மின்பிறப்பாக்கி இயந்திரங்களை 2022/2023 வருட காலத்தினுள் சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் வேலைகளைச் செய்தல் | 1000 kVA மின்பிறப்பாக்கி - 01<br>600 kVA மின்பிறப்பாக்கி - 01<br>500 kVA மின்பிறப்பாக்கி - 02<br>250 kVA மின்பிறப்பாக்கி - 02<br>40 kVA மின்பிறப்பாக்கி - 01 | 4000.00 | 100,000.00 |

02. கண்டி தேசிய வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவருக்கு விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிப்பதன் பேரிலும் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட வகையில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரிலும் 2022-06-16ஆம் திகதி முதல் 2022-07-08ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரதான கணக்காளரிடமிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயைபுடைய வியாபார பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றை சமர்ப்பித்தல் கட்டாயாகும்.

04. விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு பிரதிநிதியொருவர் வருகை தருவாரேயானால் விண்ணப்பதாரரினால் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதமொன்றையும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு அடையாள அட்டையையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. திறந்த போட்டி முறையின் கீழ் (NCB) விலைமனுக்கள் கோரப்படும்.

06. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மின்பிறப்பாக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் 2022/2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

07. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் 07 மின்பிறப்பாக்கி இயந்திரங்களைப் பரீட்சித்துப் பார்க்குமாறு விலைமனுதாரர்களிடம் விசேடமாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (மேலதிக விபரங்களுக்கு 081-2233337 முதல் 42 வரை) - நீடிப்பு - 2208 தொடர்புகொள்ளவும்

**பணிப்பாளர் / தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய வைத்தியசாலை,**
**கண்டி.**
**2022-06-13**

BE BETTER INFORMED!



News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
VISIT
apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

# அல்மாஸ் ஹோல்டிங்ஸ்

3ம் திகதி ஜூன் மாதம் 2022

**இலங்கையின் ஆவணபாதுகாப்பு மற்றும் பரிமாற்ற ஆணைக்குழு**
**மாடி 28-29, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக நிலையம்**
**கொழும்பு 01**

**கொழும்பு பங்குச் சந்தை**
**மாடி 04-01. மேற்கு கோபுரம்**
**உலக வர்த்தக நிலையம்,**
**கொழும்பு 01**

**ரம்பொட போல்ஸ் பிஎல்சி**
**76, ராக் போல் ஸ்டேட்.**
**நுவரெலியா வீதி,**
**ரம்பொட.**

**கனம் ஐயா,**

## நிறுவனத்தினை பொறுப்பேற்றலும் மற்றும் இணைப்புகளின் 1995ன் சட்டமும் (2003ல் திருத்தப்பட்டது)

ரம்பொட PLCயின் பங்குகளை அண்மையில் வாங்கிய வெளிநாட்டு முதலீட்டாளர் இது தொடர்பாக தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ள அல்மாஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) PLC நிறுவனத்தை நியமித்துள்ளார்.
ரம்பொட போல்ஸ் பிஎல்சியின் எஞ்சிய எல்லா சாதாரண வாக்களிப்புப் பங்குகளையும் (விநியோகிக்கப்பட்டவை மற்றும் செலுத்தப்பட்டவை) வாங்குவதற்காக, கட்டாயமாக கொடுக்கவேண்டிய சலுகைகள் தொடர்பாக திரு. யோ கிம் லெங், அவர்கள் கையொப்பமிட்ட விடயங்கள் பின்வருமாறு.

**1. சலுகையின் பின்னணி**

திரு. யோ கிங் லெங் (இதன்பின்னர் 'வழங்குபவர்' என குறிப்பிடப்படுவார்) அவர்களால் 02 ஜூன், 2022 அன்று, கொழும்பு பங்குச் சந்தையில் ('CSE') குறுக்குப் பரிமாற்றத்தின் மூலம் இது பெறப்பட்டது. அதைத் தொடர்ந்து தரையில் மொத்தமாக 10,406,000 ரம்பொட போல்ஸ் பிஎல்சியின் 52.03% கொண்ட சாதாரண வாக்களிப்புப் பங்குகள் ஏறக்குறைய ஒரு பங்கு ரூ 26.80. விலையில் வாங்கப்பட்டது. நிறுவனத்தினை கையேற்றல் மற்றும் இணைத்தல் 1995ன் சட்டம் (2003 இல் திருத்தப்பட்டது) மூலம் வெளியிடப்பட்ட 31(1)(அ) விதிகளுக்கேற்ப இது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேற்படி விதியானது
இலங்கையின் ஆவண பாதுகாப்பு மற்றும் பரிமாற்ற ஆணைக்குழு ('SEC') பிரிவு 53 இன் கீழ் உள்ள சட்டம் 1987 இல. 36 (திருத்தப்பட்ட) இச்சட்டமானது பிஎல்சியின் எஞ்சியுள்ள சாதாரண பங்குதாரர்களுக்கு அத்தகைய பங்குகளை வாங்குவதற்கு ('சலுகை')யினை வழங்குவதை கட்டாயமாக்குகின்றது.

அச்சட்டவிதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு சலுகையை வழங்க விரும்புகின்றார்.

**2. சலுகையின் விதிமுறைகளும் நிபந்தனைகளும்**

திரு. யோ கிங் லெங் அவர்கள், ரம்பொட போல்ஸ் பிஎல்சியின் மீதமுள்ள, விநியோகிப்பட்ட மற்றும் பணம்செலுத்தப்பட்ட சாதாரண வாக்குப் பங்குகளை பங்குதாரர்களிடமிருந்தது ஒரு பங்கு ரூ26.60 என்ற (சலுகை) விலையில பெற்றுக்கொள்வதற்கு ஒரு கட்டாய சலுகையை வழங்க உத்தேசித்துள்ளார் (ஏற்கனவே வழங்குபவர் வைத்திருக்கும் பங்குகளைத் தவிர) இவ்விலையானது மேற்கூறிய கம்பனியை பெற்ற திகதிக்கு முன்னர் காணப்பட்ட பன்னிரண்டு (12) மாத காலத்திற்குள் திரு. யோ கிங் லெங் அவர்கள் வாங்கிய அதிகபட்ச விலையாகும்.

எஞ்சிய பங்குகள் ஜூன் 02, 2022 இன்படி அச்சலுகைக்குரிய எஞ்சியிருக்கும் சாதாரண பங்குகளின் எண்ணிக்கை 9,594,000, PLCயின் விநியோகிக்கப்பட்ட மற்றும் பணம்செலுத்தப்பட்ட சாதாரண வாக்களிக்கும் பங்குகள் 47.9% ஆகும். வழங்கப்படும் இச்சலுகையானது ரம்பொட போல்ஸ் PLCயின் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து பங்குதாரர்களுக்கும் திறந்திருக்கும். இருப்பினும் சலுகையின் முடிவில் திரு.யோ கிங் லெங் அவர்களுக்கு, கையேற்பது தொடர்பாக எழுத்துமூலமாக உறுதிமொழியை வழங்கிய பங்குதாரர்களைத் தவிர ஏனெனில் அவர்கள் இச்சலுகையினை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இச்சலுகை தொடங்கப்பட்ட திகதியிலிருந்து நிபந்தனையற்ற விதத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் ஒன்றாக அமையும். இந்தச் சலுகையின் கீழ் பெறப்படும் சாதாரண வாக்குப் பங்குகள், உரிமைகள், உரிமைகோரல்கள், கட்டணங்கள், உறுதிமொழிகள், மூன்றாம் தரப்பு உரிமைகள் மற்றும் பிற சுமைகள் போன்றவற்றிலிருந்து நீங்கி கையகப்படுத்தியதன் பின்னர் இங்கு குறிப்பிடப்படும் சகல உரிமைகளுடன் ஈவுத்தொகையைப் பெறுவதற்கான உரிமை உட்பட விநியோகிப்பதற்கான (ஏதேனுமிருப்பின்) பணம்செலுத்துவதற்கான உரிமைகொண்டதாகவும் இருக்கவேண்டும்.

**2. சலுகையை வழங்குபவர்**

திரு. யோ கிங் லெங் சுயவிபரம்
திரு. யோ கிம் லெங் அவர்கள் ஒரு மலேசிய குடிமகன் (பாஸ்போர்ட் இல். ஏ41175405) நிரந்தரமாக சிங்கப்பூரில் வசிப்பவர் (முகவரி 363 புக்கிட் ராசா 70300 செரெம்பன், நெகிரி செரெம்பன், மலேசியா). அவர் பல நிறுவனங்களின் நிறைவேற்று தலைவரும் மலேசியாவில் உள்ள 'சுலோடெக் ஸ்டின் வேஹேனட்' உட்பட பல கம்பனிகளின் பெரும்பான்மை பங்குதாரருமாவார் , தாய்லாந்தில் உள்ள 'கெலப் தாய் கம்பனி லிமிட்டட் மற்றும் சீனாவிலுள்ள 'லிங்ஹாய் ஹிடாய் எகியுபடஅமட் எனட்எஞ்சினிஎறிங''. இரசாயனப் பொறியியல் பின்னணி கொண்ட திரு. யோ உலகம் முழுவதும் உள்ள பன்னாட்டு நிறுவனங்களுடன் பணிபுரிந்துள்ளார். அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா, சீனா, தாய்லாந்து மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் பணிபுரிந்தது உட்பட சந்தைப்படுத்தல் ஆலோசகராகவும் ஓய்வுக்குப் பின் நீர் சுத்திகரிப்பு மற்றும் மாசுபாடுதல் நீர் மற்றும் காற்று மாதிரிகளின் கட்டுப்பாடு தொடர்பான நிபுணராகவும் பணியாற்றியுள்ளார். திரு.யோ அவர்கள் அவுஸ்திரேலியா, இந்தோனேஷியா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, சீனா மற்றும் சிறீலங்கா ஆகிய நாடுகளில் சொத்துக்கள் தொடர்பான (Real Estate)ல் நிபுணத்துவம் கொண்டவராவார். திரு. யோ கிம் லெங் பல ஆசிய மொழிகளில் பன்மொழி பேசுபவர். அத்தோடு, சிறந்த விருந்தோம்பலும் பல்லின கலாசாரமும் கொண்ட அழகான நாடான இலங்கையை கிழக்கு ஆசிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் ஊக்குவிக்கவும் எதிர்பார்க்கின்றார்.

திரு. யோ கிம் லெங் அவர்களுக்கு சொந்தமான அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள மேற்கூறிய பங்குகளைத் தவிர, சலுகையைப் பங்குகள் வேறுஎதுவும் இல்லை

**3. சலுகையில் காணப்படும் பங்கு**

மேற்படி கம்பனியை கையேற்றதன்படி 03 ஜூன் 2022 முதல்,திரு. யோ கிம் லெங் அவர்கள் ரம்பொட போல்ஸ் பிஎல்சியின் சாதாரண 10,406,000 வாக்களிப்புப் பங்குகளான 52.03% கொண்ட விநியோகிக்கப்பட்ட மற்றும் பணம்செலுத்தப்பட்டவைகளின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளராவார்.
இந்த கையேற்பிற்காக அவர் எவருடனும் இணைந்து செயல்படவில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

**4. சலுகையின் கூடுதல் விவரங்கள்,**

விரிவான தொடர்புடைய தகவல்களை வழங்கும் சலுகை ஆவணம் சலுகை திறக்கப்படும் காலம் உட்பட சட்ட விதிமுறைக்கேற்ப பேணப்பட்டு ரம்பொட போல்ஸ் பிஎல்சியின் பணிப்பாளர் மற்றும் பங்குதாரர்களின் சபைக்கு அனுப்பப்பட்டு முப்பத்தைந்து (35) நாட்களுக்குள் (அதாவது ஜூலை 07, 2022 அன்று அல்லது அதற்கு முன்) 52% பங்குகளை திரு. யோ கிம் லெங் அவர்கள் வாங்குகிறார்.

கீழே கையொப்பமிடும் யோ கிம் லெங் ஆகிய நான் இந்த அறிவிப்பில் உள்ள தகவல்களின் துல்லிய தன்மை மற்றும் பொறுப்புக்களை முழுமையாக ஏற்றுக்கொள்வதோடு எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் தந்திரோபாயங்களோ தவறாக வழிநடத்தும் அழித்தல் விடயங்களோ எதுவும் இல்லை என்பதை பிரகடனம் செய்து உறுதிப்படுத்துகிறேன்.

**திரு. யோ கிம் லெங்**

# கேள்வி அறிவித்தல் – கண்டி மாநகர சபை

கண்டி எசல பெரஹரா வேளையில் களியாட்டத்தை நடாத்துவதற்காக கண்டி கெட்டம்பே விளையாட்டரங்கை தற்காலிகமாக குத்தகைக்கு வழங்குதல்

2022ஆம் வருடத்தில் கண்டி எசல பெரஹரா இடம்பெறும் வேளையில் களியாட்டத்தை நடாத்துவதற்காக கண்டி கெட்டம்பே விளையாட்டரங்கை தற்காலிகமாக குத்தகைக்கு வழங்குவதற்காக 2022-07-01ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் மூலம் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவங்கள் 2022-06-30ஆம் திகதி பி.ப. 2.45 மணி வரை வாரத்தின் வேலை நாட்களில் கண்டி மாநகர சபையின் வருமானப் பிரிவில் விநியோகிக்கப்படும் என்பதுடன் 2022-07-01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அவை திறக்கப்படும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை மாநகர ஆணையாளர், கண்டி மாநகர சபை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். (நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் மாநகர பிரதான கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்)

| ஆகக் குறைந்த தொகை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (வரி சகிதம்) ரூ. சதம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புத் தொகை ரூ. சதம் | பொழுதுபோக்கு வரி வைப்புத் தொகை ரூ. சதம் | பாதுகாப்பு பிணை வைப்புத் தொகை | வழங்கப்படும் கால எல்லை |
|---|---|---|---|---|---|
| ரூபா 5,000,000.00 | ரூபா 2260.00 | ரூபா 150,000.00 | ரூபா 1,500,000.00 | ரூபா 500,000.00 | மேடை அமைக்கப்படும் மற்றும் அகற்றிக் கொள்ளும் நாட்கள் உட்பட 16 நாட்களுக்கு |

கேள்விச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்வித் தொகைக்கு புறம்பாக அரசாங்க வரியும் சேர்த்து அறவிடப்படும். மேலதிக விபரங்களை கண்டி மாநகர சபையின் மாநகர கணக்காளர் (வருமானம்) அவர்களிடம் அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து அல்லது 081-2227395 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலமாக தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். (கேள்வி நிபந்தனைகளை விண்ணப்பப் படிவங்கள் வழங்கும்போது பெற்றுக்கொள்ளலாம்)

**2022-06-11ஆம் திகதி**

**கே.கே.ஜீ.ஐ.டீ.ஜீ. விஜேதிலக்க.**
**மாநகர ஆணையாளர்.**
**கண்டி மாநகர சபை.**

# கேள்வி அறிவித்தல் – கண்டி மாநகர சபை

## கண்டி எசல பெரஹராவை பார்வையிடுவதற்கான ஆசனங்களை இடுவதற்காக கண்டி குயீன்ஸ் ஹோட்டலின் நடைபாதையை (கொரிடோரை) தற்காலிகமாக குத்தகைக்கு விடல்

2022ஆம் வருடத்தில் கண்டி எசல பெரஹரா நடைபெறும் காலப்பகுதியில் பெரஹராவை பார்வையிடுவதற்கான ஆசனங்களை இடுவதற்காக கண்டி குயீன்ஸ் ஹோட்டலின் நடைபாதையை தற்காலிகமாக குத்தகைக்கு வழங்கும் பொருட்டு 2022-07-01ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை இரு நகல்களிலான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்கள் 2022-06-30ஆம் திகதி பி.ப. 2.45 மணி வரை வாரத்தின் வேலை நாட்களில் கண்டி மாநகர சபையின் வருமானப் பிரிவினால் விநியோகிக்கப்படும் என்பதுடன் 2022-07-01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அவை திறக்கப்படும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை மாநகர ஆணையாளர், கண்டி மாநகர சபை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். (நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் மாநகர பிரதான கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்)

**அட்டவணை**

| பகுதி | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வரி சகிதம்) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை | ஆகக் குறைந்த கேள்வி ரூ. சதம் | பாதுகாப்பு பிணை வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| நடைபாதை பகுதி 1<br>தலதா வீதியின் மாளிகா திசையில் குயீன்ஸ் ஹோட்டலின் நடைபாதைக்கு பிரவேசிக்கும் நுழைவாயில் முதல் சுற்றுவட்டத்திற்கு முன்னாலுள்ள நுழைவாயில் வரையுள்ள 143 நீள் அடி | ரூபா 2,260.00 | ரூபா 100,000.00 | ரூபா 3,800,000.00 | ரூபா 300,000.00 |
| நடைபாதை பகுதி 11<br>தலதா வீதியின் சுற்றுவட்டத்திற்கு முன்னாலுள்ள நடைபாதை மத்திய நுழைவாயிலில் இருந்து இறுதி நுழைவாயில் வரையுள்ள 63 நீள் அடி | ரூபா 2,260.00 | ரூபா 75,000.00 | ரூபா 2,200,000.00 | ரூபா 300,000.00 |

கேள்விச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்வித் தொகைக்கு புறம்பாக அரசாங்க வரியும் சேர்த்து அறவிடப்படும். மேலதிக விபரங்களை கண்டி மாநகர சபையின் மாநகர கணக்காளர் (வருமானம்) அவர்களிடம் அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து அல்லது 081-2227395 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலமாக தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். (கேள்வி நிபந்தனைகளை விண்ணப்பப்படிவங்கள் வழங்கும்போது பெற்றுக்கொள்ளலாம்)

**2022-06-11ஆம் திகதி**

**கே.கே.ஜீ.ஐ.டீ.ஜீ. விஜேதிலக்க.**
**மாநகர ஆணையாளர்.**
**கண்டி மாநகர சபை.**




டீசல் தட்டுப்பாடு காரணமாக

# நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் கடமையை செய்ய இடையூறு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

டீசல் தட்டுப்பாடு காரணமாக தங்களுடைய கடமைகளை முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக நுவரெலியா நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பொருட்களின் விலைகள் அளவுக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றது. செயற்கையாக தட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டு அதிக விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றது. வர்த்தகர்கள் அனைவரும் தங்களுடைய மனசாட்சிக்கு விரோதமாக வருமானத்தை சம்பாதிக்கின்றனர்.

குறிப்பாக உணவுப்பொருட்களை விற்பனை செய்கின்ற விற்பனை முகவர்களும், வர்த்தகர்களும் ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு விலையேற்றம் என விலைகளை அதிகரிக்கின்றனர்.

இது தொடர்பாக வர்த்தகர்களிடம் கேள்வி கேட்டால், விரும்பினால் வாங்குங்கள் விருப்பம் இல்லாவிட்டால் வேறு எங்காவது சென்று வாங்கிக் கொள்ளுங்கள் என்ற அதிகார தோரணையிலேயே அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு பதில் வழங்குகின்றனர். இது தொடர்பாக நுவரெலியா நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு தகவல் கொடுத்தாலும் அவர்களால் கடமையை செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. டீசல் தட்டுப்பாடு காரணமாக அவர்களுடைய வாகனங்களை செலுத்த முடியாத ஒரு நிலைமை காணப்படுகின்றது.

இதன் மூலம் பாதிக்கப்படுகின்றவர்கள் பொது மக்களே. எரிவாயு நிரப்பு நிலையங்களில் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது.

சாதாரணமாக டீசல், பெற்றோல் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதில்லை. அவை அனைத்தும் அதிக விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றது.

எனவே இவ்விடயங்கள் தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். எந்த ஒரு இடத்திலும் வாடிக்கையாளர்கள் பொருட்களை கடனுக்கு பெற்றுக் கொள்வதில்லை. அவர்கள் அனைவரும் பணம் கொடுத்தே பொருட்களை கொள்வனவு செய்கின்றனர்.

எனவே இதுதொடர்பாக அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே பொது மக்களின் கோரிக்கையாகும்.

## வர்த்தகர்களின் ஏற்பாட்டில் மரவள்ளி கிழங்கு தானம்



**மஸ்கெலிய தினகரன் நிருபர்**

மஸ்கெலியா நகரிலுள்ள பிரபல வர்த்தகர்கள் நேற்று மதியம் மரவள்ளி கிழங்கு சமைத்து தானம் வழங்கினர். இவ்வைபவத்தில் மஸ்கெலியா சுமாரான விகாரை அதிவணக்கத்துக்குரிய தேரர் மற்றும் மஸ்கெலியா சண்முக நாதர் ஆலய குருக்கள் சென் ஜோசப் தேவாலயத்தின் போதகர் கலந்து கொண்டனர். இதனைதொடர்ந்து மங்கல விளக்கு ஏற்றப்பட்டு சைவசமய முறையில் வாழை இலையில் மரவள்ளி கிழங்கு சமைத்து தானம் வழங்கப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர்கள், மற்றும் நகர வர்த்தகர்கள், முச்சக்கர வண்டி சாரதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

## தேயிலை தூளில் கலப்படம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை சாதகமாகப் பயன்படுத்தி கலப்படம் செய்யப்பட்ட தேயிலைத் தூள் சந்தையில் விற்கப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

தேயிலை கழிவுகளை அரைத்து சுண்ணாம்பு கலத்தல் மற்றும் தேயிலை தூளுக்கு சீனி கலந்து இவ்வாறு கலப்படம் செய்வதாக துறைசார்ந்த அனுபவம் பெற்ற நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

தேயிலைத் தூள் உற்பத்தியாவதற்கு முன் தேயிலை கொழுந்து பதப்படுத்தப்படும் போது தேயிலைத் தூளை அதிகமாகவும் கறுப்பு நிறமாக மாற்றுவதற்காகவே இந்த கலப்பட முயற்சி மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று தேயிலைத் தூளின் சாயத்தை அதிகரிப்பதற்காக சுண்ணாம்பு கலக்கப்படுவதாகவும் இதனால் தேயிலைத்தூளில் அதிக சாயம் கிடைப்பதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் நுகர்வோர் நோய் சுகாதார சீர்கேடுகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்படக்கூடும் என தெரிவிக்கின்றனர். இவ்வாறான தொழிற்சாலைகளை இனங்கண்டு அவற்றுக்கெதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## நுவரெலியாவில் பல மாதங்களின் பின்னர் லாப்கேஸ் விநியோகம்!




**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

நாடு பூராகவும் கடந்த சில மாதங்களாக லாப் எரிவாயு சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் பொலிஸாரின் பாதுகாப்பிற்கு மத்தியில் நுவரெலியா மக்களுக்கு நேற்று பல மாதங்களின் பின்னர் லாப் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன.

பொதுமக்கள் அதனை பெற்றுக் கொள்வதற்கு அதிகாலை 4 மணியில் இருந்து நீண்ட வரிசையில் காத்திருந்தனர். இரு மாதங்களுக்கு மேலாக லாப்கேஸ் வழங்கப்படாத நிலையில் நுவரெலியா மின்சார சபை கட்டடத்திற்கு முன்பாக நேற்றையதினம் (14) விநியோகிக்கப்பட்டது. லாப்கேஸ் விநியோக மொத்த விற்பனை முகவர்களால் எடுத்து வரப்பட்டு சுமார் 1150 சிலிண்டர்கள் கடும் நெருக்கடிக்கு மத்தியில் நுவரெலியா, பொரலாந்த, கந்தபளை, மாகஸ்தோட்டம், நானுஓயா உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்து வருகை தந்த பொது மக்களுக்கு பொலிஸாரின் மேற்பார்வையில் விநியோகிக்கப்பட்டது.

எனினும் அனைத்து வாடிக்கையாளர்களினதும் தேவைக்கு ஏற்ப சமையல் எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக் கொள்ள முடியவில்லை. இதன்போது நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் தொழில் புரிவோருக்கு வழங்கப்பட்டமையால் அப்பகுதியில் அமைதியின்மை நிலை ஏற்பட்டிருந்தது.

தொடர்ந்து நுவரெலியா மாவட்டத்தில் பல பகுதிகளில் எரிவாயு தட்டுப்பாடு நிலவி வருவதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## இரத்தினபுரி மாவட்டத்தில் எயிட்ஸ் நோய் பரவும் அபாயம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கையும் பரிசோதனைக்கு உட்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாக சுகாதார தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது நடுத்தர வயதுடையவர்களே எயிட்ஸ் நோய் நிலைமைகளுக்கு அதிகம் முகம்கொடுத்துவந்தனர். ஆனால் தற்போது 24 – 36 வயதுடையவர்களிடம் எயிட்ஸ் நோய் பரவும் விகிதம் அதிகரித்துள்ளது. இலங்கை போன்று வளர்ச்சியடைந்து வருகின்ற நாடொன்றில் இந்நிலைமை கவலைக்குரியது என சுகாதார தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதியில் இடம் பெறும் பாதுகாப்பற்ற பாலியல் தொடர்புகள், ஆபிரிக்க நாடுகளுக்கு வியாபார நோக்கமாக சென்று வருபவர்கள், தன்னினச் சேர்க்கையாளர்கள், வீதி விபச்சாரிகள் போன்றோரால் இந்த நோய் பரவுவதற்கு காரணமாகவுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயத்தில் பொது மக்கள் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் விடுதலை முன்னணியின் புலமைப்பரிசில் வழங்கும் திட்டம்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

ஆசிரியர் விடுதலை முன்னணி கடந்த காலங்களில் தமது அங்கத்தவர்களின் பிள்ளைகளின் நலன் கருதி புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருடா வருடம் அதனை நடாத்தி வருகின்றது. அதேபோன்று இவ்வருடமும் இந்நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்தவகையில் 2019, 2020, 2021 ஆகிய வருடங்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த முன்னணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் அதேபோல க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த முன்னணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் முன்னணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.



அதேவேளை 1988ஆம், 1990 ஆம் ஆண்டுகளில் நியமனம் பெற்ற அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. எனவே அதற்கான விண்ணப்பங்களை தகுதியானவர்களிடமிருந்தும் தரப்பினரிடமிருந்தும் கோரியுள்ளது. இவ்விண்ணப்பங்கள் செயலாளர் நாயகம், ஆசிரியர் விடுதலை முன்னணி, த.பெ.இலக்கம் 10, நுவரெலியா எனும் முகவரிக்கு 10.07.2022 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவு தபாலில் அனுப்புமாறும் விண்ணப்ப உறையின் மேல் இடது மூலையில் புலமைப்பரிசில் திட்டம், கௌரவிப்பு போன்றவற்றுக்கு விண்ணப்பிப்பவர்கள் உரியதை குறிப்பிடப்பட வேண்டும் எனவும் ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.டி.எஸ்.நாதன் தெரிவித்துள்ளார்.

## சுப்பர் மார்க்கட்டுக்களில் விறகுக் கட்டுக்கள்



**அக்குறணை குறூப் நிருபர்**

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக கண்டி உட்பட பிரதான நகரங்கள் பலவற்றிலுள்ள சுப்பர் மார்க்கட்டு கடைகளில் கூட தற்போது விறகுக் கட்டுக்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. மடவளை நகரிலுள்ள ஒரு சுப்பர் மார்க்கட் கடையில் அவ்வாறு விற்பனைக்கு வைத்துள்ள விறகுக் கட்டுக்களை மேலே காணலாம்.

## வாகனங்களில் திருட்டு கையும் களவுமாக சிக்கிய நபர்



**கம்பளை நிருபர்**

கம்பளை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களின் உதிரிப்பாகங்கள், பெட்டரிகள், டயர்கள் என்பவை திருடப்படுகின்றமை தொடர்பில், சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று (14) அதிகாலை சந்தேக நபர் முச்சக்கரவண்டியொன்றின் டயர்களை கழற்றிக்கொண்டிருந்த போது, பிரதேசவாசிகளால் பிடிக்கப்பட்டு, தூண் ஒன்றில் கட்டிவைக்கப்பட்டார்.

கம்பளை அங்கம்பன பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர், அதிகாலை கொழும்புக்குச் செல்வதற்காக வீட்டுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோவில் ஏறிய போது, ஆட்டோவில் டயர்கள் காணாமல் போயிருந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, வேறொரு ஓட்டோவில் ஏறி தனது பயணத்தை ஆரம்பித்த போது, வீதியோரம் மோட்டார் சைக்கிளொன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை கண்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் ஆட்டோவில் பயணித்தவர் இறங்கி, அருகிலிருந்த வீட்டுக்குச் சென்று அங்கிருந்தவர்களை அழைத்துள்ளார். அப்போது அந்த வீட்டுக்குள் தனது ஆட்டோ டயர் இருப்பதை கண்டு, பிரதேசவாசிகளுடன் இணைந்து அந்த வீட்டிலிருந்த நபரை பிடித்து, மின்சார தூண் ஒன்றில் கட்டிவைத்து, கம்பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கம்பளை பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக சந்தேக நபர் வாகன உதிரிப்பாகங்கள், மோட்டார் சைக்கிள்களைத் திருடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளமை பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## குற்றச்செயல்களை தடுக்க விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள்

**ஹற்றன் விசேட நிருபர்**



கொட்டகலை பிரதேசத்தில் குற்றச்செயல்களை தடுக்க விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொட்டகலை பொலிஸ் பிரதேசத்தில் குற்றச்செயல்களை தடை செய்வதற்காக கொட்டகலை வர்த்தக சங்கம் விசேட பாதுகாப்பு நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான விசேட பாதுகாப்பு கூட்டம் வர்த்தக சங்கத்தின் தலைவரும் மலையக மக்கள் முன்னணியின் நிதிச்செலாளருமான புஸ்பா விஸ்வநாதன் தலைமையில் நேற்று (14) கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் தேவஸ்த்தான மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினை தொடர்ந்து வழிப்பறி கொள்ளையர்களும் ஆள் கடத்தல் காரர்களும் அதிகரித்துவருவதாகவும் இது குறித்து முன்கூட்டியே எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இக்கூட்டத்தில் மிகவும் விரிவாக கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக கொட்டகலை வர்த்தக சங்கத்தின் தலைவர் புஸ்பா விஸ்வநாதன் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், கடந்த காலங்களில் கொட்டகலை பொலிஸ் பிரதேசத்துக்குட்பட்ட பகுதியில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அத்தோடு பாடசாலை மாணவர்களின் கடத்தல் சம்பவங்கள் பல பிரதேசங்களில் பதிவாகி வருகின்றன. இவை அனைத்தையும் தடுக்கும் வகையில் கொட்டகலை வர்த்தக சங்கத்தினர் பாதுகாப்பு கூட்டத்தினை ஒழுங்குகளை செய்திருந்தது. இதில் திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையத்தின் பிரதான பரிசோதகர் ஆனந்த ஸ்ரீ ,கிராம சேவகர் உள்ளிட்ட கொட்டகலை வர்த்தக சங்கத்தின் முக்கியஸ்த்தர்கள், வர்த்தகர்கள் நலன் விரும்பிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கொட்டகலை பிரதேசத்தில் இனந்தெரியாத எவரையாவது கண்டால் அது தொடர்பாக கொட்டகலை வர்த்தக சங்கத்திற்கோ அல்லது பொலிஸாருக்கோ அறிவிக்குமாறும், பாடசாலை மாணவர்கள் வீடு செல்லும் போதும் அல்லது பாடசாலைகளுக்கு செல்லும் போது பஸ் /போக்குவரத்து வசதிகள் இன்றி நின்றால் அவர்களை உரிய இடங்களுக்கு பாதுகாப்பான முறையில் அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று திருமண நிகழ்வுகள் நடத்தும் போது அல்லது நிகழ்வுகள் முன்னெடுக்கும் போதும் உரிய இடத்தின் மற்றும் நபர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. மண்டப உரிமையாளர்களும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்நிகழ்வுகளில் ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்தால் அவர்களே அதற்கு பொறுப்பு கூற வேண்டும் எனவும் இங்கு வலியுறுத்தப்பட்டன.

# இலங்கையுடனான முதல் ஒரு நாள் போட்டி; ஆஸிக்கு 301 ஓட்டங்கள் வெற்றி இலக்கு





இலங்கை அணி ஆஸி அணிக்கு 301 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இந்த போட்டி கண்டி பல்லேகல்ல சர்வதேச மைதானத்தில் இடம்பெற்றது. அதன் பிரகாரம் இலங்கை அணிக்கு ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக பெத்தும் நிசங்க மற்றும் தனுஷ்க குணதிலக்க இருவரும் களமிறங்கினர்.இருவரும் 19.4 ஓவர்கள் வரை நிதானமாக ஆடி 115 ஓட்டங்களை முதல் விக்கெட் இணைப்பாட்டமாக பெற்ற நிலையில் தனுஷ்க குணதிலக்க 55 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்து சென்றார். பின்னர்



நிசங்கவுடன் இணைந்தார் குசல் மெண்டிஸ். இருவரும் ஆடுவார்கள் என்ற நிலையில் நிசங்க 56 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து சென்றார்.

மெண்டிஸுடன் இணைந்தார் தனஞ்சய டி சில்வா.தனஞ்சய டி சில்வா 7 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து சென்றார். அப்போது இல்ஙகை 134 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை பறிகொடுத்து இருந்தது.

மெண்டிஸுடன் இணைந்தார் சரித்த அசலங்க . இலங்கை அணிக்கு சரியான இணைப்பாட்டத்தை வழங்கிய சரித் அசலங்க 37 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்மிழந்து சென்றார் அவர் ஆட்டமிழந்து சென்ற போது இலங்கை அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 211 ஓட்டங்கள் பெற்றிருந்தது.அவர்கள் இருவரும் 4 ஆவது விக்கெட் இணைப்பாட்ட மாக 77 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்தனர். குசல் மெண்டிஸ் தனது 18 ஆவது அரைச் சதத்தை இந்த போட்டியில் பெற்றார்.

பின்னர் அணியின் தலைவர் தசுன் சானக்க மெண்டிஸுடன் இணைந்தார்.பின்னர் அணியின் தலைவர் தசுன் சானக்க 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார். பின்னர் மெண்டிஸுடன் இணைந்தார் சாமிக்க கருணாரத்தன அவரும் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து செல்ல மெண்டிஸுடன் இணைந்தார் சகல துறை ஆட்டக்காரர் வனிந்து ஹசரங்க அவரும் தனது பங்கிற்கு 19 பந்துகளை எதிர்கொண்டு 37 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார்.

அவருடன் இணைந்து மத்திய வரிசையில் சிறப்பாக ஆடிய குசல் மெண்டிஸ் ஆட்டமிழக்காமல் 87 பந்துகளை எதிர்கொண்டு 86 ஓட்டங்களை பெற்றார். இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்களை பெற்றது.

பந்து வீச்சில் அஷ்டன் அகார் இரண்டு விக்கெட்டையும்,ஜேய் றிச்சட்சன் ஒரு விக்கெட்டையும், ஹேசல் வூட் ஒரு விக்கெட்டையும் மார்னஸ் லாபுசாக்கன் இரண்டு விக்கெட்டையும் பதம் பார்த்தனர்.

**இலங்கை அணி விபரம்**

தனுஷ்க குணதிலக்க, பெதும் நிஸ்ஸங்க, குசல் மெண்டிஸ் (விக்கெட் காப்பாளர்), சரித் அசலங்க, தனஞ்சய டி சில்வா, தசுன் ஷனக (தலைவர் ), வனிந்து ஹசரங்க, சாமிக்க கருணாரத்ன, துனித் வெல்லலகே, துஷ்மந்த சமீர, மகேஷ் தீக்ஷன

**அஸ்திரேலிய அணி விபரம்**

டேவிட் வோர்னர், ஆரோன் பிஞ்ச் (கப்டன்), ஸ்டீவன் ஸ்மித், மார்னஸ் லாபுசாக்னே, அலெக்ஸ் கேரி (விக்கெட் காப்பாளர்), மார்கஸ் ஸ்டோனிஸ், கிளென் மேக்ஸ்வெல், ஆஷ்டன் அகர், பாட் கம்மின்ஸ், ஜே ரிச்சர்ட்சன், ஜோஷ் ஹாஸ்ல்வுட்



இந்த போட்டியில் இலங்கை அணிக்கு புதிதாக அழைக்கப்பட்டார் நுனிந்து வெலல்லகே அவர் இலங்கை அணி ஒரு நாள் அணி சார்பாக பங்கேற்ற 204 வீரர் ஆவார்.

இலங்கை 19 வயதுக் குட்பட்ட அணியின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த போட்டியில இலங்கை அணி தோல்வி அடைந்ததால் 2023 ம் ஆண்டு இடம் பெறும் உலக கிண்ண போட்டிக்கான நேரடியாக தகுதி பெறும் வாய்ப்பை இழக்கும்.

அதே நேரம் இலங்கை அணி 62 புள்ளிகள் பெற்று 9 ஆவது இடத்தில் உள்ளது.அத்துடன் தகுதி பெற வேண்டும் என்றால் தகுதிகாண் போட்டிகளில் பங்கேற்றே வர முடியும்.

# நிரோஷன் டிக்வெல்ல மீண்டும் அழைப்பு

நிரோஷன் டிக்வெல்ல தேசிய தேர்வாளர்களுக்கு சரியான நேரத்தில் நினைவூட்டினார், அவர் சரியான நேரத்தில் 73 பந்துகளில் 83 ஓட்டங்கள் எடுத்து, கடந்த வெள்ளிக்கிழமை எஸ்.எஸ்.சி மைதானத்தில் விளையாடிய இரண்டாவது அதிகாரப்பூர்வமற்ற ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியா ஏ அணிக்கு எதிராக இலங்கை ஏ அணி நான்கு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியர்களுக்கு எதிராக வரவிருக்கும் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான 21 பேர் கொண்ட இலங்கை அணியில் அவர் உடனடியாக சேர்க்கப்பட்டார், முன்னாள் தலைவர் தினேஷ் சண்டிமால் 2009 ஆம் ஆண்டில் ஒப்சர்வர்மொபிடெல் பாடசாலை கிரிக்கெட் ஒஃப் தி இயர் விருதையும் வென்றுள்ளார்.

ஒரு தவறுக்குப் பிறகு இன்னிங்ஸைத் தொடங்கிய டிக்வெல்ல, ஒரு சிக்ஸர் மற்றும் பத்து பவுண்டரிகள் உட்பட அவரது இன்னிங்ஸின் போது சில சிறந்த பவர் ப்ளேயுடன் தனது அற்புதமான சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

சரியாக பத்து வருடங்களுக்கு முன்னர் டிக்வெல்ல கண்டி டிரினிட்டி கல்லூரிக்கான அற்புதமான பாடசாலை பருவத்தின் பின்னர் 2012 ஆம் ஆண்டில் ஒப்சேர்வர்மொபிடெல் பாடசாலை கிரிக்கெட்டருக்கான ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதினை வென்றார்.

ட்ரினிட்டி லயன் டிக்வெல்ல, ஒப்சேர்வர்மொபிடெல் பாடசாலை கிரிக்கெட் ஒஃப் தி இயர் போட்டியின் மூலம் இலங்கை கிரிக்கெட்டிற்கு பரிசளிக்கப்பட்ட மற்றொரு நம்பிக்கைக்குரிய கிரிக்கெட் வீரர் ஆவார், இது நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக பாசடசாலை மாணவர் கிரிக்கெட் வீரர்களுக்கு வெகுமதி வழங்குவதில் மறுக்க முடியாத தலைவராக இருந்து வருகிறது.

இடது கை மற்றும் வழக்கத்திற்கு மாறான விக்கெட் காப்பாளர்துடுப்பாட்ட வீரர் தனது 21 வயதில் ஜுலை 2014 ல் டெஸ்ட்டில் அறிமுகமானார். ஆனால் அவரது முதல் அரைசதத்தில், டிக்வெல்லவால் நீண்ட நேரம் தனது இடத்தை தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை. 2017 ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட்டுக்கு அவர் இரண்டாவது முறையாகத் திரும்பினார், சில ஈர்க்கக்கூடிய ஸ்வீப்கள், ஸ்கூப்கள் மற்றும் ராம்ப் ஷொட்கள் மூலம் சிறந்த வெற்றியைக் கொண்டு வந்தது.

சிறந்த டிரினிட்டி லயன் இதுவரை 49 டெஸ்ட் போட்டிகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி, 20 அரைசதங்கள் உட்பட 2,602 ஓட்டங்களையும், 96 சராசரி 32.52 சராசரியையும் எடுத்துள்ளார். 53 ஒருநாள் போட்டிகளில், அவர் இரண்டு சதங்கள் மற்றும் ஒன்பது அரை சதங்களுடன் 1,578 ஓட்டங்களை குவித்துள்ளார், இது 32.20 சராசரியுடன் 93.48 ஸ்ட்ரைக் ரேட்டில் உள்ளார்.

## சவாலான கட்டத்தில் போட்டியைக் காப்பாற்றிய சகோதரர்கள்

மெமரி லேனில் செல்லும் மற்றொரு திறமையான கிரிக்கெட் வீரரும் உள்ளார், அவர் ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட் அரங்கில் பட்டம் பெற்ற பின்னர் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தினார். இலங்கையின் முன்னாள் துடுப்பாட்ட வீரரும் தற்போதைய ஆனந்த கல்லூரியின் தலைமை பயிற்சியாளருமான சஞ்சீவ ரணதுங்க, பாடசாலை சிறுவர்கள் கிரிக்கெட் வீரர்கள் விளையாட்டின் காதலுக்காக மட்டுமே விளையாட வேண்டும் என்றும், பயிற்சியாளர்கள் எக்காரணத்தைக் கொண்டும் வெற்றி பெற முயற்சிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்றும் கூறினார்.

சண்டே ஒப்சர்வர் பத்திரிகைக்கு அளித்த சமீபத்திய







பேட்டியில், முன்னாள் ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட் வீரர் ஒஃப் த இயர், வெற்றி பெறுவது அல்லது தோற்பது என்பது முக்கியமல்ல, ஒருவர் எப்படி விளையாடுகிறார் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும் என்றார்.

இந்த unsporting நடைமுறைகள் விளையாட்டை அழிக்கின்றன. அவற்றுக்கு நாம் உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். எங்கள் விளையாட்டு சகாப்தத்தில், இந்த அசிங்கமான நடைமுறைகள் ஒருபோதும் காணப்படவில்லை, என்று ரணதுங்க கூறினார், அவர் சில ஆண்டுகளுக்கு முன்பு தலைமை பயிற்சியாளராக தனது ஆல்மா மேட்டரில் ஒரு கௌரவமான பதவியில் பணியாற்றத் தொடங்கினார்.

1982 ஆம் ஆண்டில் தனது மூத்த சகோதரர் அர்ஜுன இரண்டாவது முறையாக புகழை வென்றதை பார்த்த பின்னர், ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டராக மாற ஆர்வமாக இருப்பதாக ரணதுங்க கூறினார்.

'எனது மூத்த சகோதரர் இந்த தனித்துவமான பட்டத்தை மீண்டும் ஒரு முறை வென்றதைக் காண நான் அங்கு இருந்தேன், ஒரு கிரிக்கெட் பந்தில் இருந்து வெளியே வந்தேன். நானும் அதையே செய்ய வேண்டும் என்று அது எனக்கு உத்வேகம் அளித்தது. 1987 ஆம் ஆண்டில் ரோஹன் வீரக்கொடியிடம் ரன்னர்அப் செய்து, அடுத்த ஆண்டில் கனவை அடைந்தேன், 'என்று அவர் கூறினார்.

'லயனல் மெண்டிஸ் போன்ற பயிற்சியாளர்களை நாங்கள் ஆழ்ந்த நன்றியுடன் நினைவில் கொள்கிறோம். அவர்கள் கிரிக்கெட்டின் அழகான விளையாட்டை மட்டுமல்ல, அதன் மதிப்புகளையும் எங்களுக்குக் கற்பித்தனர். எனவே, மதிப்புகளுடன் கூடிய அணிகளை உருவாக்குவதில் நாங்கள் ஆர்வமாக இருந்தோம், அவர்களில் பெரும்பாலோர் இப்போது செய்வதைப் போல எந்த விலையிலும் வெற்றி பெறக்கூடாது, 'என்று அவர் கூறினார்.

ரணதுங்க 1988 ஆம் ஆண்டில் மதிப்புமிக்க ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் ஒஃப் தி இயர் விருதை வென்ற ஆறாவது ஆனந்தியரானார். அவர் 1988 இல் இலங்கை இளைஞர் அணிக்காக விளையாடியபோது, 12 இல் பெரிய போட்டியைத் தவிர எட்டு போட்டிகளில் மட்டுமே விளையாடினார், ஆனால் 900 க்கும் மேற்பட்ட ஓட்டங்களை குவித்தார்.





ஏப்ரல் 25 அன்று தனது 53 வது பிறந்தநாளைக் கொண்டாடிய திறமையான இடது கை டொப் ஆர்டர் துடுப்பாட்டம் கழக கிரிக்கெட்டில் ஓட்டங்களின் செழுமையான அறுவடையைக் கொண்டிருந்தார். அவரது புகழ்பெற்ற மூத்த சகோதரர் அர்ஜுனவைப் போலல்லாமல், சஞ்சீவ சர்வதேச அளவில் வலிமையான சிக்ஸர்களை அடிக்கவில்லை, ஆனால் அவர் உள்நாட்டு மட்டத்தில் ஒரு திறமையான இடது கை துடுப்பாட்ட வீரராக இருந்தார்.

1988 ஆம் ஆண்டில் ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆனந்தாவிற்காக பாடசாலைகளுக்கு இடையிலான மட்டத்தில் அவர் அதிக ஓட்டங்கள் எடுத்தார், அவரது மூத்த சகோதரர் இரண்டு முறை பட்டத்தை வென்ற முதல்வரான ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு. பின்னர் அவர் பல சந்தர்ப்பங்களில் இலங்கை 'ஏ' அணிக்காக விளையாடினார், அதன் பின்னர் அவர் 1994 ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு எதிரான உள்நாட்டு தொடருக்கு தேர்வு செய்யப்பட்டார்.

சஞ்சீவ ரணதுங்க ஒரு நாள் தொடரில் சிறப்பாகத் தொடங்கி, தனது இரண்டாவது போட்டியில் 70 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். இருப்பினும் அவரது ஃபார்ம் பின்னர் கைவிடப்பட்டது, மேலும் அவர் ஜனவரி 1996 இல் தனது 13 ஒருநாள் போட்டிகளில் கடைசியாக விளையாடினார்.

ஒப்சர்வர் ஸ்ரீலரை மொபிடெல் பாடசாலையின் ஆண்டின் சிறந்த கிரிக்கட்டர்ஸ் தற்போது 44 வெற்றிகரமான ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு 40 ஆண்டுகள் நிறைவடைந்தபோது, இது மிகவும் பொருத்தமான தலைமை விருந்தினராக இருந்தது 1979 ஆம் ஆண்டில் முதல் பட்டத்தை வென்றவர் அப்போதைய ரோயல் கல்லூரி தலைவரும் தற்போதைய ஐசிசி தலைமை போட்டி நடுவருமான ரஞ்சன் மடுகல்ல.

2013 ஆம் ஆண்டில் மடுகல்லவால் முன்வைக்கப்பட்ட ஒரு முன்மொழிவின் பேரில் களத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சிறந்த நடத்தை கொண்ட அணிக்கான சிறப்பு விருது இந்தத் தொடருக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

தற்செயலாக, இலங்கை முன்னாள் தலைவர் மடுகல்ல 200 டெஸ்ட் போட்டிகளை நிறைவு செய்ததன் மூலம் தனது வாழ்க்கையில் ஒரு பொன்னான மைல்கல்லை எட்டினார், இன்னும் தலைமை ஐசிசி போட்டி நடுவராக தொடர்கிறார்.




# அரிசி பதுக்கலுக்கு எதிரான விசேட சுற்றிவளைப்பு

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் நகர் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக அரிசி விற்பனையில் ஈடுபட்ட வியாபாரிகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இதுதொடர்பில் தெரியவந்துள்ளது. அதற்கமைய இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிர்ணய விலை காட்சிப் படுத்தப்படாமை, அதிக விலையில் விற்பனை, நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை ,பதுக்கி வைத்தமை போன்ற குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டமை தொடர்பில் இவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.



குறிப்பாக வெள்ளை நாடு 220 /=, சிவப்புபச்சை 210 /=, சம்பா 230/=, வெள்ளப்பச்சை 220 /=, விற்பனை செய்யும்படி அரசாங்கத்தினால் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும் நிர்ணய விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது ஒரு இலட்சம் தொடக்கம் ஐந்து இலட்சம் வரை அபராதமும் மொத்த வியாபார நிலையங்களுக்கு ஐந்து இலட்சம் தொடக்கம் ஐம்பது இலட்சம் வரை அபராதமும் விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

விசேட ரோந்து நடவடிக்கை மன்னார் மாவட்டம் முழுவதும் விரிவுபடுத்தப்படவுள்ளதுடன் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக பொருட்களை விற்பனை செய்பவர்கள் மற்றும் பொருட்களை பதுக்கி வைப்பவர்கள் மீதும் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாறு அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக மன்னார் நுகர்வோர் பாதுகாப்பு சபையில் பொதுமக்கள் நேரடியாக முறைப்பாட்டை மேற்கொள்ள முடியுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# டென்னிஸ் போட்டியில் யாழ். மாவட்ட மாணவர்கள் சாதனை



**யாழ்.விசேட நிருபர்**

இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட STR Cool Tennis இன் 10 வயதுக்குட்பட்ட தனி நபர்களுக்கான டென்னிஸ் போட்டிகளில் யாழ். மாவட்ட வீரர்கள் முதன் முறையாக தமது வெற்றிகளை பதிவு செய்துள்ளனர். கடந்த 10,11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தில் இப்போட்டிகள் நடைபெற்றன.

இதில் 8 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான ஒற்றையர் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் ஜெ.நர்ஸ்வின் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார். 7 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான இரட்டையர் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் ரா.ஆரோன் இரண்டாம் இடத்தினை பெற்றுள்ளார். 7 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான ஒற்றையர் போட்டியில் யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை மாணவி வி.அஸ்விதா இரண்டாம் இடத்தினை பெற்றுள்ளார்.

# வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் படுகாயம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தவசிகுளம் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கெற்பேலி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 21 வயதான தனுசன் என்ற இளைஞனே இவ்வாறு வாள் வெட்டிற்கு இலக்காகியுள்ளார்.

கெற்பேலிப் பகுதியில் வசித்து வரும் இளைஞன் தவசிகுளம் பகுதியிலுள்ள தாயின் வீட்டிற்கு வந்த சமயம் வாள்களுடன் வந்த குழுவொன்று இளைஞன் மீது தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பித்துச்சென்றுள்ளது. இதன் போது படுகாயமடைந்த இளைஞன் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரையும் கொடிகாமப் பொலிஸார் கைது செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. கெற்பேலி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 21வயதான தனுசன் என்ற இளைஞனே இவ்வாறு வாள் வெட்டிற்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



யாழ். பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெகுவிமரிசையாக நடைபெற்றது. இப்பெருவிழாவில் பதுவைப் புனிதரான அந்தோனியார் தேரில் ஏறி வீதி உலா வந்து பக்தர்களுக்கு ஆசி வழங்கினார். இந்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அந்தோனியாரைத் தரிசிக்க வருகை தந்திருந்தனர்.

படங்கள் யாழ்.விசேட நிருபர்

# யாழ். சிறைச்சாலையில் 7 கைதிகள் விடுதலை

**யாழ். விசேட நிருபர்**

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஏழு கைதிகள் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறுகுற்றங்களை புரிந்தவர்கள் மற்றும் தண்டப்பணம் செலுத்த தவறியவர்களே இவ்வாறு சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர். நாடுமுழுவதும் 173 கைதிகளுக்கு நேற்றைய தினம் பொது மன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்நிலையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஏழு கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.



புலம்பெயர் தமிழர் அமரர் நாகமணி இராசையாவின் பிள்ளைகளான இ.கெங்காதரன் (கனடா) இ.கேதீஸ் (சுவீஸ்) சு.பிறேமா (நோர்வே) ர.ஜெகதீஸ்வரி (சுவீஸ்) அமரர் இராசையாவின் பேரன் சி.நிலக்சன் (லண்டன்) ஆகியோர் இணைந்து பேசாலை பகுதிக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (12.06.2022) 420 பேருக்கு இலவசமாக கண் பரிசோதனை செய்யப்பட்டு பெறுமதிமிக்க இலவச மூக்கு கண்ணாடி வழங்கப்பட்டது.

படம் தலைமன்னார் விசேட நிருபர்

# தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனாரின் 57ஆவது நினைவு அனுஷ்டிப்பு



**கரவெட்டி தினகரன் நிருபர்**

புலோலியூர் தமிழ் அறிஞர்களில் ஒருவரான தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனாரின் 57ஆவது நினைவு தினம் நேற்று செவ்வாய்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது

காலை9 மணியளவில் மந்திகைச் சந்தியிலுள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தினால் அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் சங்கத்தலைவர் விஜி தங்கவேல் கந்தமுருகேசனார், நற்பணி நிதியத்தலைவர் எஸ் கனகலிங்கம் ஆகியோர் கந்தமுருகேசனாரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தும் மலரஞ்சலியும் செய்தனர். இந்நிகழ்வில் நற்பணிநிதிய அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். நினைவு தினத்தை முன்னிட்டு கந்தமுருகேசனாரின் உருவச்சிலை புலோலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தினரால் அண்மையில் புனரப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கனிய மணல் அகழ்வு

**(மன்னார் குறூப் நிருபர்)**



மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கனிய மணல் அகழ்வு குறித்து விசேட கலந்துரையாடலொன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று செவ்வாய்க்கிழமை (14) மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெலி ற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

மன்னார் மாவட்டத்தில் முறையற்ற விதத்தில் இல்மனைட் கனிம வள மண் அகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. மன்னார் மாவட்ட மக்கள் மத்தியில் இல்மனைட் மணல் அகழ்வுக்கு பாரிய எதிர்ப்புகள் இருந்தும் கூட அதற்கு எந்தத் தடையும் இன்றி கனிம வள மணல் அகழ்வுகள் தொடர்ந்து இடம் பெற்றுக்கொண்டிருப்பதாக மக்கள் முறைப்பாடு தெரிவித்துவருகின்றனர். இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடி சில முடிவுகளை எடுத்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

எனவே கலந்துரையாடல் ஒன்றுக்கான ஏற்பாடுகளை செய்து தருமாறும்,இக்கலந்துரையாடல் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமெனவும் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# மாங்குளம் வைரவர் ஆலய சங்காபிஷேகம்

**மாங்குளம் குரூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பனிக்கன்குளம் பாடசாலை வீதி ஞான வைரவர் ஆலய சங்காபிஷேகம் நேற்று சிறப்புற இடம்பெற்றது

பனிக்கன்குளம் ,பாடசாலை வீதி ஞான வைரவர் ஆலயம் புனரமைக்கப்பட்டு புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் 03.06.2022 அன்று சிறப்பாக இடம்பெற்றது. ஆலயம் புனரமைக்கப்பட்டு 01.06.2022 அன்று ஆலயத்தில் கிரியைகள் ஆரம்பமாகி 02.06.2022 அன்று எண்ணெய்க்காப்பு இடம்பெற்று 03.06.2022 அன்று புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக இடம் பெற்றது. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிசேகம் இடம்பெற்று 14.06.2022 நேற்று சங்காபிஷேகம் சிறப்பாக இடம்பெற்றது. சிவகுகக்குருக்கள்,சிவகுகநாதக்குருக்கள்,ஆகிய சிவாச்சாரியர்களினால் சங்காபிஷேகம் சிறப்பாக இடம் பெற்றது.

# கிழக்கின் குரல்



ஒரு மாதத்தில் அதிமான டெங்கு நோயாளர்கள்

## சாய்ந்தமருது டெங்கு அபாய பிரதேசமாக அறிவிப்பு

ஒலுவில் விசேட நிருபர்



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட சாய்ந்தமருது சுகாதார வைத்தியதிகாரி பிரிவு அதிகமான டெங்கு நுளம்பு பரவும் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

ஒரு மாத காலத்திற்குள் அதிகமான டெங்கு நோயாளர்கள் சாய்ந்தமருது சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் இனங்காணப்பட்டுள்ளதாகவும், டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் பொது மக்கள் மிக அவதானமாக செயற்படுமாறும் கேட்டுள்ளார்.

பொது நிறுவனங்கள் மற்றும் மதஸ்தலங்களில் அதிகமான டெங்கு நுளம்பு பரவும் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் மிகவும் அபாயமான நிலை ஏற்படுமெனவும் தெரிவித்தார்.

வீடுகள், நீர் கசிவு ஏற்படும் இடங்கள், மலசல கூடங்கள் போன்றவற்றிலும் டெங்கு நுளம்புகளின் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேசத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு டெங்கு நோயினால் பலர் இறந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

சில கிராம சேவகர் பிரிவுகள் சிவப்பு எச்சரிக்கை வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படுமாறும் இதனை மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுவினர், டெங்கொழிப்பு செயலணி, சமூக மட்ட தலைவர்கள் ஆகியோர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல் செய்யப்பட்டு வருவதாகவும் கூறினார்.

## அட்டாளைச்சேனை முல்லைத்தீவு சனசமூக நிலையக் கட்டடத்தின் அவல நிலை







ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

அட்டாளைச்சேனை முல்லைத்தீவு மீலாத் நகரில் அல் ஜெஸீறா வித்தியாலயத்திற்கு முன்னால் அமைந்துள்ள சனசமூக நிலையக் கட்டம் மற்றும் சிறுவர் பூங்கா நீண்டகாலமாக சேதமடைந்த நிலையில் புற்புதர்களுடன் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. இதனை புனரமைத்து மக்களின் பயன்பாட்டுக்கு வழங்குமாறு இப்பிரதேச மக்கள் விசனத்துடன் கோரிக்கை விடுகின்றனர்.

அட்டாளைச்சேனைப் பிரதேச சபைக்குச் சொந்தமான இவ்வரச கட்டடம் மற்றும் சிறுவர் பூங்கா ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம்.அஸ்ரபின் சிந்தனைக்கமைவாக அட்டாளைச்சேனையில் நடைபெற்ற தேசிய மீலாத் விழாவின் போது நிர்மாணிக்கப்பட்டு 1997.07.18ஆம் திகதி திறந்து மக்களின் பாவனைக்காக ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டடத்தின் கதவுகள், ஜன்னல்கள் உடைக்கப்பட்டும் தற்போது இல்லாமலும்,கூரை உடைந்த நிலையிலும் புற்புதர்களுடன் கவனிப்பாராற்று காட்சியளிப்பதுடன் அரச சொத்து வீண் விரையமாவதுடன் இங்கு இரவு வேளையில் கால்நடைகள் தங்கும் இடமாகவும் இன்றைய இளைஞர்கள் மதுபானம் உட்பட போதைப்பொருட்கள் பாவிக்கும் இடமாகவும் காணப்படுகிறது.

முல்லைத்தீவு அல் ஜெஸீறா வித்தியாலயத்திற்கு முன்னாள் அமைந்துள்ள சனசமூக நிலையக் கட்டம் மற்றும் சிறுவர் பூங்காவினை புனரமைத்து மக்களின் பயன்பாட்டுக்கு விரைவில் வழங்குமாறு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளினது கவனத்திற்கு இப்பிரதேச ஏழை மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

பொசன் பௌர்ணமி தினம்

## மட்டக்களப்பு சிறையில் 4 கைதிகள் விடுதலை

கல்லடி குறூப், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியினால் பொது மன்னிப்பின் அடிப்படையில் நேற்று (14) இலங்கையிலுள்ள சிறைகளில் இருந்து 173 சிறைக் கைதிகளை விடுவிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஏலவே தெரிவித்திருந்தார்.

இதன்படி, தண்டனை இரத்து ஊடாக 141 கைதிகளையும், 14 நாட்கள் தண்டனை காலம் குறைப்பின் ஊடாக 32 கைதிகளையும் விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைவாக மட்டக்களப்பு சிறைச்சாலையிலும் சிறைவாசம் அனுபவித்து வந்த 4 கைதிகள் நேற்று (14) காலை மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.எல்.விஜயசேகரவின் வழிகாட்டலில் பிரதான ஜெயிலர் ஆர்.மோகன்ராஜ் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், இவர்கள் நால்வரும் ஆண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.




காத்தான்குடி ஜாமிஅத்துல் பலாஹ் அரபுக் கல்லூரியின் 55 ஆவது பட்டமளிப்பு விழா (12) ஞாயிற்றுக்கிழமை கல்லூரியின் புதிய காத்தான்குடி வளாகத்திலுள்ள பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்ற போது. பட்டமளிப்பு விழாவில் 2020ஆம் ஆண்டு கற்கையை முடித்த 13 மௌலவிமாரும் 2021ஆம் ஆண்டு கற்கையை முடித்த 19 பேருமாக 32 மௌலவிமாருக்கு இதன் போது பலாஹி பட்டம் வழங்கப்பட்டதுடன் சான்றிதழும் வழங்கப்பட்டன. (படங்கள்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

## மட்டு. மாவட்டத்தில் 76 யானைகள் பலி

மட்டக்களப்பு குறூப் நிருபர்



மட்டக்ககளப்பு மாவட்டத்தில் யானைகளுக்கும் மனிதர்களுக்குமிடையிலான மோதல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. கடந்த ஆறு ஆண்டுகளில் இம்மாவட்டத்தில் 76 யானைகள் இறந்துள்ளதுடன் 149 யானைகள் காயமடைந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட காணி விவகாரங்களுக்குப் பொறுப்பான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்சனி தெரிவித்தார்.

இக்காலப் பகுதியில் காட்டு யானைகள் 660 சொத்துகளுக்கும் சேதத்தை உண்டு பண்ணியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

செங்கலடி பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட உன்னிச்சை 10ம் கட்டை கிராமத்தில் நீண்டகாலமாக இயங்கிவந்த கோழிப்பண்ணை காட்டு யானை தாக்குதலினால் முற்றாக மூடப்பட்டுள்ளது.குறித்த கிராமத்தில் யானைகளின் அட்டகாசம் தொடர்பாக அகில இலங்கை விவசாயிகள் சம்மேளன மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கே.யோகவேள் கருத்து வெளியிட்டுள்ளார்.

## கலாம் உலக சாதனையை வென்ற கேஷாந்தன் லிகேஷா

மணல்சேனை நிருபர்



இந்தியாவில் இயங்கும் கலாம் உலக சாதனை அமைப்பினால் இணைய வழிமூலம் கடந்த மூன்று மாதங்களுக்கு மூன்பு நடாத்தப்பட்ட மழலைச் செல்வங்களுக்கான போட்டி நிகழ்வில் பெரியநீலாவணையைச் சேர்ந்த கேஷாந்தன் சபேஜிதா தம்பதிகளின் ஒன்றரை வயதான புதல்வி லிகேஷா 251 வார்த்தைகள் 14 விலங்குகளின் ஒலிகள் போன்றவற்றை குறிப்பிட்ட நேரத்திற்குள் வேகமாக சொல்லி கலாம் உலக சாதனையை வென்று பெருமை செய்துள்ளார்.

இவர் 11 செயல்கள் 19 விலங்குகள் 13 பறவைகள் 16 உடல் பாகங்கள் 4 நிறங்கள் 5 பூக்கள் 31 உணவுகள் 12 பழங்கள் 9 கடவுள் பெயர், 12பூச்சிகள், 8 தலைவர்களின் பெயர்கள் 14 விலங்குகள் மற்றும் பறவைகளின் ஒலிகள் 83 பொதுவான பொருட்கள் 3 கொடிகள் 8 காய்கறிகள் 11வாகனங்கள் மற்றும் 6 வாகனங்களின் விளக்கம் மற்றும் 3 பொது அறிவு கேள்விகளுக்கு பதிலளித்துள்ளார்.

எமது நாட்டிற்கும் எமது மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளார். அயராது பாடுபட்ட இவரது பெற்றோர்களது விடா முயற்சியே இச் சாதனைக்கு வழிவகுத்திருக்கின்றது.

## மாமூலையை நோக்கி யாழ் – கதிர்காமம் பாதயாத்திரை



காரைதீவு குறூப் நிருபர்

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த யாழ் கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் கடந்த மூன்று தினங்கள் வற்றாப்பளையில் தங்கியிருந்தனர்.

கடந்த 04 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பித்த இப் பாதயாத்திரை 10 ஆவது நாள் இன்று (15) மாமூலையை நோக்கி பயணிக்கவுள்ளனர்.

கடந்த மூன்று நாட்களாக வரலாற்று பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில், வைகாசி திருக்குளிர்த்தி சடங்கு வரை தங்கியிருந்தனர்.

நேற்று 14ஆம் திகதி மீண்டும் பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டு ஊற்றங்கரை தங்கியது என பாதயாத்திரை பொறுப்பாளர்களான எஸ்.ஜெயராஜா, எஸ்.நந்தபாலா ஆகியோர் முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் இருந்து தெரிவித்தனர்.

என்னதான் பொருளாதார நெருக்கடி இருந்தாலும் வழிநெடுகிலும் முருகன் அருளால் ஆலயங்களும் மக்களும் தாராளமாக உணவளித்து உதவி செய்தனர்.

எவ்வித விக்கினமும் இல்லாமல் சந்தோஷமாக பாதயாத்திரையில் வருகிறோம். என இவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## மண்டூர் – குருமன்வெளி வாவிக்கு பாலம் அமைப்பது எப்போது?

அடிக்கல் நாட்டி நான்கு வருடங்கள் நிறைவு





மண்டூர் நிருபர்

மண்டூர் குருமன்வெளி துறை ஆயிரம் மீற்றர் நீளம்கொண்டதோடு ஆழமானதாகும். இற்றைக்கு பல நூற்றாண்டுகளாக இந்த மண்டூர் குருமன்வெளி துறையினூடாக எழுவான் கரையிலிருந்தும் படுவான்கரையிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் ஓடங்கள் மற்றும் வள்ளங்களைப் பயன்படுத்தி பயணங்களை மேற்கொள்வது வழக்கம்.

பயணங்களை மேற்கொள்ளும் போது வாவியில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அதிகமான சுமையினால் வள்ளங்கள் நடுவாவியில் மூழ்குவதுமுண்டு.

ஓடத்துறையினூடாக பயணிக்கும் மக்களின் நன்மை கருதி இயந்திரப் படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை அதே இயந்திரப்படகுச்சேவை செயற்பாட்டில் இருந்து வருகின்றது. ஆனால் இந்த இயந்திரப்படகு சேவை நிரந்தரமான தீர்வு இல்லை.


காரணம் பருவ மழை காலம் வந்தால் வெல்லாவெளி ஊடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டு விடும் அதேபோன்று கிட்டங்கி வீதி வழியான போக்குவரத்தும் தடைப்பட்டு விடும் மக்களின் போக்குவரத்திற்கு ஒரே வழி பாதை இந்த வாவியினூடான பயணமே.

பிரதேசத்தின் மக்களின் கனவினை நனவாக்கும் நோக்கில் கடந்த 2017ம் ஆண்டு தேசிய நல்லிணக்க அமைச்சின் மூலம் 140 கோடி ரூபா செலவில் மண்டூர் குருமன்வெளி பாலத்திற்கான அடிக்கல் நடப்படும் என அறிவிக்கப்பட்டது.

2018ம் ஆண்டு ஐப்பசி மாதம் 14ம் திகதி குறித்த வாவிக்கு முன்னால் ஐக்கிய தேசியக் கட்சியின் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல மற்றும் முன்னாள் ஐக்கிய தேசிய கட்சியின் பட்டிருப்பு தொகுதியின் அமைப்பாளர் சோ.கணேசமூர்த்தியின் வழிகாட்டலுடன் அடிக்கல் நாட்டப்பட்டது. இன்று நான்கு வருடங்கள் கடந்தும் எவ்விதமான வேலைத்திட்டங்களும் நடைபெறவில்லை. இந்நிலையில் இந்த வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கு என்னவானது என்பதே பிரதேச வாசிகளின் வினாவாகும்.

## இவரை காணவில்லை

றொட்டவெவ குறூப் நிருபர்



திருகோணமலை சிவாஜ் நகர் பகுதியில் வசித்து வந்த அப்துல் வஹாப் ராஹிமீன் என்பவர் காணாமல் போயுள்ளதாக அவரது உறவினர்கள் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த நான்காம் மாதம் முதல் இன்று வரைக்கும் அவரை உறவினர்கள் தேடி வந்த நிலையில் இன்னும் காணவில்லை எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். கிண்ணியாவிற்கு சென்று வருவதாக கூறிவிட்டு சென்றவர் இன்றுவரை வீட்டுக்கு வரவில்லை எனவும் இவர் தொடர்பிலான தகவல் தெரிந்தால் தம்பலகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கோ 0718591192 அல்லது 076 023 3478 எனும் இலக்கத்திற்கு அறிவிக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தம்பலகாமத்தில் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கான சந்தை

தம்பலகாமம் குறூப் நிருபர்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலகம் இணைந்து நாளை 16 ஆம் திகதி காலை 9.00 3.30pm வெளிநாட்டு பணியகத்தின் திருகோணமலை கிளையில் (4ம் கட்டை, கச்சேரிக்கு அருகில்) வெளிநாட்டு தொழிற் சந்தை (job marketing) ஒன்றை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது .

மேலும் இந் நிகழ்வில் 10 ற்கும் மேற்பட்ட முகவர் நிறுவனங்கள் (Agency), பணியக உயர் அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர் என தம்பலகாமம் பிரதேச செயலக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவு தெரிவிக்கிறது. மேலதிக தகவல்களுக்கு B.M Dilsath Fedo 0763060737, J.Krishanthini Fedo 0760103921 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நகர்வலம்



இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரம்

## விவசாயிகளுக்கு ரூ. 10 ஆயிரத்துக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் யூரியா உரத்தினை அடுத்த மாத முதல் வாரமளவில் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் அதேநேரம், இறக்குமதி செய்யப்படும் யூரியா உரத்தினை விவசாயிகளுக்கு பத்தாயிரம் ரூபாவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே (13) அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், எதிர்வரும் பெரும் போகத்திற்கு தேவையான உரத்தினை விவசாயிகளுக்கு தாமதமின்றி வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



பெரும் போகத்தின் பின்பு எமது நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட மாட்டாது. நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் உள்ள நெல்லை அரிசியாக்கி ஒரு கிலோ கிராம் அரிசியினை இரு நூறு ரூபாவிற்கும் குறைந்த விலையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் மற்றும் ஏனைய விற்பனை நிலையங்களினூடாக அரிசியினை குறைந்த விலையில் பொது மக்களுக்கு வழங்கி வருகிறோம். நாட்டினுள் போதியளவு நெல் தொகை இருப்பதினால் தேவைக்கு மேலதிகமாக நெல் மற்றும் அரசியினை சேகரிப்பதற்கு எவ்வித தேவையுமில்லை.

நாட்டின் தற்போதைய உண்மை நிலைமை தொடர்பாக நாம் தெரிவித்ததினை தொடர்ந்து ஒருசிலர் அச்சத்தின் காரணமாக நெல் மற்றும் அரிசியினை கொள்வனவு செய்வதற்கு ஆரம்பித்தனர். யாரும் இது தொடர்பாக அச்சம் கொள்ளத் தேவையில்லை.

யாராவது நெல்லை களஞ்சியப்படுத்தி வைப்பார்களேயானால் அவற்றை சந்தைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். எதிர்வரும் தினங்களில் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளினை ஈடுபடுத்தி நெல்லை பதுக்கி களஞ்சியப்படுத்தியுள்ள இடங்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

பதுக்கி வைத்துள்ள நெல் தொகைகளை சந்தைக்கு விநியோகிப்பதற்காக தேவை ஏற்படின் அவசரகால சட்டத்தினை மக்களின் நலன் கருதி பாவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நாம் உண்மையினை மக்களுக்கு கூறியதினால் மக்கள் தற்பொழுது விவசாயத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## சீனன்கோட்டை 'பத்தை'யில் மோட்டார் சைக்கிள் திருட்டு

### சிசிரீவி பதிவின் அடிப்படையில் விசாரணை



பேருவளை, சீனன் கோட்டை பத்தை மாணிக்கக் கல் வர்த்தக சந்தையில் மாணிக்கக்கல் வர்த்தகம் மேற்கொள்ளும் ஒருவரின் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. இந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை நடந்துள்ளதோடு இது தொடர்பான சீசீரிவி பதிவுகளின் உதவியுடன் பேருவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவ தினம் காலை 11.45 மணியளவில் மோட்டார் சைக்கிள் உரிமையாளர் தனது வாகனத்தை நிறுத்தி விட்டு மாணிக்கக் கல் வர்த்தகத்திற்காக சென்றுள்ளார். 12.20 மணியளவில் வாகனம் திருடப்பட்டுள்ளதோடு அருகில் உள்ள கடையொன்றில் உள்ள சீசிரிவியில் இது பதிவாகியுள்ளது. தான் நீண்டகாலமாக மாணிக்கக் கல் வர்த்தகத்தில் ஈடுபடுவதாகவும் அண்மைக்காலத்தில் இவ்வாறான மோட்டார் சைக்கிள் திருட்டுகள் பத்தை சந்தையில் நடைபெறவில்லை எனவும் சைக்கிள் உரிமையாளர் அஸ்லம் தெரிவித்தார்.மிதிவண்டிகள் திருடப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

பத்தை மாணிக்க சந்தை கூடும் தினங்களில் அதிகமான வர்த்தகர்கள் தமது வாகனங்களில் இங்கு வருவதோடு மாணிக்கக் கல் கொள்வனவு செய்யும் பாசாங்கில் சிலர் திருட வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பேருவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (பா)

சீனன்கோட்டை ஜாமியதுல்

## பாஸிய்யா கலாபீடத்தின் தலைப்பாகை சூடும் விழா

பேருவளை சீனன்கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தின் 4வதும், 5வதும் தலைப்பாகை சூடும் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை (18) இரவு சீனன் கோட்டை பாஸியா பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது.

131 வது வருட மனாகிபுஷ் ஷாதுலி தமாம் மஜ்லிஸ் நடைபெறவுள்ள மேற்படி தினத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளதாக விழா ஏற்பாட்டுக்குழு சார்பில் பர்ஸான் முர்ஸி தெரிவித்தார்.

இந்நிகழ்வில், சீனன்கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் உட்பட நிர்வாக சபை உறுப்பினர்கள், உலமாக்கள், குலபாக்கள், உஸ்தாத்மார்கள், ஸாதாத்மார்கள் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு தலைப்பாகை சூடி வைக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பணம் அச்சிட்டு அரச ஊழியருக்கு சம்பளம் வழங்குவதை நிறுத்துக

### ஐ.ம.ச அமைப்பாளர் ராம் கோரிக்கை



அரசாங்கம் பணம் அச்சிட எடுத்திருக்கும் தீர்மானத்தால் பொருட்களின் விலை மேலும் அதிகரித்து பணவீக்கமும் அதிகரிக்கும். அரச ஊழியர்களுக்கு பணம் அச்சிட்டு சம்பளம் வழங்குவதைவிட சம்பளம் வழங்காமல் இருக்கலாம். அதனால் அரசாங்கம் பணம் அச்சிடும் தீர்மானத்தை கைவிடவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி வடகொழும்பு பிரதான அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான சீ.வை.பி ராம் தெரிவித்தார்.

பொருளாதாரத்தை முன்னேற்ற பணம் அச்சிடுவது எந்தவொரு நாட்டினதும் கொள்கையாக இருக்க முடியாது. உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து ஏற்றுமதிகளை அதிகரிப்பதன் மூலமே பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தலாம். ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பிரதானமாக இருக்கவேண்டியது பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையாகும்.

மேலும் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு பணம் அச்சிடுவதைத் தவிர வேறு வழியில்லை என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார். பணம் அச்சிட்டு அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதைவிட சம்பளம் வழங்காமல் இருக்கலாம். ஏனெனில் பணம் அச்சிடுவதால் ஏற்படும் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக அவர்களின் சம்பள பணத்துக்கு பெறுமதி இல்லாமல் போகும். இதனால் ஏனைய மக்களும் பாதிக்கப்படுவார்கள்.

மக்கள் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு இல்லாமல் வீதிகளில் காத்துக்கொண்டிருக்கின்றனர். கொழும்பில் சில பிரதேசங்களுக்கு பல நாட்களாக சமையல் எரிவாயு விநியோகிக்கவில்லை. அதனால் அந்த மக்கள் இரண்டு நேரம் மாத்திரம் சாப்பிடும் நிலையில் இருக்கின்றனர் என்றார்.

இந்திய உதவி நிவாரண பொருட்கள்

## மாத்தறை மாவட்ட சமுர்த்தி குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிப்பு

**(மாத்தறை தினகரன் நிருபர்)**

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்தியாவில் இருந்து வழங்கப்பட்ட நிவாரண பொருட்கள் மாத்தறை மாவட்டத்திலுள்ள மக்களுக்கு கிடைத்திருப்பது பெரும் வரப்பிரசாதமாகும் என்று மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர் வை. விக்கிரமசிறி தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து வழங்கப்பட்ட இலவச உணவுப் பொருட்களை மாத்தறை மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு (12) பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்தியாவின் உதவியின் கீழ் கிடைக்கப்பெற்ற உணவுப் பொருட்களின் முதலாவது தொகுதி மாத்தறை, தெவிநுவரை, மாலிம்மடை, அக்குரஸ்ஸ, வெலிபிடிய, வெலிகம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன. 5,26,420 கிலோ அரிசியும் 2060 கிலோ பால்மாவும் இவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மாத்தறை – கடவத்ஸதர பிரதேச செயலகப் பிரிவில் அரிசி 1,13,700 கிலோவும் பால்மா 400 கிலோவும் இவ்வாறு வழங்கப்பட்டன. அதேபோல் இரண்டாவது தொகுதி பொருட்களும் விரைவில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அநுராதபுரத்தில் நன்னீர் மீன் விலை அதிகரிப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுர மாவட்டத்தின் அநேகமான பிரதேசங்களில் நன்னீர் மீனின் விலைகள் தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளதாக மீன் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். 1 கிலோ நாநூறு ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த மீன், தற்பொழுது அறுநூறு ரூபாவாக உயர்வடைந்துள்ளது. பாரிய நீர்த்தேக்கம் அமைந்துள்ள பகுதிகளிலும் இதே நிலைதான் காணப்படுகின்றது.

இம்மாவட்டத்தின் நாச்சியாதீவுப் பகுதியில் அறுநூறு ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கரையொதுங்கும் ஆமைகள்



கடந்த சில நாட்களாக கல்கிசை, அங்குலான, பாணந்துறை கடற்கரைகளில் பல ஆமைகள் கரையொதுங்கியுள்ளதோடு கடந்த 48 மணித்தியாலங்களில் பாணந்துறை கடற்கரையில் சுமார் 25 கிலோ எடையுள்ள இரண்டு ஆமைகள் கரையொதுங்கியுள்ளன.

ஆமைகள், திமிங்கிலம், டொல்பின் போன்ற உயிரினங்கள் கரையொதுங்கினால் அவற்றை புதைக்காமல் 1992 அவசர இலக்கத்தின் ஊடாக வனவிலங்கு அதிகாரிகளுக்குத் தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## உடுகொட அறபாவில் புதிய வகுப்பறை கட்டம் திறப்பு





**(அஷ்ரப் ஏ சமத்)**

கம்பஹா மாவட்டத்திலுள்ள உடுகொட அறபா மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டாம் மாடி வகுப்பறை கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள குவைத் தூதரகத்தின் ஒருங்கிணைப்பில் மறைந்த குவைத் நாட்டைச் சேர்ந்த பரோபகாரி அஹமட் சாலிஹ் கந்தானி அவர்களின் நன்கொடை நிதியத்தின் கீழ் மேற்படி பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட 2 மாடி வகுப்பறைக் கட்டிடத்தின் மேல் மாடி வகுப்பறைகளே இவ்வாறு திறந்துவைக்கப்பட்டன்.

பாடசாலை அதிபர் எம்.எம்.ஏ அலீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் குவைத் நாட்டின் இலங்கைத் தூதுவவர் சார்பாக அவரின் பிரதிநிதியும் குவைத் தூதரக அதிகாரியுமான பிரதம அதிதி அஷ்ஷெய்க் எம்.எம்.எம் பிர்தெளஸ் (நளீமி), இத்திட்டத்தின் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.ஏ. நூருல்லாஹ் (நளீமி) ஆகியோர் இணைந்து இக்கட்டிடத்தினை திறந்துவைத்தனர்.

## மண்ணெண்ணெய்க்கு நீண்ட வரிசை



நாத்தாண்டிய தேர்தல் தொகுதியிலுள்ள கொஸ்வத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய்யைப் பெற்றுக் கொள்வதற்காக நேற்று (14) காலை 5 .00 மணியிலிருந்து பொதுமக்கள் நீண்ட கியூ வரிசையில் காத்திருந்தபோது பிடிக்கப்பட்ட படம்.

(படம்: நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

## தென் மாகாண வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சி வழங்க நடவடிக்கை

**(மாத்தறை தினகரன் நிருபர்)**

தென் மாகாணத்திலுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு ஜப்பானிய மொழியுடன் மேலும் இரண்டு பாடநெறிகளில் தொழில் பயிற்சி அளிப்பதற்கு இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக இச்சபையின் தென் மாகாணப் பணிப்பாளர் நிமலசிறி விதான கமகே தெரிவித்தார்.

ஆறு மாதம் கொண்ட இப்பயிற்சி நெறிக்கு தென் மாகாணத்தைச் சேர்ந்த 19 வயது தொடக்கம் 35 வயது வரையுள்ள இளைஞர் யுவதிகள் விண்ணப்பிக்க முடியும்.

அஹங்கம ஹோட்டல் பாடசாலையில் ஜப்பானிய மொழிப் பயிற்சியும் உணவுப் பொறிமுறைப் பயிற்சியும் வழங்கப்படும். மேலும் ஹிக்கடுவ தொழிற் பயிற்சி நிலையம், பத்தேகம் தொழிற் பயிற்சி நிலையம், மெதமுலான தொழிற் பயிற்சி நிலையங்களிலும் ஜப்பானிய மொழிப் பயிற்சி வழங்கப்படவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.



பொசன் தினத்தை முன்னிட்டு சமூக சேவையாளர் ஹாசிப் அஸ்லாம் தான் தனவந்தவர்கள் மூலம் சேகரித்த பணத்தைக்கொண்டு கொழும்பு கிருல வீதியிலமைந்துள்ள அக்போத்தி தோட்ட மக்களுக்கு 300 உணவு பொதிகளை வழங்கினார். 4வது வருடமாக இச்சேவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புத்தளம், முந்தலில் இரத்ததான முகாம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

முந்தல் புளிச்சாக்குளம் பகுதியில் மனித நேயம் பேணும் இரத்ததான முகாமொன்று புதுக்குடியிருப்பு கிளினிக் சென்டரில் அண்மையில் நடைபெற்றது.

புத்தளம் மாவட்டம் முந்தல் பிரதேச செயலகம் புளிச்சாக்குளம் கிராம சேவகர் பிரிவு புதுக்குடியிருப்பு கிராமத்தில் முந்தல் பிரதேச செயலகம் அஸ்ஸபா பௌவுன்டேஷன் மற்றும் வேல் விஷன் என்பன குறித்த இரத்ததான நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.



'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முந்தல் பிரதேச செயலாளர் உட்பட, உலமாக்கள், ஊர்ப்பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள், அஸ்ஸபா உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் 68 பேர் இரத்தம் தானம் செய்ய முன் வந்து 40 பேர் தமது இரத்தத்தை தானம் செய்தது டன், கலந்து கொண்டோருக்கு சான்றிதழ், உலர் உணவு பொதிகள் என்பனவும் வழங்கப்பட்டன.

## புத்தளம் காஸிமிய்யாவில் புதுமாணவர் வரவேற்பு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரிக்கு புதிதாக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான வரவேற்பு வைபவம் ஞாயிற்றுக்கிழமை (12) கல்லூரியின் மர்ஹூம் மஹ்மூத் ஹஸரத் மண்டபத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது.

இதில் புதிய மாணவர்களின் பெற்றார், காஸிமிய்யாவின் உப அதிபர் அஷ்ஷெய்ஹ்க் எம்.எச்.எம். மர்சூக் மக்கி உட்பட உஸ்தாத்மார்களும் ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர்.

கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் தலைமையில் நடைபெற்ற இச்சிறப்பு வைபவத்தில் அஷ்ஷெய்க் ஏ.ஓ.அப்துல் கஹ்ஹார் (காஸிமி, மதனி) விசேட உரையாற்றினார்.



# சமூகத்தில் ஒதுக்கப்படும் தொழுநோயாளர்களை குணப்படுத்த போராடும் பெண்

**தொழுநோய் என்றால், அனைவரின் பார்வையும் சற்று அந்நியமாகத் தான் இருக்கும். இதனால்தான், ஒவ்வொரு வருடமும் மகாத்மா காந்தியின் வீரமரணத்தினை நினைவு கூரும்பொருட்டு, ஜனவரி மாதம் 30ஆம் திகதி தொழுநோய் ஒழிப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.**

**இத்தொழுநோயாளர்களை தள்ளிவைக்கும் சமூகத்திற்கு எதிராக அன்பின் வடிவான அன்னை தெரேசா, மகாத்மா காந்தி ஆகியோர் குரல் கொடுத்திருந்தனர். இந்த வகையில், அன்னை தெரேசா கூறியதாவது, 'தொழுநோய் என்பது பெரிய வியாதி அல்ல. ஆனால், அது குறித்த எண்ணம்தான் மனிதர்களைத் தேவையில்லாமல் கவலை கொள்ள வைக்கிறது' என்றார்.**

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி இன்பராசா சஹானா, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, அநுராதபுரம் உள்ளிட்ட பிரதேசங்களில் தொழு நோய் தொடர்பான விழிப்புணர்களை அதிகமாக கிராமப் புறங்களில் செய்து மக்களை விழிப்படையச் செய்வதிலும் இந்நோயில் இருந்து பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.**

**இவர் இது தொடர்பான அனுபவங்களை தினகரனுடன் பகிர்ந்து கொண்டதில்.....**

**இலங்கையை அச்சுறுத்தும் தொழு நோயாளர் குறித்து கவனம் செலுத்தி மனிதாபிமான சேவைகளில் ஈடுபாடு காட்டி வரும் நீங்கள் வடபுலத்தில் இதன் பணிகள் தொடர்பில்..**

ஆரம்பத்தில் வட மாகாணத்தில் மொழு நோய்க்காக சேவையாற்றிய அமைப்பு காவேரி கலாமன்றம் தான் என்று சொல்ல வேண்டும். இங்கு தொழு நோயாளா களைக் கண்டு பிடித்து முதல் மருந்தெடுக்க அனுப்பியவர்கள் அவர்கள்தான். அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் செய்தார்கள். அவர்களுக்கு தேவையான வீட்டுத் தோட்ட செய்கையை உண்டு பண்ணிக் கொடுத்தார்கள். அந்தந்த நேரங்களில் அவர்களுக்கு சத்தான சாப்பாடுகள் கொடுக்க வேண்டும். அவர்களுடைய சாப்பாட்டுத் தேவையை நிறைவு செய்து கொடுத்தார்கள். அவர்கள் தொடர்ச்சியாக மருந்து குடிக்கின்றார்களா என்று பார்த்து பராமரித்து வந்தார்கள். ஒருவருக்கு வந்தால் மற்றவர்களுக்கு இருக்கிறதா என்று பரிசோதனைகள் மேற்கொள்தல் போன்ற நடவடிக்கைகளை 20 வருடங்களாக மேற்கொண்டுள்ளார்கள்.



1998 ஆம் ஆண்டில் இருந்து தான் இந்த தொழு நோயாளர்களுக்கான சமூகப் பணி ஆரம்பிக்கப்பட்டது. வணக்கத்திற்குரிய டி. எஸ். யோசுவா ஒரு நாடகக்கலைஞர். அவர் பிள்ளைகளை நடிக்க வைத்து தெரு நாடகங்கள் மற்றும் தெருக் கூத்துக்கள் அரங்கேற்றி விழிப்புணர்வு மேற்கொண்டார். காவேரி கலாமன்றம் ஊடாகத் தான் தொழு நோயாளர் விழிப்புணர்வு வேலைத் திட்டம் முதலில் தோற்றம் பெறுகின்றது.

அதற்குப் பின்னர் 2017 செப்டம்பர் 27 ஆம் திகதி எங்களுடைய மாற்றத்திற்கான மக்கள் சபை என்று தொழுநோயாளர் சங்கம் உருவாக்கப்பட்டது. இதன் முதலாவது தலைவராக நாகமணி பொறுப்பேற்று நடத்தினார். அதன் பின்னர் வவுனியாவைச் சேர்ந்த அமரசிங்க தலைவர் பொறுப்பை ஏற்றார்கள். கிட்டத்தட்ட 200 க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் எங்கள் சங்கத்தில் இருக்கிறார்கள். 2019 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக மாறியது. வடக்கு கிழக்கு இரண்டு மாகாணங்களையும் விட வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் புதிதாக நாங்கள் காலைப் பதித்துள்ளோம். இப்பொழுது நாங்கள்' யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, அநுராதபுரம், கிளிநொச்சி போன்ற ஐந்து மாவட்டங்களிலும் வேலைத் திட்டங்களை செய்து வருகின்றோம்.

எனினும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையிலும் வருடத்திற்கு 20 பேர் அளவில் புது நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனால் கடந்த வருடம் மட்டக்ககளப்பு மாவட்டத்தில் மாத்திரம் 110 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரத் தகவல் பிரிவினரின் புள்ளி விபரங்கள் தொரிவிக்கின்றது. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து இதுவரை 30 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவற்றுள் 18 நோயாளிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



அதேவேளை அநுராதபுர மாவட்டத்திலும் கடந்த வருடம் சுமார் 84 பேர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்திலும் இந்நோயாளர்கள் அதிகாரித்துக் காணப்படுகின்றனர்.வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பெரியளவு தாக்கம் இல்லை. 20 பேர் அளவிலேயே அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

**இந்த நோய் தொடர்பில் சிறு குறிப்பு?**

